# கிராம நலம்

மே 1967





தமிழ் வெளியீட்டுக் கழக நூல்கள் வெளியீட்டு விழா
(சென்னை — 14-4-67)



சட்டச் சொற்கள் அகராதி — முதல் பகுதி வெளியீட்டு விழா
(சென்னை — 14-4-67)






மதுரை–இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான புதிய நீதி மன்றக் கட்டட அடிக்கல் நாட்டு விழா

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"


# கிராமநலம்

கதிர் 12 மே 1967 நெல் 8


# தமிழ் அன்னைக்கு

தமிழகத்தின் தலைநகரிலே, இவ்வாண்டு தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் தனிச்சிறப்பு வாய்ந்த மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கோட்டையில் "தமிழக அரசு தலைமைச் செயலகம்" ஒளிப் பெயர்ப் பலகைத் திறப்புவிழா, இராஜாஜி மண்டபத்தில் தமிழ் நூல்கள் வெளியீட்டு விழா, சட்டச் சொற்பொருட் களஞ்சியம் முதற்பகுதி வெளியீட்டு விழா ஆகிய இம் மூன்று நிகழ்ச்சிகளும் வண்ணத் தமிழின் சிறப்பை வானளாவ உயர்த்தின.

"உயிரை, உணர்வை வளர்ப்பது எது?" என்ற கேள்விக்கு "தாய்மொழியே" என்பது, உலகப் பேரறிஞர்களின் ஒருமுகமான தீர்ப்பு. தமிழகத்தில், சமுதாயத்தின் உயிரையும் மக்களுடைய உணர்வையும், உள்ளும் புறமுமாகப் பேணிக் காப்பது, நமது தாய்மொழி. தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் 'உள்ளொளி பெருக்கி' புறவிருளை நீக்க உதவுவதோடு, தமிழன்னையின் திருவடிகளில் தனிச் சிறப்புள்ள அணிகலன்களையும் புதிய காணிக்கைகளையும் உள்ளன்போடு படைத்தன.

மூன்று நிகழ்ச்சிகளிலும், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, இலக்கியச் செறிவும் கருத்தாழமும் கொண்ட சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். தமிழ் நூல் வெளியீட்டு விழா, டில்லியில், இந்திய அமைச்சரவையின் சார்பில், ஆண்டுக்கொருமுறை நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென, விழாவுக்கு வருகை தந்திருந்த இந்திய அரசின் கல்வி அமைச்சரை முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் முதலமைச்சர் ஆற்றிய சொற்பொழிவின் சாரத்தைக் கீழே காணலாம்.

—ஆசிரியர்]

## ஒளி மகுடம்... நெஞ்சை அள்ளும் நூல்மாலைகள்... கலைச்சொல் காணிக்கை...

"தமிழ் மீது, நாம் பற்று வைப்பது, இயற்கை நியதியாகும். ஆனால் அதற்கு மேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற வேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது. இதனால் தான், துணை வேந்தர் மீனாட்சி சுந்தரனார் சொன்னபடி, கடவுள் தன்மைக்கு ஒப்பாக, மொழியைக் கருதுகிறோம்.

---

முதல் அட்டைப்படம்:

வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவப் படம், இவ்விதழ் மேலட்டையை அணி செய்கிறது. திருவள்ளுவர் திருநாளை ஒட்டி, மே மாதம் 24-ம் தேதி, பொது விடுமுறை நாளாக, தமிழக அரசு அறிவித்துள்ளது.

கடைசி அட்டைப்படம்:

சென்னைக் கோட்டையில், 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' ஒளிப் பெயர்ப் பலகையை, தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார். அவ்விழாவில், அமைச்சர் கருணாநிதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

அதே நாளில், அரசு பஸ்கள் எல்லாவற்றிலும் 'தமிழக அரசு போக்குவரத்து' என்று தமிழில் எழுதப்பட்டது.

ஒருவர் இன்னொரு மொழியை, தாழ்வாகக் கருதக்கூடாது. அதுமட்டுமல்ல, அரசாங்கம், தங்கள் மொழியைத் தாழ்வாகக் கருதுகிறார்களே என்ற எண்ணம், யாருக்கும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், அந்த அரசினரின் மாண்புக்கு, மிகுந்த சிறப்பு ஏற்படும். எல்லோரும் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு மொழிப் பிரச்னையில் அரசினரின் நடவடிக்கை இருக்க வேண்டுமென்று விரும்புகிறேம்.

### டில்லியில், தமிழ் நூல் வெளியீட்டு விழா

இக்காரணத்தினுலேயே, இந்த நூல் வெளியீட்டை, நாம் இங்கே வெளியிடுவது மட்டுமின்றி, கல்வியமைச்சர் அவர்கள் இந்திய அமைச்சரவைக்கு எடுத்துச் சொல்லி, ஆண்டுக்கு ஒரு தடவையாவது, டில்லித் தலைநகரிலே, இவ்விதமான தமிழ் வெளியீட்டு விழாவை நடத்தும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழில் உள்ள பற்றைக் குறித்து, நான் சென்னை நகரத்தில் பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர், பல்வேறு துறைகளில் உள்ளவர்களுடன் கூடிப்பேச வாய்ப்புக் கிடைத்தது. அக் கூட்டத்தில் என்னுடைய நண்பர்களான திருவாளர்கள் சுப்பையா, பெரியார், ராஜாஜி, ம.பொ.சி., திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் மற்றும் தமிழ் அறிஞர்கள் கூடி இருந்தபோது, தமிழ் மொழியைப்பற்றி பேச்சு வந்தது. அப்பொழுது " தமிழ்ப் பற்று தேவை " என்று சொன்னர்கள். அப்பொழுது பெரியார் சொன்னர்: " பற்று இருக்கலாம், வெறி இருக்கக் கூடாது" என்று. இது விவாதத்தில் கொண்டுபோய் விடும் என்று பயப்பட்ட ராஜாஜி அவர்கள் சொன்னர்: "எது பற்று, எது வெறி என்பது, அவரவர்களைப் பொறுத்ததே தவிர, இன்னொருவர் சொல்ல முடியாது. உதாரணமாக, என்னுடைய மகன், ஒரு பெண்ணைக் காதலித்துக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று பிடிவாதம் செய்தால், அது எனக்கு வெறியாகத் தெரியும். அவன் அதை அன்பு என்று சொல்லுவான். இதில், பற்று எது, வெறி எதுவென்பதை, நாம் தீர்மானிக்கக்கூடாது. அது அவரவர்களே முடிவு செய்துகொள்ள வேண்டிய விஷயம் " என்று அவர் சொன்னர்.

### பற்றும் வெறியும்

உள்ளபடியே அங்கேயிருந்த அனைவரும், மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். இந்தச் சிக்கலான பிரச்னைக்கு எளிதில் விளங்கும் வகையில் விளக்கம் கொடுத்ததில், எல்லோருக்கும் வியப்பு. மிகச் சிக்கலான பிரச்னையை, நிரம்பச் சுவையுடன் விளக்கியதுடன், 'இந்த வயதில் இந்த உதாரணத்தைச் சொன்னரே' என்று, நானும் வியப்படைந்தேன். இப்படி ராஜாஜி அவர்கள், பற்று என்பதற்கும், வெறி என்பதற்கும், அடிப்படையை விளக்குகிருர்.

நாம் செய்யக்கூடிய காரியங்களைத் தமிழ்ப்பற்று அல்ல, வெறி என்று சொல்வார்களேயானல், அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பற்று வேறு எதையும் அழிப்பதற்காக ஏற்பட்டிருக்கிற பற்று அல்ல. வேறு மொழியிடத்திலே, பகைமை பாராட்ட ஏற்பட்ட பற்று அல்ல. இந்தியாவில் உளள பல்வேறு மொழிகளும் ஒரே சீராக வளர்ந்து வளம் பெற்றால்தான், இந்தியாவுக்குப் பெருமை ஏற்படும். ஒரு மொழியை அழித்தோ, அல்லது அதன் மதிப்பைக் குறைத்தோ, வேறு ஒரு மொழியை மேலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று எண்ணினுல், அது நடக்கக்கூடிய காரியமல்ல.

நான் சில நாட்களுக்கு முன்னுல் டில்லியிலிருந்த நேரத்தில், மொழிப் பிரச்னை சம்பந்தமாக புதிதாகக் கொண்டுவரப்படவிருக்கும் சட்டத்தைப் பற்றி உள்துறை அமைச்சர் திரு சவான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் மகிழ்ச்சியடைவேன் என்று என்னிடம் சொன்னர்: "இன்னின்ன நிலையிலே இந்தி ஆதிக்கம் குறைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, ஆங்கிலம் தேவைப்படுகின்ற காலம் நீடிக்கப்படும்" என்பவற்றையெல்லாம் சொல்லிவிட்டு, "கொண்டு வருகின்ற சட்டத்தில், இந்தியும் மற்ற மொழிகளும் வளர்வதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சட்டத்தில் இருக்கிறது" எனச் சொல்லி,

---

### நாடாளு மன்றம்

"டிசம்பர் முதல் ஜனவரி வரை, பொதுத் தேர்தல் இருந்த நேரத்தில், நாங்கள் எல்லாம் பேசுகின்ற பொழுது, "பார்லிமெண்டை" "பாராளுமன்றம்" என்று சொல்லிவந்தோம். அப்போது, அதை ஒரு கூட்டத்தில் கேட்டுக்கொண்டிருந்த ராஜாஜி அவர்கள், தன் கருத்தைச் சொன்னர்கள்: "பார்லிமெண்ட் என்ற ஆங்கிலப் பதத்திற்கு 'பாராளுமன்றம்' என்ற தமிழ்ப் பதம் அவ்வளவு பொருத்தமானது அல்ல. வெள்ளைக்காரன்தான் பாரை ஆண்டான். அதற்கு வேண்டுமானல் பாராளுமன்றம் என்ற பெயர் பொருந்தலாம். இதற்கு அப் பெயர் வைக்கவேண்டாம். நாம் எந்தப் பாரையும் ஆளவில்லை. 'நாடாளு மன்றம்' என்று சொல்லுங்கள்" என்றார். நல்ல ஒரு தமிழ்ப் பதம் கூர்த்த மதியுள்ளவரிடத்திலிருந்து, தானுகக் கிடைத்தது.

அப்போது, நான் அதற்குச் சொன்னேன். "உடனடியாக பாராளுமன்றத்தை மாற்றி நாடாளுமன்றம் என்று நான் சொன்னல் "இவன் பாராளுமன்றத்துக்கு நிற்கவில்லை போலிருக்கிறது ஏதோ நாடாளு மன்றத்திற்கு நிற்கிறான் போலிருக்கிறது" என்று சொல்லி விடுவார்களோ என்றெண்ணி, தேர்தல் வரையிலே, பழையபடியே கூறி, அதற்குப் பிறகு "நாடாளுமன்றம" என்ற வார்த்தையை மக்களிடத்திலே பயன்படுத்தி வருகின்றோம். அடுத்த தேர்தல் நாடாளு மன்றத்திற்குத்தான் நடக்கும். இப்படிப் பல புதிய சொற்களை உண்டாக்க வேண்டும்."

[தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் முதலமைச்சர் பேச்சு]

என்னை மகிழ்ச்சியோடு உற்றுப் பார்த்தார். நான் பதில் சொல்லும்போது, 'இந்தியும் இதர மொழிகளும்' என்று இருப்பதை, என் பகுதியில் மட்டுமல்லாமல், வங்கம் மராட்டியம், குஜராத்தி பேசும் மக்களும் வெறுப்பார்கள் என்றும், எல்லா தேசீய மொழிகளின் வளர்ச்சிக்கு வழி செய்யப்படும் என்று, பொதுப்படையாகயிருக்க வேண்டும்'' என்று கூறினேன். இந்தக் கருத்தை கவனிப்பதாகச் சொன்னார்.

### பல மலர்கள் செடியில் இருக்க வேண்டும்

ஒரு மலர்ச் செடியின் கிளைகளிலுள்ள இலைகள் உதிர்ந்து ஒரே ஒரு மலர் மட்டும் இருந்தால், அது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தாது. பல மலரும் அந்தச் செடியிலிருந்தால்தான், மணமும் மகிழ்ச்சியும் ஏற்படும். அதுபோல, இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளும் ஏற்றம் பெறவேண்டும். அதிலும், நெடுங்காலத்திற்கு முன்பே ஏற்றம் பெற்றிருந்த தமிழ் மொழி மதிப்புப் பெறவேண்டும் என்று எண்ணுவது பொருத்தமானதும், தேவையானதுமாகும்.

ஒரு முறை டில்லியிலே நான் பேசுகிற சமயத்தில், என்னைக் குறுக்குக் கேள்வி கேட்டார்கள். '' தனித் தமிழிலே பேசுவதில், என்ன சுவை ?'' என்று கேட்டார்கள். நானும் அவர்களும் அமர்ந்திருந்த இடம் ராஜ்ய சபை, அதாவது மேலவை, நான் சொன்னேன் : '' கவுன்சில் ஆப் ஸ்டேட் '' என்று ஆங்கிலத்தில் இருந்ததற்கு '' ராஜ்ய சபை என்ற பெயரை இட்டு, என்னத்தைக் கண்டீர்கள் ?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், " இது ஒரு வகையான இன்பம் '' என்றார்கள். அதைப்போல், தங்களுடைய மொழி தம்முடைய ஒவ்வொரு துறையிலேயும் அது பயன்படுத்தும்போது, அந்த மொழிக்கு உரியவர்கள், பிறர் யாரும் புரிந்து கொள்ள முடியாத இன்பத்தைப் பெறுகிறார்கள். 'என்ன இன்பம்' என்றால் எப்படிச் சொல்ல முடியும் ? அனுபவித்து உணரவேண்டிய இன்பம் இது. இந்தியப் பேரரசில் ஓர் அங்கமாக விளங்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் தாய்மொழி வளர்ச்சியில் பங்கு அளிப்பதின்மூலம் தனிப் பெருமையும், தனிப் பெருமிதமும் காண்பதே இயற்கை.

### கற்கண்டுச் சாற்றின் இனிமை

கரும்பைச் சுவைக்க ஒரு துண்டை வெட்டி, மென்று தின்றால், கொஞ்சம் சுவை கிடைக்கும். அந்த கரும்பைச் சாறாக்கி, காய்ச்சி கற்கண்டாக்கி, ஒரு துண்டைச் சுவைத்தாலும், அதிக இன்பம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட கற்கண்டைச் சுவைப்பதற்கு நம்முடைய முன்னோர்கள், சாறு பிழிந்து வடித்துக் கற்கண்டாக்கி, தங்கள் புலமையினால் பல்வேறு வடிவங்களாக சிலப்பதிகாரம், புறநானூறு அகநானூறு, திருக்குறள் ஆகியவைகளாக, நம்மிடத்திலே தந்திருக்கிறார்கள். அதைத் தின்னக் கூட நமக்குச் சோம்பேறித்தனமாக இருக்கிறது என்று கூறலாமா ?

### "தெய்வத் தமிழ்"

''..நான் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக மாணவனாகவும் ஆசிரியனாகவும் பேசியும் எழுதியும் தமிழிலேயே ஈடுபட்டு வந்திருக்கிறேன். அதையெல்லாம் நினைக்கும்பொழுது என்ன தோன்றுகிறதென்றால், பலர் தங்களுடைய தாய்மொழியை அன்போடு பாராட்டுகிறார்கள். வங்காளத்தவர் தங்களுடைய மொழியிலே பெரிய ஈடுபாடு கொண்டு செயலிலே ஈடுபட்டுள்ளனர். அந்த முறையிலே தமிழனுக்கு ஈடுபாடு, மனத்தின் ஆழத்திலே இருக்கிறது. அதன் காரணமாகத் தமிழுக்கு ஏதாவது கொடுமை என்று அஞ்சியவுடன், இந்த நாடு நடுங்கிப்போகின்றது."

''தமிழன் எப்பொழுதும் கடவுள் உணர்வோடு கடவுள் பக்தியோடு, தமிழைப்பேசுகிறான். இதன் காரணமாகத் தமிழ்மொழி கடவுள் மாட்டு ஒன்றிய போக்கின் முடிவு இடமாக உள்ளது. தமிழனுடைய பண்பாடு அத்தனையும், தமிழ் அனுபவம் கூடிய பரம்பரை பரம்பரையாக நம்பி வந்ததன் காரணமாக தமிழை விடுவது கடவுளை விடுவதைவிடப் பெருங்கேடு என்று தோன்றுகிறது. நம்புகின்ற நம்பிக்கையை நாம் உணர்ந்துகொண்டால், இந்த நாட்டின் மொழிச் சிக்கலைத் தீர்க்க முடியும். அந்த நிலையிலே தமிழ் மொழியை நினைக்கின்றபொழுது, தமிழனுடைய உள்ளத்திலே, உணர்விலே, அதிக ஆழத்திலே இந்த மொழியின் பிரசித்தப் பெற்ற தன்மை இருக்கக் காண்கிறோம்.''

[தமிழ்நூல் வெளியீட்டு விழாவில், மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்—இராஜாஜி மண்டபம்—தமிழ்ப் புத்தாண்டு தினம் 14—4—1967.]

பல துறைகளில் எழுதப்பட்ட நூற்களை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்ட வேண்டும். இத் துறையிலே பொருளாதாரம், அரசியல் முதலிய துறைகளில், பல புத்தகங்களை மொழி பெயர்த்திருக்கிறார்கள். இந்த வகையில், மேலும் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், ஒரு தனி ஆசிரியரின் நூலை பெயர்ப்பதுமட்டுமல்லாமல் பல்வேறு மொழி நூல்களை ஆழ்ந்து படித்து, அவற்றிலுள்ள கருத்துக்களைத் தொகுத்து, அந்தச் சாரத்தை, தமிழிலே கொடுப்பார்களேயானால், அவை படிப்பதற்கு சுவையாகயிருக்கும். நூல்களின் தரம் வளர்வதோடு தமிழ்ச் சுவையும் கூட்டி, பல்வேறு நூல்கள் வெளிவரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அரசினர் மட்டுமல்லாமல், தனியார்த் துறையினரும் இப்படிப்பட்ட பல்வேறு அருமையான நூல்களை ஆக்கித் தந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்."

—o—

# வாங்கிச் சாப்பிடும் ஏழைகளின் குறை அகற்றுவதே

# அரசின் முக்கிய கடமை

"உணவுத் தானியங்களை வாங்கிச் சாப்பிடும் ஏழை மக்களின் குறைகளை நிவர்த்திப்பதுதான், இந்த அரசாங்கத்தின் முதல் கடமையாக இருக்கும்."

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், பங்கீட்டுக் கடை வியாபாரிகள் கூட்டத்தில் பேசுகையில், கூறினார்.

சென்னை நகர பங்கீட்டுக் கடை வியாபாரிகள் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா, சென்னை மெமோரியல் மண்டபத்தில் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 18-ம் தேதியன்று நடைபெற்றது.

விழாவிற்கு சங்கத் தலைவர் திரு பி. ஏ. என். இராஜரத்தினம் தலைமை வகித்தார். சங்கத்தின் இதர நிர்வாகிகள்: பொதுச் செயலாளர்—திரு எஸ். விநாயக நாடார், பொருளாளர்: திரு எம். புண்ணியகோட்டி முதலியார், செயலாளர்கள்: திரு எம். சாமுவேல் துரைராஜ், திரு எஸ். ஏ. பாண்டியன்.

பங்கீட்டுக் கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருள்கள்மீது உள்ள லாப அளவை, மூன்று சதவிகிதத்திலிருந்து ஆறேகால் சதவிகிதமாக உயர்த்தித் தரும்படியாக, சங்கத்தின் சார்பில் கோரப்பட்டது.

உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள், விழாவைத் துவக்கி வைத்து நிகழ்த்திய உரையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:

## மூன்று வேளைச் சோறு

"மூன்றரை கோடி மக்கள் இட்ட கட்டளையை ஏற்று, ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம், முதலில், அந்த மூன்றரை கோடி மக்களுக்கும் மூன்று வேளைச் சோறு கிடைக்கச் செய்தாக வேண்டும். இதுதான் இன்றைய முக்கிய பிரச்சினை.

நமது மாநிலம், உணவில், உபரி மாநிலமும் அல்ல: ஒரு தன்னிறைவு மாநிலம். இங்கு உற்பத்தியாகும் 40 லட்சம் டன் உணவுப் பொருள் எல்லோருக்கும் சமமாக, சீராக விநியோகம் ஆகும்படிச் செய்ய வேண்டும். இதில் அரசாங்கம் முதல் கவனம் செலுத்தும்.

இந்த மகத்தான பணியில், வியாபாரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. அவர்கள் தங்களது நல் ஒத்துழைப்பை நல்க வேண்டும். நகரில் உள்ள போலி பங்கீட்டு அட்டைகளைக் (Ration Cards) கண்டுபிடித்துத் தர முன் வரவேண்டும்.

வியாபாரிகளின் உரிமைகள், கௌரவம், கோரிக்கைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கத் தவறாது."

* திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. பேசுகையில், கொள்முதல் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட, அரிசி மில்களை அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரலாம் என்று யோசனை கூறினார்.

* முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு.

## பங்கீட்டு முறை—இடைக்கால ஏற்பாடே

"பங்கீட்டுக்கடை வியாபாரம் என்பது எப்போதும் இருக்கப்போகிற வியாபாரம்

அல்ல. நாட்டில் பற்றுக்குறை இல்லை யென்றால் பங்கீட்டு முறை தேவை யில்லை. பங்கீடு இல்லை யென்றால், பங்கீட்டுக்கடை வியாபாரம் இருக்க போவதில்லை. அப்போது, அந்த வியா பாரத்தில் லாபம் போதுமா, போதாதா என்ற பிரச்சினையும் இராது.

ஆகவே, இடைக்கால ஏற்பாட்டினால் உண்டான பங்கீட்டு முறையில் உள்ள குறைகள் நிரந்தரமானவை அல்ல.

போதுமான வியாபாரம் தழைக்க வழி என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். நாட்டில் சுபிட்சம் நிலவி னால்தான், மக்கள் வாழ்வு வளம் பெற்றதாக, அவர்கள் பொருள் களை வாங்குவதற்கு ஏற்ற போதிய வருவாய் உடையவர்களாக இருந்தால் தான், வியாபாரம் பெருகும்.

உணவு தானிய, உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும், அரசி மில் காரர்களும் தங்கள் தங்களுக்கெனச் சங்கம் வைத்திருக்கிறார்கள். கொள்முதல் விலையை உயர்த்தித் தரும்படி, விற்பனை விலையைக் கூட்டித் தரும்படி, அரை வைக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று, அவர்கள் எல்லாம் தங்கள் குறைகளைக் குறிப்பிட்டு கோரிக்கை எழுப்ப முடிகிறது.

ஆனால், இவர்களைப் போல் சங்கம் வைத்துக்கொள்ளாத—வாங்கிச் சாப்பிடு கின்ற சாதாரண ஏழை மக்கள், தங்களுக்கு வயிறார உணவு கிடைக்கச் செய்ய வேண்டும் என்று, தங்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்க வேண்டும் என்று கூற வழி இருக் கிறதா?

ஆகவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, வாங்கிச் சாப்பிடுகின்றவர் களின் குறையைத்தான், முதலில் கவனிக்கும்.

பிறகு மற்றவர்களின் குறையைப் படிப்படியாகக் கவனிக்கும்.

## மக்களை விட்டால் யாரிடம் வியாபாரம்?

வியாபாரிகள், மக்களை விட்டால், பிறகு யாரிடம் வியாபாரம் செய்வார்கள்?

ஏழை மக்களிடம்தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியா பாரம் நடக்க வேண்டுமானால், அவர் களுடைய கைகளுக்கு எட்டும் விதத் தில் விலை இருக்கவேண்டும். அவர் களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.

நாட்டில் வளம் இருந்தால்தான், வியாபாரம் நல்ல முறையில் இருக்கும்

ஆப்பிரிக்க நாட்டில், ஏராளமான தங்கம் கிடைத்துக் கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளை யரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று, அந்தத் தங்கத்தை ஆப்பிரிக் காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை —அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்க வில்லை.

## 'தங்கத்தின் மீது தரித்திரம்'

அவர்கள் தங்கத்தின் மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொரு ளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால்தான் லாபம். பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறு என்பதெல்லாம்.

தமிழ் நாட்டில் நாற்பது லட்சம் டன் உணவு உற்பத்தியாகிறது, உற்பத்தியாகும் இந்த அளவு உணவு, எல்லா மக்களுக்கும் சீராக விநியோகம் ஆக வேண்டும். அவ்வாறு செய்தால், இங்கு பஞ்சம் வராமல் பார்த்துக் கொள்ள முடியும்.

வியாபாரக் கட்டுப்பாட்டினால், உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது எனக்கருதுவது சரியல்ல. இன்று பஞ்சம் ஏற்பட்டுள்ள பீகாரில், எந்த வியாபாரக் கட்டுப் பாடு இருந்தது? அங்கு விளைச்சல் இல்லை; பங்கீட்டு முறை சரியில்லை. அதுதான் காரணம்."

[20ம் பக்கம் பார்க்க.]

தமிழ்ப் புத்தாண்டு நாளில் முக்கிய அறிவிப்பு :

"1968 ஜனவரியில் சென்னையில் அனைத்துலகத் தமிழ் மாநாடு"

# "தாய் மொழியை வளப்படுத்துவோம்"

—கல்வி அமைச்சர்

[சென்னை ராஜாஜி மண்டபத்தில், தமிழ்ப் புத்தாண்டு நாளில் (14—4—1967) நடைபெற்ற தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நூல் வெளியீட்டு விழாவில் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

"தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்ற ஆறு ஆண்டுகளாக, மெல்ல மெல்ல முயன்று, ஆசிரியர்களின் துணை கொண்டு, பெரு முயற்சி எடுத்து, இதுவரை 128 நூல்களை வெளியிட்டு, இன்று புதிதாக 22 நூல்களை வெளியிடுகிறது.

எல்லாத் துறைகளிலும் தமிழ்

பல துறை அறிவையும் தமிழிலேயே அறியும் ஆர்வம், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற காலம் இது. எனவே, சொல்லுகிற கருத்துக்களை, தமிழிலேயே பெறவேண்டும் என்கிறார்கள். ஆகவேதான், அறிந்து கொள்ளும் அத்தனையும் தங்கள் தாய் மொழியிலேயே இருக்கவேண்டுமென்ற ஏக்கம், பெரும்பாலோரிடத்தில் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த ஏக்கத்தைத் தீர்ப்பது, நம்முடைய கடமையாகும் என்பதாலேயே, அரசு தமிழ் வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் வளர்ச்சியின் பணிகளை விரிவு படுத்தவும், வளப்படுத்தவும், புதிய அரசு முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. எல்லாத் துறையிலேயும், தமிழிலேயே வளர்ச்சி பெறவேண்டுமென்ற ஆர்வமும், துடிதுடிப்பும் நம் எல்லோருக்கும் இப்போது ஏற்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டு விழாவிற்கு மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கலந்து கொண்டதும் மத்தியக் கல்வி அமைச்சர் திரிகுண சென் அவர்கள் வந்திருப்பதும் மகிழ்ச்சி தரத்தக்கதாகும். பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராகவும், 40 ஆண்டு காலமாக கல்வித் துறையில் மிக்க அனுபவம் பெற்றவருமான ஒருவர் கல்வி மந்திரியாக வந்திருப்பது, மிகவும் போற்றற்குரியது. கல்விக் குழுவில் பொறுப்பேற்று, பல்வேறு நிலைமைகளை அறிந்து ஆய்ந்து நல்ல முடிவைக் காணக்கூடிய ஒருவர் கல்விப்பொறுப்பை ஏற்றிருக்கிறார். அது மட்டுமல்ல; இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும் வளர வேண்டுமென்ற இலட்சியம் கொண்ட ஒருவர், இன்றைக்குக் கல்வி அமைச்சராக வந்திருப்பது, அரிதிலும் அரிது. எதிர்பாராத ஒன்று நடைபெறுகிறது இன்று. கல்வி அமைச்சர் வங்க மொழிப் பற்றுள்ளவர். ஆகவே, நமது துணைக்கண்டத்திலுள்ள பிற சீரிய மொழிகளும், தக்க முறையிலே, செம்மையான வகையிலே வளர்ச்சி பெற வேண்டுமென்ற நல்ல நோக்கம் கொண்டிருப்பவர். அவர் இங்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

தனியார்த் துறை நூல்கள் பட்டியல் தயாராகும்

அரசாங்கம் வெளியிட்ட இந்நூல்களைத் தவிர, தனியார்த் துறையினரும், தனிப்பட்ட நூலாசிரியர்களும், தனித்தனி அமைப்பு நிலையங்களும் இம்மாதிரி நிறைய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளின் பட்டியலைத் திரட்டலாம் என்று இருக்கிறேன். இதிலிருந்து எத்தனை நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன என்று தெரிந்து கொள்வதோடு, எந்த எந்த நூல்களை உயர்நிலைப் பள்ளிகளில், கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக வைக்கலாமென்று தீர்மானிக்கயிருக்கிறோம்.

சென்னையில் அனைத்துலகத் தமிழ் மாநாடு

அனைத்துலக இரண்டாவது தமிழ் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி 3-ந் தேதி முதல் 10-ந் தேதிவரை, சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. உலகத்தினருக்கு ஒப்ப, நாம் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில், தமிழர்கள் தமது அறிவைத் தீட்டிக் கொள்ளும் விதத்திலும், தமிழ் ஓங்கி வளர்வதற்கேற்ற வகையிலும், இந்த மாநாடு பயன்படும். இந்த மாநாட்டிற்கு பொதுமக்கள், முழு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[29-ம் பக்கம் பார்க்க]

சட்டச் சொற்பொருட் களஞ்சியம் முதற்பகுதி வெளியீடு :

# ..நீதி மன்றங்களில் தமிழ்...

" மக்கள் மொழியிலேயே வழக்குமன்றங்கள் நடைபெறவேண்டும் "

—உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி

" நீதி கோருவோர் புரிந்துகொள்கின்ற சூழ்நிலை வழக்கு மன்றங்களில் நிலவவேண்டும்."

—சட்ட அமைச்சர்.

" அனைத்திந்திய உணர்ச்சி பற்றி தெளிவு வேண்டும். "

—முதலமைச்சர்.

நீதி மன்றங்களின் நடவடிக்கைகள் தமிழில் நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுப்பதில், தமிழ்நாடு அரசாங்கம், பத்தாண்டுகளுக்கு முன்பே செயல்படத் தொடங்கியது. ஆங்கிலத் தமிழ்ச் சட்டச் சொல்லகராதி தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இரண்டு பகுதிகள் வெளியிடப்பட்டன. பின்னர் அகராதி தயாரிக்கும் முறையில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. சட்டச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கமும் அதற்கு தமிழாக்கமும் தந்து, அகராதியை ஒரு சட்டச் சொற்பொருட் களஞ்சியமாகத் தயாரிப்பதென முடிவு செய்யப்பட்டது. இதற்கென, தகுதி வாய்ந்த அறிஞர்களடங்கிய ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு மா. அனந்த நாராயணன், ஐ.சி.எஸ்., அவர்களைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில், திரு. வெங்கடேசுவரன், ஐ.சி.எஸ்., திரு தி. சி. இராமலிங்கம் (சட்டத்துறைச் செயலாளர்), திரு வே. கார்த்திகேயன் (தமிழ் வளர்ச்சி நெறியாளர்), திரு சே. ரங்கராசன் (தலைமை நீதிபதி, நகர சிவில் நீதிமன்றம்,) டாக்டர் மு. வரதராசன் (தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்), பன்மொழிப்புலவர் திரு கா. அப்பாதுரை ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அமைப்பின் செயலகத்திற்கு திரு பு. ரா. பக்கிரிசங்கர், செயலாளராகப் பணியாற்றுகிறார்.

குழுவின் பணி இனிது நடைபெற்று, இப்போது, சட்டச் சொற்பொருட் களஞ்சியத்தில் 'A' முதல் 'H' வரை, 856 சொற்கள் அடங்கிய முதற் பகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் வளர்ச்சியையும் தொன்மையையும், சட்டத்தின் நுட்பமான கருத்துக்களைத் தெரிவிக்க இயலும் இலக்கிய வளத்தையும் முதிர்ச்சியையும் கருதி, இலக்கியத்தில் ஆங்காங்கே விரவி காணப்பெறும் சில சொற்களும் அவை, சிறிது கடினமாய் இருப்பினும்—பொருட் களஞ்சியத்தில் பயன் படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கம் அமைத்துள்ள ஆணைக்குழுவினர் பரிந்துரைக்கும் அகில இந்தியச் சொற்களும் இயன்றவரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, பேச்சு வழக்கிலுள்ள பிற மொழிச்சொற்களும், எளிதில் மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய சொற்களும், பொருட்களஞ்சியத்தில் பயன் படுத்தப்பட்டுள்ளன.

சட்டக்கருத்துக்களைச் சாதாரண முறையில் மொழி பெயர்ப்பதோடு மட்டுமின்றி, மூலத்தில் இல்லாத தெளிவுடனும், தமிழுக்கேற்ற இனிமையுடனும் சொற்றொடர் வடிவிலும் சூத்திர வடிவிலும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சான்றுகள் சில: "வானிடிந்து வீழினும் வழங்குக நீதியே"; "பொது விதி தன்னைத் தனிவிதி மிஞ்சும்"; "அற்பத்தில் அக்கரை சட்டத்திற்கில்லை":



G N.—2A

மொழியினிலே புதுமை பல படைத்தாலன்றிச் சட்டத்துறை, தமிழ் மொழிக்கு விடுக்கும் அறை கூவலை ஏற்று வெற்றிகாண முடியாதென்று கருதிய ஆணைக்குழு 'சுருக்கம்' (Abridgment) வழுவமைதிச் சட்டம் (Act of Indemnity), கலந்துறை உரிமைகள் (Conjugal rights), கூட்டுரு (Corporation) எழுதுநர் (Draftsman) பணியர்—பணிக்கர் (Employee–Employer) போன்ற பல புதிய படைப்புகளை மக்கள்முன் வைத்துள்ளது,

தமிழிலக்கியத்தின் வளத்தை நன்கு பயன் படுத்தல் வேண்டும் என்ற முறையில், தமிழிலக்கண வழக்காற்றிலிருந்து வழுவமைதிச் சட்டம் என்ற தமிழாக்கமும், அகப்பொருளிலிருந்து மெய்யுறுபுணர்ச்சி (Carnal Knowledge), செறித்தல் (Confinement) என்ற சொற்றொடர்களும் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளன. அதே போன்று (Civil death) என்ற சட்டத்திற்கேற்பத் தொல்காப்பியத்திலிருந்து 'தபுநிலை' என்ற சொல்லை எடுத்து உரிமை தபுநிலை என்னும் வடிவில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. 'ஒற்றுடல்' 'கையிகந்த' போன்ற சொற்கள் (Espionage, Exemplary) திருக்குறளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன 'ஆவணம்' (Document) என்னும் சேக்கிழரால் பெரிய புராணத்தில் கையாளப்பட்ட சிறப்புடைய சொல்லும் கல்வெட்டுத் தமிழிலிருந்து, 'முதுகணர்' என்ற சொல் (Guardian) க்கும் எடுத்தாளப்பட்டுள்ளது. முந்தயர் (ancestor) என்ற சொல் பாரதியின்) கவிதையில் கையாளப்பெற்ற பெருமையுடையதாகும்.

இவ்வாருக, இலக்கிய நயத்துடன் சட்டக்கருத்துக்களை இணைத்துப் பார்க்கும் நோக்கங்கொண்டு, சொல்லாக்க பணி நடைபெற்றதெனினும், அன்றாட வழக்கிலுள்ள தாவா, வாய்தா, சுவிகாரம், அமிஞ, ஜப்தி, ஜாமீன் போன்ற சொற்களைத்தயக்கமின்றி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

சட்டவியல் தத்துவத்தில், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் கருத்திற்கொண்டு பொருட் களஞ்சியம் தொகுக்கப்பெற்றுள்ளது.

'Privilege' என்னும் சட்டச் சொல்லிற்குச் 'சிறப்புரிமை' என்றே தமிழில் பெரிதும் வழங்கி வருகிறது. உரிமைதான் அப்படி யானது. 'Privilege' என்பது உரிமைக்குக் குறைந்த பொருட் செறிவு உடையது என்பது சட்டவியலில் ஏற்பட்டுள்ள தற்கால கருத்து. இதனை எண்ணி, 'சலுகை உரிமை' என்ற தமிழாக்கம் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது.

இவ்வடிப்படைகளோடு அமையப்பெற்றுள்ள சட்டச் சொற்பொருட் களஞ்சியத்தின் முதற்பகுதி வெளியிடப்பட்டது.

*சட்டச்சொற் பொருட் களஞ்சியத்தின் முதற்பகுதி வெளியீட்டு விழா, சென்னை இராஜாஜி மண்டபத்தில், புத்தாண்டு நாளில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் தேதி நடைபெற்றது.*

*விழாவிற்கு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை தலைமை வகித்தார். சட்டச் சொற்பொருட் களஞ்சிய நூலை, சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் வெளியிட்டார்.*

*ஆட்சி மொழிச் சட்டச் சொல்லாக்க ஆணைக்குழுவின் தலைவர் திரு மா. அனந்த நாராயணன் ஐ. சி. எஸ். (உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி) அனைவரையும் வரவேற்றார். கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியனும் இவ் விழாவில் கலந்து கொண்டு, உரை நிகழ்த்தினர்.*

**நீதி வழங்கும் துறையில் தாய்மொழியின் அவசியம்**

ஆணைக்குழுத் தலைவர் திரு அனந்த நாராயணன் பேசுகையில், "மக்களாட்சி என்பது மக்கள் பழகும் மொழியில்தான் நடக்கவேண்டும் என்று இப்போது சொல்வது புதிதல்ல. பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலேயே, நீதி வழங்குவதற்கு மக்களின் வழக்கு மொழிபற்றிய அறிவு, நீதிபதிகளுக்கு வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிழக்கிந்திய கம்பெனி காலத்திலும், மன்னராட்சி இருந்த புதுக்கோட்டையிலும் நீதிமன்றங்களில் தமிழிலேயே தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். [இந்தச் செய்தியை விளக்குவதற்காக, தனது சொந்த அனுபவத்தை அவர் எடுத்துரைத்தார் ஐ. சி. எஸ். அதிகாரிகள் அனைவரும் இந்நாட்டு மக்கள் மொழியில் தேர்ச்சி பெற்றுல்தான், பதவி உயர்வு கிடைக்கும் என்ற விதிமுறை இருந்தது. அதையொட்டி, அவரும் ஓரிரண்டு மொழிகளில் தேர்ச்சி பெறவேண்டி நேரிட்டது. மொழித் தேர்வு என்பது வெறும் ஏட்டு மொழித் தேர்வு மட்டுமல்ல; எழுதவும் படிக்கவும் வேண்டிய தேர்ச்சிகளில் அவர் எளிதில் வெற்றிபெற நேர்ந்தது. ஆயினும் துறைத்தளத்தார் அத்துடன் நின்று விடவில்லை. பொதுத்தேர்வை அடுத்து நடைபெற்ற இறுதித் தேர்வில், சாதாரண கிராம மக்களை நேரடியாகஅழைத்து வந்து அவர்கள் பேசுவதை அரசினர் புரிந்து கொள்வதிலும் அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஐ.சி.எஸ். அதிகாரி பேசுவதையும் கூர்ந்து கவனித்தார் இந்த முறையின் அடிப்படை நோக்கம் ஆழ்ந்து கவனிக்கத்தக்கது. சாதாரண ஜனங்கள் மொழியைப்புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள் அதிகாரம் செலுத்து

[14-ம் பக்கம் பார்க்க]



# ஓராண்டு கால அரும்பணி

[திரு வே. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர்.]

## "வருகின்ற நாட்களிலே தமிழ் வளர்ச்சிப் பணிகள் பெருக்கெடுத்து ஓடும் . . . ."

*''........ 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கோலாலம்பூரில் உலகத் தமிழ் மாநாடு கூடியது. அம் மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தமிழ் மொழியின் பெருமையைத் தரணிக்கு எடுத்துக் காட்டுவதாகவும் விளங்கிற்று. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, சென்னை நகரில், வருகின்ற 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி முதல் 10 தேதி வரை நடைபெறவிருக்கின்றது. இம் மாநாடு பற்றிய ஏற்பாடுகள் அனைத்தையும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (International Association of Tamil Research) முன்னின்று செய்து வருகின்றது. மாநாட்டிற்கென நெறிப்படுத்து குழு (Steering Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக விளங்குகின்றார். கல்வி-தொழில் துறைகளின் அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராக விளங்குகின்றார். இம் மாநாட்டுச் செலவில் ஒரு பகுதியினைப் ஏற்றுக்கொள்ளத் தமிழக அரசு முன்வந்துள்ளது.''*

என்ற முக்கிய செய்தியை குறிப்பிட்டு விட்டு, தன்னுடைய அறிக்கையில் தமிழ் வளர்ச்சித்துறை நெறியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

### ஆசிரியர்களுக்கு நிதி உதவும் திட்டம்

தமிழில் நிலையான பயனுடைய நூல்களை இயற்றவல்ல ஆசிரியர்களுக்கு அந் நூல்களை வெளியிட நிதி உதவும் திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது என்பதும், நிதியுதவி குறித்து அரசுக்குப் பரிந்துரை வழங்க அறிவுரைக் குழுவொன்று (Advisory Committee) நியமிக்கப்பட்டுள்ளது என்பதும் சென்ற ஆண்டிலேயே தெரிவிக்கப்பட்ட செய்திகளாகும். இக் குழுவின் காலம் இன்னும் ஒராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. நிதியுதவி திட்டத்திற்குரிய விதிகள் ஆராயப்பெற்று வெளியிடப்பெற்றுள்ளன. இதுவரை இக் குழுவின் மூன்று கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. மூன்றாவது கூட்டத்தில் ஆசிரியர் பலர் அனுப்பிய கையெழுத்துப்

> தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை ஆற்றியுள்ள பணிகளை—குறிப்பாக கடந்த ஆண்டு செய்துள்ள பணிகளை, இரத்தினச் சுருக்கமாகவும், தெளிவாகவும் தமிழ் வளர்ச்சித்துறை நெறியாளர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் புத்தாண்டு நாளில் (14—4—67) இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நூல் வெளியீட்டு விழாவின்போது, அவர் அளித்த அறிக்கையின் முழு வாசகத்தை, அப்படியே இங்கே அளித்துள்ளோம். —ஆசிரியர்]

பிரதிகள் ஆராயப்பெற்றன. அவற்றில் சில கையெழுத்துப் பிரதிகள் நிதியுதவிக்குத் தகுதியுடையன என்று குழு தெரிந்தெடுத்துள்ளது. குழுவின் பரிந்துரைகளை இப்போது அரசு ஆய்ந்துவருகிறது. அரசின் ஆய்விற்குப் பிறகு, ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களின் ஆசிரியர்களுக்கு விரைவில் நிதியுதவி கிடைக்கும்.

### தமிழ் வளர்ச்சி நிறுவனங்களுக்கு நிதி உதவி

தமிழக அரசு தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களுக்குத் தொடர்ந்து உதவி அளித்து வருகின்றது. இவ் வாண்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தை முக்கியமாகக் குறிப்பிடலாம். சங்க நூல்களுக்கு எளிய உரை வெளியிடுவதற்கு,இவ் வாண்டில், இச் சங்கத்திற்குப் பதினைந்தாயிரத்து அறுநூறு (15,600) ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது. இச் சங்கம், திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களுக்கு அரும்பத உரையும், தெளிவுரையும் எளிய நடையில் வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு, இருபத்து நான்காயிரம் (24,000) ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந் நூல்களை அச்சிடுவதற்காக ஐயாயிரம் (5,000) ரூபாய் உதவப்பட்டுள்ளது. மேலும், 'வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' என்ற வரிசையில் ஒன்பது பத்து ஆகிய பகுதிகளை வெளியிடுவதற்காகவும் இரண்டாயிரம் (2,000) ரூபாய் நிதி உதவி கொடுக்கப்பட்டது. தமிழ் எழுத்தாளர் சங்கமும் அரசிடமிருந்து இவ்வாண்டில் நிதியுதவிபெற்றது. 'தமிழ் எழுத்தாளர் யார்-எவர்?' என்னும் நூலின் திருத்திய பதிப்பிற்கு ஆயிரம் (1,000) ரூபாய் வழங்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவர நக்கீரர் கழகத்திற்கு இருநூற்றைம்பது (250) ரூபாய் உதவித் தொகை தரப்பட்டது. தென்மொழிகள் நூல் நிறுவனத்திற்கு (Southern Languages Book Trust) வழக்கம் போல் பன்னிரண்டாயிரம் (12,000) ரூபாய் வழங்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சிய முதல் துணை வெளியீட்டிற்கு (First Supplement to Tamil Encyclopaedia) இருபதினாயிரம் [20,000] ரூபாய் வழங்கப்பெற்றது.

### ஆட்சி மொழிக் குழுவின் அரும்பணி

ஆட்சி மொழிச் சட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆட்சி மொழிக் குழு அவ்வப்போது எடுத்து வருகின்றது. இக் குழுவிற்குச் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு அனந்தநாராயணன், ஐ.சி.எஸ்., அவர்கள் தலைவராகத் திகழ்கின்றார். இக் குழுவின் அன்றாட நிர்வாக வேலைகளின் பொறுப்பைத் தமிழ் வளர்ச்சி நெறியாளர் என்ற முறையில் நெறியாளர் ஏற்றுக்கொண்டுள்ளார். துறைத் தலைவர்கள் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களிலும் தமிழ்த் திட்டத்தின் முதலிரண்டு கட்டங்கள் செயல்படுத்தப்

[18-ம் பக்கம் பார்க்க]

"உறு பசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்
சேராது இயல்வது நாடு."

வள்ளுவப் பெருந்தகை கண்ட இலட்சியத் திருநாட்டின் இலக்கணம் இது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொதுமை நோக்கும் அன்பு நெறியும் செந்தமிழ் நாட்டின் அடிப்படை நிலைக்களன்களாகும். பிறர் வருந்துவது கண்டு துயருறும் சீரிய பண்பு படைத்த தமிழகத்தில் "பிணி துடைக்கும் அரும் பணி" சிறந்த முறையில் நடைபெற்று வருவதில் வியப்பொன்றுமில்லை. ஏப்ரல் 7-ம் தேதி உலக சுகாதார தினத்தை ஒட்டி நிகழ்த்தப்பட்ட வானொலிப் பேச்சில், தமிழக அரசின் சுகாதார அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் பிணி போக்கும் திருப்பணியில் ஈடுபட்டு பாடுபட வேண்டியது, நம் தலையாயக் கடமைகளில் ஒன்றுகும் என்று வற்புறுத்தி யுள்ளார். கருத்தாழம் கொண்ட அவருடைய பேச்சின் முழுவாசகத்தை கீழே காணலாம்.

—ஆசிரியர்.]

# பிணி தீர்க்கும் உயரிய தொண்டு...

[ திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா, சுகாதாரத் துறை அமைச்சர் ]

இன்று உலக சுகாதார தினம். 1948-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இதே நாளில்தான், உலக சுகாதார நிறுவனம், நலம் பெருக்கும் திருப்பணியில் ஈடுபடத் தொடங்கியது. உலகம் ஒன்றுபடவேண்டும், மனித சமுதாயம் தழைத்தோங்கிட, உலகமெங்கும் ஒன்று பட்ட முயற்சிகள் துறைதோறும் உருவாகவேண்டும் என்றெல்லாம் உலகச் சிந்தனைபற்றி உரத்த குரலில் பேசப்படும் காலம் இது. தமிழகத்தைப் பொறுத்தவரை உலகச் சிந்தனை இன்று நேற்று தோன்றியதல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தமிழ் மகன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடி வைத்துவிட்டுச் சென்றுன். உலக மக்கள் அனைவரும் நம் உறவினரே என்ற பொதுமை நெறியை மக்கள் நெஞ்சங்களில் பதிய வைத்தான்.

### ஒரே உலகம்—ஒற்றுமைப் பணி

இன்று அமைதியை நிலைநாட்ட உலகனைத்தும் ஒன்று படவேண்டும் என்ற முயற்சி தழைத்தோங்குகிறது. அறியாமை, இல்லாமை, போதாமை நீங்கி, உலக நாடுகள் இணைந்து நின்று பணியாற்றும் எண்ணம் புதுப் பொலிவோடு விளங்குகிறது. உலகச் சிந்தனை என்ற மணம் பரப்பிடும் ஐக்கிய நாடுகள் மன்றம் உலகச் சான்றோரின் அரவணைப்பில் வெற்றி நடை போடுகிறது. இன்றைய அனைத்துலக ஒற்றுமைப் பணிகளையும், அன்றைய தமிழ்ப் பண்பாடு கொடுத்த ஒற்றுமைக் குரலையும் இந்த நேரத்தில் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது பெருமிதம் அடைகிறேம்.

தான் நன்ருக இருக்கவேண்டும் என்று தனி மனிதன் நினைக்கிறுன். அது ஒரு நிலை. தன் குடும்பம் நன்ருக இருக்கவேண்டும் என்று அவன் நினைக்கும் போது, அவனது ஆசை சிறிது விரிவடைகிறது. சமுதாயம்—நாடு—உலகம் என்று, அவனது நோக்கம் பரந்த நோக்கமாக விரிவடையும்போது, அது ஒரு சிறந்த பண்பாடாக மலர்ச்சி பெறுகிறது. உலகம் வாழ வேண்டும் என்று எண்ணும் பண்பாடு, இந்த அடிப் படையில் உருவாகி, வளர்ந்த ஒன்றுதான்.

### வள்ளுவன் கண்ட திருநாடு

நல்ல நாடு என்றுல், பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் இடம் பெருத நாடாக இருக்கவேண்டும். உலகில் எந்த நாட்டிலும் இவை இடம் பெறக்கூடாது என்ற அடிப் படையில்தான், உலக நாடுகளின் அமைப்புகள் பணியாற்றி வருகின்றன. பிணி போக்கும் பணி

யில் உலகச் சுகாதார நிறுவனம் கடந்த பத்தொன்ப தாண்டுகளாக ஆற்றி வரும் அரிய பணிகளை நாம் போற்றுமல் இருக்கமுடியாது.

பொது வாழ்விற்குக் கருவியாக உள்ளத்தின் உறுதியும், அறிவின் தெளிவும் கெடாமல் காத்துக்கொள்ள வேண்டும். பொது மகளிர், கள், சூது என்பனபோல் உடம்பிற்கு வரும் நோயும், உள்ளத்தின் உறுதியையும், அறிவின் தெளிவையும் கெடுக்க வல்லதாகும். எனவே, மக்கள் நோயற்றவர்களாக வாழவேண்டும். நோய் வந்தாலும் உடனே தீர்த்துக் கொள்ளவேண்டும். நோய் வராதவாறு காத்துக் கொள்ளவேண்டும். இல்லா விட்டால், எத்தகைய செல்வம் பெற்றிருந்தாலும் பயனில்லை. எனவேதான், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று போற்றுகிறோம். இத்தகைய செல்வத்தை அனைவருக்கும் பெற்றுத்தரும் பணியில்தான் உலக சுகாதார நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

மக்களுடைய சுகாதார நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அணி சாதாரண அணியல்ல. அது ஒரு பேரணி. விதவிதமான நோய்களைத் தீர்க்கவல்ல மருந்துகளைக் கண்டுபிடித்து தரும் விஞ்ஞானிகள், சமுதாயத்தின் காவலர்கள். நோயுற்ற மனிதனுக்குச் சிகிச்சை செய்யும் டாக்டர், டாக்டருக்குத் துணையாக இருந்து நோயாளிக்குப் பணிவிடை செய்யும் நர்ஸ், மருந்து கொடுப்பவர், எக்ஸ்ரே படம் எடுப்பவர், இரத்தம் முதலியன சோதித்தறிபவர், சுகாதார உணர்வை ஊட்டி வளர்க்கும் சமூகத் தொண்டர், இப்படி ஒரு பெரும்படையே சுகாதாரப் பணியில் ஈடுபடுகிறது.

### மக்கள் ஒத்துழைப்பே அடித்தளம்

நோயற்ற நல்வாழ்க்கைக்கு வழி காட்டிய வள்ளுவர் பெருமகனார்,

> "நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற உன்னதமான கருத்தை உலகுக்கு அளித்தார். நோய் வராதவாறு தடுக்கும் பணிகள் பல திறப்பட்டன. "சுத்தம் சுகம் தரும்" என்றெல்லாம் அறிவிப்புப் பலகைகளைச் சுகாதாரப் பணியாளர் தெருக்களில் மாட்டி வைக்கின்றார்கள். அந்தப் பணியும் சிறந்த சுகாதாரப் பணியே. சுகாதாரப் பழக்கங்களைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதியவைக்கும் ஆசிரியப் பெருமக்கள், நல்ல சாலை வசதிகளைக் கிராமங்களில் ஏற்படுத்தித் தரும் பொறியியல் பணியாளர், முதலானோரும் சுகாதாரம் பேணும் பணியில் முன்னணியில் உள்ளனர். சுகாதார நல்வாழ்வுக்கு இவர்களுடைய முயற்சி மட்டும் போதாது. இவர்களுடைய முயற்சி முழு வெற்றி பெறவேண்டு மானால், இவர்களுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும். முழு மனதுடன் ஒத்துழைக்கவேண்டும். குறிப்பாக தெருக்களையும், சுற்றுப்புறங்களையும் துப்புரவாக வைத்துக்கொள்வதில் பொது மக்களின் ஒத்துழைப்பு பெருமளவு இருக்கவேண்டியது அவசியம்.

சுகாதாரப் பணி என்பது ஒரு நாளில் செய்து முடிக்கும் பணியல்ல. ஒருவர் மட்டும் செய்து முடிக்கும் வேலையுமல்ல. சுகாதாரப் பிரச்னைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. தட்பவெப்ப நிலைக்கேற்ப மாறுபடுகின்றன என்றாலும், காச நோய், புற்று நோய், மலேரியா, காலரா, பிளேக், பெரியம்மை, டைபாய்டு தொழுநோய், விபத்துக்கள், மனநோய்கள், உணவுச் சத்துக்குறை நோய்கள் முதலானவற்றில் தீர்வு காண உலகெங்கும் ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பின்தங்கிய நாடுகள் இதனால் நற்பயன் அடைகின்றன.

மக்களிடையே சுகாதார உணர்வு பெருகப் பெருக டாக்டர்கள், நர்ஸ்கள், ஏனைய சுகாதாரப் பணியாளர் ஆகியோரின் தேவை வேகமாகப் பெருகியுள்ளது. இன்று அவர்களின் எண்ணிக்கை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. உதாரணமாக, அமெரிக்கா, ரஷியா, பிரான்ஸ் முதலான நாடுகளில் 500 முதல் 1000 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் உள்ளனர். ஆனால் இந்தியாவில் 5800 பேருக்கு ஒரு டாக்டர் வீதம்தான் உள்ளனர். ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் 850 பேருக்கு ஒரு நர்ஸ் வீதம் உள்ளனர். ஆனால் ஆசிய நாடுகளில் 8000 பேருக்கு ஒரு நர்ஸ் வீதம்தான் உள்ளனர். இவ்வாறு தேவையான அளவுக்கு டாக்டர்களும், நர்ஸ்களும், பிற பணியாளர்களும் இல்லை என்பது மட்டுமல்ல, இருக்கும் சிலரும் நகர்ப் பகுதிகளிலேயே தொழில் புரிகின்றனர். இந்த நிலையில் மாறுதலை ஏற்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் வட்டாரம்தோறும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய நிலையங்களில் டாக்டர்களும், சுகாதார மேற்பார்வையாளர், சுகாதாரப் பணியாளர் முதலானோரும் ஓரணியாகக் கூடி, கிராம மக்களின் சுகாதார வாழ்வை வளப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### சமுதாயத்தின் காவலர்கள் ஆற்றவேண்டிய பணி

ஒரு பக்கம் சுகாதார வசதிகளைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டாக வேண்டிய அதே நேரத்தில், சுகாதார உணர்வை மக்களிடையே வளர்க்கும் திருப்பணியிலும் வெற்றி பெற்றாகவேண்டும். தடுப்பூசி மருந்துகளால், காச நோய், காலரா, கக்குவான் முதலான நோய்களைத் தடுக்க முடியும். தடுப்பு ஊசிகள் இலவசமாகப் போடப்படுகின்றன. இந்த வசதிகளை மக்கள் தாமாகவே முன்வந்து பயன்படுத்திக் கொள்வது வரவேற்கத்தக்கதாகும்.

உலகச் சிந்தனைக்கு ஒளி தரும் இந்த நன்னாளில், சமுதாயத்தின் காவலர்கள், ஏழை எளியவர்களின் உண்மை ஊழியர்கள் என்ற உணர்வோடு, நேர்மையுடன் உழைக்கும் உறுதியினை சுகாதாரப் பணியாளர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். உலகம் ஓரணியில் நின்று கவனிக்கும் சுகாதாரப் பிரச்னையில், எல்லாப் பணிகளிலும் பரிபூரணமான ஒத்துழைப்பினை நல்கும்படி பொது மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[ வானொலிப் பேச்சு: 7—4—67 ]

ஊராட்சி பற்றி மாணவர்கள் :

# மழலை மொழி

இன்றைய இளைஞர்கள், நாட்டின் நாளைய குடிமக்கள். மக்களாட்சியின் பல்வேறு நிலைகளில் பங்கேற்றுப் பணியாற்ற இருப்பவர்கள் அவர்கள். எனவே மக்களாட்சியின் அடித்தளமான பஞ்சாயத்து ஆட்சி பற்றி மாணவர்கள் அறிந்திருக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. பரிசு பெற்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் சில கீழே தரப்படுகின்றன. இவை இளைஞர் இதயங்களின் சிந்தனைப் போக்கைக் காட்டுவனவாகும்.

—ஆசிரியர்

"ஐரோப்பியரின் அரசியல் தாயகமாக விளங்கிய பழம்பெரும் கிரேக்க நாட்டில், பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஆனால், அவை சின்ன மீனைப் பெரிய மீன் விழுங்குவதைப்போல ஒன்றையொன்று பகைத்து அழிந்தன. நமது ஆட்சியமைப்போ, பஞ்சாயத்திலிருந்து நாடாளு மன்றம் வரை இணைந்து நின்று செயல் படுவது."

**ஏ. கீதா,**

*அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி,*
*ஏகனுப்பேட்டை.*

* * *

"தனிமனிதன், தன்னுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. பலர் ஒன்று சேர்வதனுல் எதையும் சாதிக்க முடியும். இவ்வாறு கிராம மக்கள் ஒன்று சேர்ந்து பல நன்மைகளைப் பெருவதற்குக் காரணமாக இருப்பது, கிராமப் பஞ்சாயத்துக்களாகும்."

**சு. கன்னியப்பன்,**

*அரசினர் உயர்நிலைப்பள்ளி,*
*மானும்பதி (உத்திரமேரூர்).*

* * *

"மாணவர்களும் பயனுள்ள முறையில் விவசாயிகளுக்கு உதவலாம். திருமலை நாயக்கன்பாளையம் என்ற ஊரில் பயிராகி இருந்த நிலக்கடலையை சிகப்பு கம்பளிப் புழுக்கள் அரித்து வந்தன. அரசாங்கம் மருந்து தூவியும் பயனில்லை. உடனே நம் மாணவமணிகள் படைபடையாகச் சென்று, கம்பளிப் புழுக்களைப் பிடித்துக் கொன்றுர்கள். அழிக்கப்பட்ட கம்பளிப் புழுக்களின் எடை 294 பவுண்டு. ஒரு பவுண்டுக்குச் சுமார் 8,000 புழுக்கள் இருக்குமாம். இது, அரசாங்கம் செய்ய வேண்டியதை மக்களே முயன்றால் செய்து முடிக்கலாம் என்று காட்டுகின்றதல்லவா ?"

**சு. மோகன்ராவ்,**

*கார்லி உயர்நிலைப்பள்ளி,*
*தாம்பரம்.*

* * *

"பஞ்சாயத்துத் தேர்தல்களில், அங்கத்தினர்களைக் கடத்த முயற்சித்தலும், பாதுகாவல் படையினர் மீது கற்கள் எறிதலும், கொலை செய்ய முயற்சித்தலும் போன்ற வன்முறைச் செயல்கள் நடைபெற்றதைக் கண்டோம். குட்டிக் குடியரசான பஞ்சாயத்து தேர்தல்களிலேயே இத்தகைய பலாத்காரம் தாண்டவமாட முயலும் போது, ஜனநாயகம் எங்ஙனம் [illegible]தழைக்க முடியும் ? எனவே கிராமமக்கள் ஜனநாயகரீதியில் தேர்தல் நடைபெற ஒத்துழைக்கவேண்டும்."

**எச். பி. சந்திரன்,**

G. H. S. *பிக்கத்தி, நீலகிரி (மாவட்டம்).*

* * *

"பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் பொதுத் தேர்தலில் ஈடுபடுவதில்லை என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டு, அரசியல் கட்சிகளின் பிரச்சார சாதனமாக விளங்காமல், விவசாய வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதையே முதலிடமாகக் கொண்டு செயலாற்றவேண்டும்."

**என். சுப்பிரமணியன்,**

*சுவாமி சிவானந்தா உயர்நிலைப்பள்ளி,*
*கோயம்புத்தூர்.*

"..பயிரிடப்பட்ட நிலங்கள் எவ்வளவு என்ற கணக்கை எடுத்துக்கொண்டோமானல், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு கோடி ஏக்கர் நிலங்களிலிருந்து ஒரு கோடியே இருபது லட்சம் ஏக்கர் நிலங்களாயிற்று. இரண்டாவது திட்டத்தில் இன்னும் ஆறு லட்சம் ஏக்கர்கள் பயிருக்குக் கொண்டுவரப்பட்டன. மொத்தத்தில் ஒரு கோடியே 26 லட்சம் ஏக்கர் நிலங்களாயிற்று. மூன்றாவது திட்டத்தில் மேலும் ஒரு லட்சம் ஏக்கர்கள் புதிதாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு அதிகப்படியான புதிய நிலச்சேர்க்கையால்தான் 1950–51-ல்,31 லட்சத்து 63 ஆயிரம் டன்னுக உள்ள உணவு தானிய உற்பத்தி 1964–65-ல் 58 லட்சம் டன்னுக உயர்ந்தது. அதாவது, பதினைந்து ஆண்டுகளில் உணவு உற்பத்தி சுமார் 26 லட்சம் அதிகம் ஆகியிருக்கிறது. இந்த அதிக உற்பத்திக்கு பதினைந்து ஆண்டு காலத்தில் 27 லட்சம் ஏக்கர் நிலங்களைப் புதிதாக விவசாயத்துக்குக் கொண்டு வந்ததுதான் முக்கியமான காரணம்....."

[உணவுத்துறை இணைச் செயலாளர் திரு வி. எஸ். சுப்பையா ஐ.ஏ.எஸ். வானொலிப் பேச்சிலிருந்து—20—3—67.]

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

வது சரியல்ல என்பதையும், அதிலும் நீதிவழங்கும் துறையில் பொதுமக்களின் பேச்சுமொழியை நன்ருக அறிந்திருக்க வேண்டிய அவசியத்தையும் அன்றைய ஆங்கில அரசு நன்குணர்ந்திருந்தது. "நான் தெலுங்கு மொழியில் தேர்வதை முன்னிட்டு அன்றய அரசாங்கம் கோதாவரி மாவட்டத்திலிருந்து கிராம மக்கள் சிலரை நேரில் வருவித்து, அவர்களோடு என்னைப் பேசவும், அவர்கள் பேசுவதை உணர்ந்து கொள்ளவும், எனக்குச்சோதனையாக அக்கால ஆங்கில மேலதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். மக்களாட்சி நடக்கிற நாட்டில், மக்களது தாய் மொழியில்தான் நீதிமன்றங்கள் நடக்கவேண்டும்" என்று அவர் கூறினுர்.

விழாவிற்குத் தலைமை வகித்து முதலமைச்சர் திரு அண்ணுதுரை பேசுகையில் "எந்த எந்த பிரச்சினையில் அனைத்து இந்திய உணர்ச்சி தேவை என்பதைப் பற்றி, நாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். இதுபற்றி அவர் கூறியதாவது:

"அகில இந்திய அடிப்படையில் பொதுவான சட்டச் சொற்கள் குறித்து இங்கு பேசப்பட்டது. அனைத்து இந்தியாவை ஏற்றுக்கொண்ட பிறகு, ஒவ்வொரு நடவடிக்கையிலும் அனைத்து இந்திய அடிப்படையை ஏற்க வேண்டுமா என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். எது எதில் அனைத்திந்திய உணர்ச்சி தேவை என்பதில் நாம் உறுதிகொள்ள வேண்டும்.

### சங்கமும் கழகமும்

அனைத்திந்திய அகராதி தயாரிக்க டில்லியில் ஒரு குழுவினை அமைத்திருக்கிருர்கள். 'பெடரேஷன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு என்ன சொல்லை அமைக்கலாம் என்பதற்கு மூன்று நாட்கள் ஆலோசனை நடத்தினுர்கள்.

தமிழகத்தின் பிரதிநிதி 'சங்கம்' என்ற சொல்லை உபயோகிக்கலாம் என்ருர். வங்க மொழியில் சங்கம் என்ற சொல்லுக்குக் கெட்ட அர்த்தம் இருப்பதாகக் கூறி வங்கத்தினர் எதிர்த்தனர். பிறகு, தமிழகப் பிரதிநிதி 'கழகம்' என்றுசொல்லலாம் என்ருர். உடனே "கழகமா? கழகமா?" என்று எல்லோரும் கேட்டார்கள். கழகம் என்பது 20 ஆண்டுகளில் ஏற்பட்ட சொல் அல்ல, தமிழ் இலக்கியங்களில்—புராணங்களில்—கழகம் என்றசொல் இருக்கிறது. என வாதாடினுர். ஆனுல் அவர்கள், 'கழகம்' வேண்டாம் என்று சொல்லி, 'சங்கம்' என்ற வார்த்தையைப் பிறகு ஒப்புக்கொண்டனர்.

மொழிபெயர்ப்பில் கூட, வேற்றுமை மனப்பான்மை வருகிறது. இப்படிப்பட்ட மனப்பான்மை நமக்கு இல்லை. நல்ல தமிழ்ச் சொற்களை நாம் கையாள்கிறேம். அதோடு, நம்வீடுகளுக்குத் தெருத்திண்ணை வைத்துக் கட்டுவது போல, அனைத்திந்திய சொற்களையும் நாம் சேர்த்து இருக்கிறேம்.

ஆனுல், அனைத்து இந்தியக் கூட்டுறவு இருக்க, அனைத்து இந்தியப் பொதுச் சொற்கள் இருந்தாக வேண்டும் என்பதல்ல. எது எதில் அகில இந்திய அடிப்படை வேண்டும் என்பதை ஆய்ந்து தெளிவுபெற வேண்டும்.

சமீபத்தில் டில்லியில் நாங்கள் கூடியபோது, 'அறம் கூறுமன்றம்' (Ambudsman) என்ற சொல்லுக்கு, 'லோக் பால், லோக் ஆயுக்த்' என்று சொன்னுர்கள். "பெயரே என்னவோபோல் இருக்கிறது" என்று ஈ. எம். எஸ். (கேரளா முதலமைச்சர்) கேட்டார். இதற்குப் புன்னகைத் தவிரவேறு பதில் தரவில்லை.

அவர்கள், மொழிமூலம், அனைத்து இந்திய உணர்ச்சியைக் கொண்டுவர முடியும் என்று நினைக்கிருர்கள். நாம், தமிழைப் பல்வேறு துறைகளிலும் கொண்டு வருவது தமிழரை ஒன்று படுத்த அல்ல; தமிழ் பல்வேறு துறைகளிலும் வழங்கவேண்டும் என்றே முற்படுகிறேம்.

அகில இந்திய உணர்ச்சி, தனித் தமிழ் இரண்டையும் பற்றி நாம் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டும்".

இவ்வாறு முதலமைச்சர் திரு. அண்ணுதுரை வேண்டுகோள் விடுத்தார்.

### தமிழிலேயே நீதிமன்றங்கள் நடைபெறவேண்டும்

சட்ட பொருட்களஞ்சியம் நூலை வெளியிட்டுப் பேசிய சட்ட அமைச்சர் திரு மாதவன் "நீதிபெற வந்திருக்கும் ஒருவனுக்கு, அங்கே அவனுக்குப் புரியாத சூழ்நிலை இருப்பது சரியல்ல. தமிழிலேயே நீதிமன்றங்கள் நடக்க வேண்டும். இந்தக் கருத்துக்கு அரசாங்கம் ஊக்கம் தரும்" என்று கூறினுர்.

"மாவட்ட நீதிமன்றங்களில் சாட்சியம் சொல்வது, விசாரணை எல்லாம் ஏற்கெனவே தமிழிலேயே நடைபெற்று வருகின்றன. சாட்சியங்களை நீதிபதிகள் பதிவு செய்வதும் தமிழிலேயே இருக்கும்படிச் செய்யலாமா என அரசாங்கம் ஆலோசித்து வருகிறது" எனறு திரு மாதவன் தெரிவித்தார்.

"எல்லாச் சட்டங்களும் தமிழில் ஆக்கப்பட்ட பிறகு, நீதிமன்றங்கள் தமிழிலேயே நடக்க வாய்ப்பு இருக்கிறது. தமிழை முழு முயற்சியுடன் பரப்ப அரசாங்கம் முயன்று வருகிறது. இதற்கு நீதித்துறையும் ஆதரவு தர வேண்டும்" என்று சட்ட அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

### நீரில் இறங்கினுல்தான் நீந்த முடியும்

கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் பேசுகையில், "தமிழ் ஆட்சி மொழியாக—பயிற்சி மொழியாக இயலுமா என்று கேட்கிருர்கள். தமிழைவிட வளம் குறைந்த மொழிகளுக்கு இயலும்போது, தமிழில் ஏன் இயலாது? நீந்த வேண்டுமானுல் நீரில் இறங்கினுல்தான், நீந்த வரும்" என்று கூறினுர்.

"அகில இந்திய அடிப்படையில் பொதுச் சட்டச் சொற்களை வைத்துக்கொண்டாலும், அத்தகையஒரு சில சொற்களால் என்ன நன்மை விளைந்து விடும்?" என்று அவர்கேட்டார்.

"தமிழை ஆட்சிமொழியாக்குவதில், இந்தத் தலைமுறையில் எவ்வளவு செய்யமுடியுமோ அதைச் செய்வோம். மீதி இருப்பவைகளை, வரும் தலைமுறையினர் செய்வார்கள். இது ஒரு 'ரிலேரேஸ்' போல. நாம் முடிக்கும் இடத்திலிருந்து, வரும் தலைமுறையினர் தொடங்குவார்கள்" என்று கல்வி அமைச்சர் கூறினுர்.

—o—

# பருத்தி ஒரு வெள்ளைத் தங்கம்

**மெலிந்த, இனிய சுபாவமுள்ள நடுத்தர வயது விவசாயியான திரு பொ. கங்கிரெட்டி அவர்களை நீங்கள் சந்தித்தால், உங்களுக்கே வியப்பாக இருக்கும். நிலம் அளித்ததை அப்படியே ஏற்றுக்கொள்ளும் பெரும் பாலான விவசாயியைப்போன்றே அவரை நீங்கள் கருது வீர்கள்; ஆனால் உண்மை அவ்வாறல்ல.**

திரு பொம்மரெட்டி கங்கிரெட்டி அவர்கள் ஆந்திர பிரதேசத்திலுள்ள, பாமர்ரு என்ற கிராமத்தைச் சார்ந் தவர்.

அவருடைய எளிய தோற்றத்தி னுள்ளே கடும் உழைப்பு, மனத் திட்பம் மலிந்து கிடக்கின்றன. அந்த பகுதியிலேயே முதன் முதலாக பருத்தியை விளைவித்துக் காட்டிய பெருமை திரு. கங்கி ரெட்டியையே சாரும்.

1960-ம் ஆண்டு முதல் பருத் தியைப் பயிரிடுவதில் இவர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். வயல் தரிசிலே பருத்தியை முதன்முதலாக விளைவித்து, சக விவசாய தோழர் களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் திரு கங்கிரெட்டி.

**சுழற்கோப்பை பரிசு**

1962-ம் ஆண்டு, அவர் 5½ ஹெக்டேர் நிலத்தில் பருத்தியைப் பயிரிட்டதில். அவருக்கு 9,540 கிலோ மகசூல் கிடைத்தது. பருத்தியில் உற்பத்தியைப் பெருக்கிக் காட்டிய அவருக்கு "பொ. திம்மாரெட்டி சுழற்கோப்பை" அளிக்கப்பட்டது. அடுத்து இரண்டு ஆண்டுகளிலும் பருத்தியில் கூடுதல் விளைச்சல் கண்ட பெருமை அவரையே வந் தடைந்ததால் அதற்குப் பிறகும் கூட அந்த சுழற்கோப்பை அவரிடமே இருந்தது.

1960-ம் ஆண்டு, ½ ஹெக்டே ருக்கும் குறைந்த நிலத்திலேயே இவர் பருத்தியைப் பயிர் செய்தார்; ஆனால் 1964-ம் ஆண்டிலோ இவர் 16 ஹெக்டேர் நிலத்தில் பருத்தியை பயிர் செய்தார். காரணம் என்ன?

"பருத்தியினால் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,500 கிடைக்கிறது; டிசம்பர்–ஜூன் மாத இடைவெளியில், பருத் தியைத் தவிர அதிக வருவாய் தரக்கூடிய பயிர் வேறெதுவுமில்லை. அதுமட்டுமா? மற்ற பயிர்களைவிட, பருத்தியில் ஆபத்து அதிகம் இல்லை. மூன்றாவது காரணம், பருத்திக்கு பின் பயிரிடப்படும் நெற்பயிருக்கு, இந்தப் பயிரினால் நல்ல பசுந்தாள் உரம் கிடைக்கிறது; அது தவிர கால் நடைகளுக்கு பருத்திக்கொட் டைகள் நல்ல உணவாகிறது" என்கிறார் திரு ரெட்டி.

**பரிசு பெற உழைப்பு**

பரிசைப் பெறுவதற்கு அவர் எப்படி செயலாற்றினார்? அவர் "பி. 216 எ.ப்" (P 216 F) என்ற விருத்தி செய்யப்பட்ட பருத்தியை விவசாயம் செய்ய துவங்கினார். 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந் தேதிக்கு மேல் 20-ம் தேதிக் குள்ளாக மேற்சொன்ன விருத்திச் செய்யப்பட்ட பருத்தியை பயிரிட்டார்.

ஒவ்வொரு பாத்தியிலும் 5 விதை களை ஊன்றினார். 50 சென்டி மீட்டர் இடைவெளியில் இவ்விதமாக விதைகள் நடப்பட்டன. நான்காவது நாள் விதைகள் முளைவிட்டன,

முளைவிட்ட 20 நாட்களுக்குப் பிறகு பயிருக்கு முதல் பாசனம் செய்யப் பட்டது. பதினைந்து நாட்களுக்குப் பிறகே இரண்டாவது பாசனம் செய் தார். இத்தருணத்தில் பயிருக்கு ஒரு மாத காலம் ஆகிவிட்டபடியால் அதற்கு கூடுதலான பாசனம் தேவை.

"ஆனால் நீரை வடித்துவிடுவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்; நீர் தேங்கிவிட்டால் செடிகள் தழைக் காது" என்று எச்சரிக்கிறார் திரு ரெட்டி.

**உரமிடுதல்.**

இரண்டாவது பாசனத்திற்குப் பிறகு 50 நாட்கள் கழித்தே மூன்ருவது பாசனம் செய்தார். "பருத்தி சாகுபடியில் இதுதான் ஒரு முக்கியமான கட்டம்" என்கிருர் திரு ரெட்டி. ஏப்ரல் 15-ம் தேதியன்று கடைசி பாசனம் செய்ய வேண்டும். அதற்கு பிறகு நீர்ப்பாய்ச்சவே கூடாது.

பயிருக்கு எவ்வாறு உரமிட்டீர்கள் என்று திரு ரெட்டியை கேட்டபோது "ஒரு ஹெக்டேருக்கு 62 கிலோ" முரியேட் ஆஃப் பொட்டாஷ் கீழ் உரம் இட்டேன்" என்ருர்.

முதல் பாசனத்திற்கு முன்பு ஹெக்டேருக்கு 125 கிலோ வீதம் யூரியாவும், இரண்டாவது பாசனத்துடன் அதே அளவு யூரியாவுடன், 250 கிலோ அம்மோனியம் சல்பேட்டும் போட்டதாக திரு ரெட்டி கூறினர். 50 கிலோ கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்தான் இவர் கடைசியாக இட்ட உரமாகும். இது மூன்ருவது பாசனத்திற்கு முன் நடைபெற்றது. "ஒரு ஹெக்டேருக்கு சுமார் ரூ. 350 வரை உரவகையில் செலவாயிற்று என்ருர் திரு ரெட்டி.

**பயிர்ப் பாதுகாப்பு**

பயிர்ப் பாதுகாப்பு மிகவும் முக்கியமல்லவா? பூக்கத் துவங்குவதற்கு முன்னரேயே, எலிப்பொறிகளை வைத்தார். வயலில் ஒரு எலி கூட இல்லாமல் கவனித்துக்கொண்டார். இவ்வித எலி ஒழிப்பு நடவடிக்கைக்காக ஹெக்டேருக்கு ரூ 10 செலவு செய்தார்.

விதைத்து இரு வாரங்களான பின், 'பி. எச். சி.' 10 சதவீதம் தூவினர். ஜனவரி மாத நடுவிலிருந்து, ஏப்ரல் மாதம் முற்பகுதி வரை, எண்ட்ரின், 'பாரத்தியான்' "செவின்" கொண்டு, ஒவ்வொன்றும் இரு முறை தெளிக்கப்பட்டது. இவை காரணமாக பயிர்கள் செழித்து வளர ஆரம்பித்தன.

"மே மாதம் முதல் தேதி பருத்தியை எடுத்தோம். நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு ஒரு முறையாக மே மாதம் இறுதி வரை பருத்தியை எடுத்து வந்தோம். காலையில் கிடைத்த பருத்தியை மாலையில் உலரவைத்தோம். அவ்வப்போது அவை சுத்தம் செய்யப்பட்டன" என்று விளக்கினுர் அவர்.

"பருத்தியை தரம் பிரிப்பது மிகவும் அவசியம். இரண்டாம் தர பகுதியில் சிறிதளவு முதல்தர பருத்தியுடன் கலந்துவிட்டால், முதல் தர பருத்தி முழுவதற்கும் விலை குறைந்து விடும்" என்ருர் திரு. ரெட்டி.

அவருடைய 16 ஹெக்டேர் நிலத்திலும் அவர் பருத்தியைப் பயிரிட ரூ. 20,000 செலவாயிற்று. 360 குவிண்டால் எடையுள்ள பருத்தியினுல் அவருக்கு ரூ. 45,000 கிடைத்தது. அவருக்கு கிடைத்த நிகர லாபம் ரூ 25,000; அதாவது ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,565.

"பருத்தியை தவிர வேறெதையும் நான் பயிர் செய்திருந்தால் எனக்கு ஹெக்டேருக்கு ரூ. 1,000 தானே கிடைத்திருக்கும்" என்று மகிழ்ச்சியுடன் கூறினுர் திரு ரெட்டி.

எனவே அவர் பருத்தியை ஒரு வெள்ளைத் தங்கம் என்று கூறுவதில் வியப்பேயில்லை.

## கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுகள்

இந்தியாவில் பல பகுதிகளிலும் 22 கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுகள் இயங்கி வருகின்றன.

பெங்களூர், தன்பாத், எர்ணுகுளம், போபால், இந்தூர், கோட்டயம், ஜலந்தர், லூதியாணு, தென் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, ஸ்ரீநகர், தெஹ்ராடூன், தெற்கு கல்கத்தா, ஜெய்ப்பூர், ஹைதராபாத், கள்ளிக்கோட்டை, திருவனந்தபுரம், ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும், புதுடில்லியில் மூன்றுமாக இக் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுகள் செயல்படுகின்றன.

இவற்றின் சராசரி தின விற்பனை ரூ. 4·70 லட்சமாகும். புதுடில்லியிலுள்ள சூப்பர் பஜாரில்தான் அதிகமாக பொருள்கள் விற்பனையாகின்றன. இதன் சராசரி விற்பனை நாளொன்றுக்கு ரூ. 1·37 லட்சமாகும்.

பாட புத்தகங்கள், தொழில் நுட்ப புத்தகங்கள், கணக்கு பதிவேடுகள் கூட்டல் கணக்கிடும் இயந்திரங்கள் போன்றவை ரூ. 5 லட்சம் செலவில் இறக்குமதி செய்துகொள்ள இவற்றிற்கு 'லைசென்சு'கள், வழங்கப்பட்டுள்ளன. இந்த மார்க்கெட்டுகள் சொந்தத்திலேயே காய்கறிகளை பயிரிட்டு விற்பனை செய்யவும் துவங்கி விட்டன.



# எளியவர்களின் "உதகை"

**பீமுனிபட்டிண நகராட்சி மன்றம் தான் ஆந்திரப் பிரதேசத்தின் மிகப் பழைய நகராட்சி மன்றமாகும்; இந்தியாவிலேயே இரண்டாவது பழைய நகராட்சி மன்றமும் இதுதான்.**

இந்த நகரத்தின் வளர்ச்சிக்கு முதன்மை காரணமாக இருந்தவர்கள், டச்சுக்காரர்கள். அவர்கள் இங்கே வந்து தங்கிய போது இந்நகரத்தை விருத்தி செய்வதில் பெரிதும் ஆர்வங் காட்டினர். அவர்களின் பொறியியல் திறனுக்கு, பீமுனி பட்டிணத்தில் இன்றளவும் சான்றுகளிருக்கின்றன. இயற்கையிலேயே அமைந்துள்ள சரிவுகள், தெருக்களாக மாற்றப்பட்டுள்ளதால், மழை நீரெல்லாம் சுலபமாக கீழே சென்று விடுகின்றன. கடற்கரையோரங்களில் வரிசையாக நடப்பட்டுள்ள தென்னை மரங்கள் இயற்கையின் வனப்பிற்கு மேலும் பொலிவூட்டுகின்றன. மித சீதோஷ்ண நிலை வாழ்க்கையை ரம்மியமாக்குகிறது.

**எளியவர்களின் "உதகை"—பீமுனி பட்டிணம்.**

இந்த இடத்தில்தான் 'கொஸ்தானி' என்ற நதி கடலில் கலக்கிறது. இங்குள்ள "நரசிம்ம சுவாமி ஆலயம், யாத்திரர்களுக்கு ஒரு முக்கிய இடமாகும். பீமுனிபட்டிணத்தை "எளியவர்களின் உதகை" என்றும் அடிக்கடி கூறுவதுண்டு. விசாகப்பட்டிண துறைமுகம் வளர்ச்சியடைவதற்கு முன்பு, பீமுனிபட்டிணம்தான் ஒரு புகழ்பெற்ற துறைமுகத்தை உடைத்தாய் இருந்தது. பீமன், பகாசூரனைக் கொன்ற இடம் இதுதான் என்று இதிகாசங்கள் கூறுகின்றன.

நகரத்தின் மையத்திலே வட்டார அலுவலகம் அமைந்துள்ளது. 62 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய இந்த வட்டாரம், 80 கிராமங்களைக்கொண்டது. இவ்வட்டாரத்தின் மொத்த நிலப் பரப்பு 181·3 சதுரமைல்களாகும்; மொத்த மக்கள் தொகை 1,12,274.

நிலையான பாசனத்திற்கு இங்கே நீர் ஆதாரங்கள் இல்லை. 69,326 ஏக்கர் மொத்த நிலத்தில் பாசன வசதி பெறும் நிலம் 27,621 ஏக்கர்களேயாகும். பாசனத்திற்கு கொஸ்தானி நதி முழுவதுமாக பயன்படுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும். இருப்பினும் நதியிலிருந்து நான்கு கால்வாய்கள் வெட்டப்பட்டு, பத்து கிராமங்களுக்கு பாசன வசதி பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

நெல், ராகி, வேர்க்கடலை, கரும்பு, சணல், புகையிலை ஆகியவையே இங்கு விளையும் முக்கியப் பயிர்கள். காய்கறிகளும் பழங்களும் விளைகின்றன. இது ஒரு கடலோர வட்டாரம். எனவே கடற்கரை வாழ் மக்களெல்லாம் மீனவர்களே; எஞ்சியவர்கள் விவசாயிகள்.

17,961 ஏக்கர்களில் நெற்பயிரும், 41,705 ஏக்கர்களில் கம்பு, ராகி, வேர்க்கடலை, மிளகாய் போன்றவையும் பயிரிடப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டவுடன் மேலும் சுமார் 842 ஏக்கர்கள் விவசாயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. சுமார் 248 பாசனக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 5 ஆயில் என்ஜின்கள், ரயத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுமார் 4,128 மணங்கு விருத்தி செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 'போதன்' என்ற புதிய ரக நெல் விதை குறுகிய, நெடுங்கால பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஏக்கர் நிலத்தில் 'டாய்ச்சுங் நேடிவ் 1' பயிர் செய்யப்பட்டதில் 36 மூட்டை மகசூல் கிடைத்தது.

**ராகி போய் வேர்க்கடலை வந்தது**

முன்பெல்லாம் தாளடிக்கு பிறகு ராகியே பயிரிடப்பட்டது. ஆனால் பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டவுடன், விவசாயிகளெல்லாம் வேர்க்கடலையையே விளைவிக்கிறார்கள். இதனால் ராகியை விட அதிக இலாபம் கிடைக்கிறது.

தீவிர உரத்திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு ரூ. 50,000 ரயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டது. தக்காவிக் கடன் வாயிலாக, 5 மின்சார மோட்டார்கள், 9 ஆயில் என்ஜின்கள், 2 மின்சார மோட்டார் பம்பு செட்டுகள், ரயத்துக்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன.

அறியாமையை அடியோடு அகற்ற, யூனியன் திட்டங்களை வகுத்து செயலாற்றி வருகிறது. யூனியனில் 129 பள்ளிகள் இருக்கின்றன, இவற்றில் 121 பள்ளிகளை யூனியனே நிர்வகித்து வருகிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மொத்தம் 198 பேர்களாவர். இவர்களில் 63 பேர்கள் இடை நிலை பயிற்சி பெற்றவர்கள்; எஞ்சியவர்கள் உயர்நிலை பயிற்சி அடைந்தவர்கள்.

**தகவல் தகவலுக்காகவே..**

வட்டார தகவல் நிலையம், பார்வையாளர்களுக்கு ஒரு முக்கியமான இடமாகும். வட்டார அளவான எல்லா திட்டங்களும், அந்தந்த திட்டங்களின் நிறைவேற்றத்திலுள்ள பல்வேறு நிலைகளும் படங்கள் மூலம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. சினிமாக் கருவிகள் வாயிலாகவும் தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தகவல் நிலையத்தை ஒரு முறை பார்த்தாலே போதும், பீமுனி பட்டிணத்தின் வளர்ச்சி குறித்து திருப்தியடைய முடியும்.

மக்களின் நோக்கம், ஆர்வம், சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்ற முனைப்பு ஆகியவற்றை ஒன்றுபடுத்தி, அவற்றை செயலில் திருப்பி, முன்னேற்றப் பாதையில் சென்று, சுபிட்சத்தை அளித்துள்ளது பீமுனிபட்டிணம்.

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுவருகின்றன. அரசுத் தலைமைச் செயலகத்தை பொறுத்தவரையில் தமிழ்த் திட்டத்தின் முதல் கட்டம் 1966-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இவ் வேற் பாட்டின்படி பொது மக்களிடமிருந்து தமிழிலே வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்பெறும். இத் திட்டம் இடர் ஏதுமின்றி, செம்மையான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசுச் செயலாளர்கள் அறிவித்துள் ளார்கள்.

எல்லா அலுவலகங்களிலும் தமிழில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குத் தமிழில் பயிற்சியளிக்கும் திட்டம் 1963-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து நடைமுறை யிலிருக்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் 2,250 அரசுப் பணியாளர்கள் பயிற்சி பெற்றனர். இவ்வாண்டு 422 பேர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர். இப்பொழுது நடைபெறும் பயிற்சி வகுப்போடு இவ் வகுப்புகள் நிறைவுபெறும். அரசுத் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குத் தமிழில் வரைவுகளும் குறிப்புகளும் எழுதப் பயிற்சி வகுப்புகள் கடந்த ஓராண்டிற்கு மேலாக நடைபெற்றுவருகின்றன. இவ் வகுப்புகளும் இப்போது முடிவுறும் நிலையி லிருக்கின்றன. சட்டத்துறை, நிதித்துறை, சட்ட மன்றத் துறை ஆகிய துறைகளில் பணியாற்றுவோர் நீங்கலாக அரசுத் தலைமைச் செயலகத்திலுள்ள எல்லா கண்காணிப்பாளர்களும் உதவியாளர் களும், எழுத்தர்களும் இப் பயிற்சி வகுப்பு களில் கலந்துகொண்டனர்.

### தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி-உதவி நிதித் தொகைத் திட்டம்

1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதிக்கு முன் நியமிக்கப்பட்ட தட்டச்சர் களுக்குத் தனியார் நிறுவனங்களில் தமிழ் தட்டச்சுப் பயிற்சி அளிப்பதற் கான உதவித் தொகை திட்டம் 1960-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டம் இவ் வாண்டு ஏப்ரல் மாதக் கடைசி வரை நீடிக்கப் பட்டிருந்தது. இத் திட்டத்தை மேலும் ஓராண்டிற்கு நீடிக்கும் கருத்து அரசின் ஆய்விலுள்ளது. இப்பொழுதுள்ள ஆட்சிச் சொல்லகராதி இரண்டாம் பதிப்பாக 1962-ம் ஆண்டு வெளிவந்தது. அலுவ லகங்களின் பெயர்களும் அலுவலர்களின் பெயர்களும் இவ் வகராதியில் இணைக்கப் பட்டுள்ளன. காலப் போக்கில் இப் பெயர்கள் மாறுதலடைந்துள்ளன. ஆகவே, இவ் விணைப்பைத் திருத்தி யமைக்கும் வேலையை ஆட்சி மொழிக் குழு இப்பொழுது கவனித்து வருகிறது. அரசுத் தலைமைச் செயலகத்திற்கெனத் துணையகராதி ஒன்று விரைவில் வெளியிடப் படும். ஆட்சிமொழித் திட்டம் அரசு அலுவலகங்களில் நன்முறையில் நிறை வேற்றப்படுகிறதா என்பதைக் கவனிக்க ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள் ளார். அவர் மாவட்டங்களிலுள்ள அலுவலகங்களை ஆய்வு செய்கின்றார். சென்னை நகர அலுவலகங்களைப் பொறுத்த வரை இவ்வாய்வு ஆட்சிமொழிக் குழுவின் செயலாளரால் நடத்தப்பட்டு வரு கின்றது.

### தமிழக நூல்கள் வெளியீடு

சென்ற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று இம் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 44 நூல்கள் வெளியிடப்பெற்றன. இதுவரை தமிழ் வெளியீட்டுக் கழகம் 128 நூல்களை வெளி யிட்டுள்ளது. இன்றையதினம் 22 நூல்கள் வெளியிடப்பெறுகின்றன. இவற்றில் புற்றுநோய், இந்திய அரசியல் சட்டம், தாவரங்களின் வாழ்வியல் ஆகியவைபற்றிய நூல்களும் அடங்கியுள்ளன. தமிழ் வெளி யீட்டுக் கழக நூல்களை விற்பதற்குத் தக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் எடுத்த கணக்கின்படி 6,00,000 ரூபாய் மதிப்புள்ள நூல்கள் கைவசம் இருந்தன. அதன் பின்னர் எடுக்கப்பெற்ற சிறப்பு முயற்சி களின் காரணமாக, 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம்

வரை 1,29,000 ரூபாய் மதிப்புள்ள நூல்கள் விற்கப்பட்டன. 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி எடுத்த கணக்கின்படி 10,00,000 ரூபாய் மதிப்புள்ள நூல்கள் கைவசம் இருந்தன. இந் நூல்களைக் கல்லூரிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மிகுதியான அளவில் விற்கும் நோக்குடன் தொடர்புடைய நெறியாளர்களுடன் கலந்து பேசியதின் பயனாகத் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நூல்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கல்லூரிகளுக்கும் விரைவில் அனுப்பப்பெறும். கடைசியாக எடுத்தக் கணக்கின்படி, அதாவது இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று 7,25,000 ரூபாய் மதிப்புள்ள நூல்கள் மட்டுமே கைவசமிருந்தன.

### தமிழ்நூல் ஆசிரியர்களுக்குப் பரிசு

சென்ற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் பரிசுத் திட்டத்தின்கீழ் பரிசு பெற்ற பத்து நூலாசிரியர்களுக்கு தலைக்கு 1,000 ரூபாய் பரிசு வழங்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் மூன்றாவது கூட்டம் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதி நடைபெற்றது. இக் கூட்டத்தில் பரிசுத் திட்டம்பற்றிய நிலைக் குழு அமைக்கப்பட்டது. இந்த நிலைக் குழு பரிசுத்திட்ட நடுவணர்களைத் தேர்ந்தெடுக்கும். 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய வெளியான நூல்கள், பரிசுத் திட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. புதைபொருள், கல்வெட்டு ஆராய்ச்சி குறித்த உட்குழுவின் கூட்டமொன்று இவவாண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதி நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல்லவர் வரலாறு, தென்னிந்திய வரலாறு ஆகியவை பற்றிய நூல்களைத் தமிழில் வெளியிடத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. கன்னியாகுமரி கோயில் பற்றியும், சீவில்லிபுத்தூர் கோயில் பற்றியும் தனி நூல்கள் (Monograph) எழுதி வெளியிட இரண்டு ஆராய்ச்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் வேலைகளை முடித்து, கையெழுத்துப் பிரதிகளை அரசுக்கு அனுப்பியுள்ளனர். இக் கையெழுத்துப் பிரதிகள் வல்லுநர்களால் ஆராயப்பட்டுவருகின்றன. குழந்தை இலக்கிய ஆராய்ச்சி அலுவலர் தம் பரிந்துரைகளை வழங்கியுள்ளார். அவற்றைக் குழந்தைகளுக்குரிய நூல்களில் பயன்படுத்துவதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. இதுவரை வெளியிடப்பெறாத நாட்டுப்பாடல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. திருச்சி வானொலி நிலையத்தார் சில பாடல்களை வழங்கியுள்ளனர். நாட்டுப் பாடலில் ஆர்வமுள்ள சில தனிப்பட்டவர்களுக்கும் அரசு கடிதம் எழுதியுள்ளது.

தமிழ் வளர்ச்சியையே தன் மூச்சாகக் கொண்டுள்ளது நம் புதிய அரசு. ஆட்சிப் பொறுப்பேற்று சில நாட்களே ஆகியிருப்பினும், இக் குறுகிய காலத்தில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளே இதற்குச் சான்று பகரும். தமிழ்மக்களின் நீண்ட நாளைய கனவுகள் நனவாகி வருகின்றன. வருகின்ற நாட்களிலே தமிழ் வளர்ச்சிப் பணிகள் பெருக்கெடுத்து ஓடும் என்பது திண்ணம்.

### வெற்றி யார் கையில் ?

"அரசாங்கம் என்ன திட்டமிட்டாலும், அது நிறைவேறுவதும் நிறைவேறாததும் உங்கள் கையில்.

திட்டங்கள் வெற்றி—நிலத்தில் உழைக்கும் உழைப்பாளர்களின் கையில்.

திட்டத்தின் வெற்றி—மண்வெட்டி தூக்கும் பாட்டாளிகளின் கையில்.

திட்டத்தின் வெற்றி—சம்மட்டி தூக்கும் தொழிலாளர் கையில்.

ஆகவே மக்களாகிய நீங்கள்தான் உயிர்; சர்க்கார் உடல்.

உயிர் இல்லாவிடில் உடலுக்கு மதிப்பில்லை. அசைவுமில்லை. உடல்—உயிரை விட்டால் சவமாகிறது, உயிர்—உடலை விட்டு எங்கே செல்கிறது, என்ன ஆகிறது என்பது பற்றி வேதாந்திகளுக்குள்ளே ஒற்றுமையில்லை.

ஆகவே உடல் பெரியதா உயிர் பெரியதா என்று ஆராய்வதைவிட. இரண்டும் முக்கியம், இரண்டும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன.—என்று ஒத்துக் கொள்வதுதான் சிறந்தது. அதுபோல் அரசாங்கமும் மக்களும் இணைந்து பணியாற்றினால்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்."

—கடம்பத்தூர் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர்.

[5-ந் பக்கத் தொடர்ச்சி]

### தவறு இருந்தால் வாதிடலாம்

எனவே, அரசாங்கம் கட்டுப்பாடுகள் விதிப்பதே தவறு என்று கருத வேண்டாம். ஆனால் அரசாங்க விதி முறைகளில் தவறு இருந்தால், சுட்டிக் காட்டி வாதிடுங்கள். விதிகளைப் போட்ட பிறகு, அதில் சந்து கண்டுபிடித்து மீறுதீர்கள். இதுதான் எனது வேண்டுகோள்.

வியாபாரப் பெரு மக்கள், வியாபாரத் தொழிலை ஒரு சமூகத் தொண்டாக கருதி நடக்கவும், அரசாங்கத்திற்கு செம்மையான ஒத்துழைப்புத் தரவும் வேண்டும்."

• • • •

# ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டம்

## மே 15-ந் தேதி முதல் ஆரம்பம்

மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே, நல்வாழ்வு அரசாங்கத்தின் குறிக்கோள். எனவே, உணவு தேவையைப் பூர்த்தி செய்வதில், முதல் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வகையில், நமது தமிழக அரசும், ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை, மே 15-ந் தேதி முதல் மேற்கொள்கிறது

நகரங்களில் தொழிலாளர்கள் ஏராளமாக வாழ்கிருர்கள்: பாடுபட்டு உழைக்கும் அந்த ஏழைகளுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் பற்றிய செய்தியை, முதலமைச்சர் அவர்கள், தொழிலாளர் தினமான மே 1-ந் தேதி அன்று, தொழில் நகரான கோவையில் அறிவித்தார்.

பின்னர், திட்டத்தின் விவரங்களை உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் முதலில், சட்ட ரீதியான பங்கீட்டு முறை (statutory rationing) அமுலில் உள்ள சென்னை கோவை ஆகிய நகரங்களில் செயல்படத் தொடங்கும். நடுத்தர, மோட்டா ரக அரிசியை வாங்கி உபயோகிக்க விரும்பும் அனைவருக்கும், அந்த அரிசி ரகங்கள் ரூபாய்க்கு ஒரு படி வீதம் (ஒரு கிலோ அரிசி 66 காசு விலையில்) வழங்கப்படும். உயர்ந்த ரக அரிசி சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள், வசதி உள்ளவர்கள், அந்த ரகங்களுக்கு உரிய பழைய விலையில் வாங்கிக் கொள்ளலாம்.

இந்த இரு நகரங்களில் மட்டும் திட்டத்தைச் செயல்படுத்த, ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி 77 லட்சம் ரூபாய், அரசாங்கத்திற்குச் செலவாகும்.

அடுத்து, குடும்பக் கார்டு முறை அமுலில் உள்ள இடங்களுக்கும் திட்டத்தைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாநிலம் முழுவதும் செய்ய, சுமார் 11 கோடி முதல் 12 கோடி ரூபாய் வரை செலவாகலாம்.

(உணவு அமைச்சரின் சிறப்பு அறிக்கை—அடுத்த இதழில்)

---

### நிர்வாக ஆலோசகர் நியமனம்

தமிழக அரசின் ஓய்வு பெற்ற துணைச் செயலாளர் (Retired Deputy Secretary to Government) திரு நல். முருகேச முதலியார் அவர்கள், நிர்வாக ஆலோசகராக (Special Adviser) நியமிக்கப்பட்டிருக்கிருர். அவர், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், 1967 ஏப்ரல் 13-ந் தேதி அன்று அலுவல் பொறுப்பு ஏற்ருர்.



1



2



3



4

படங்கள் 1-2 : சிறந்த பணியாற்றியுள்ள எழுபது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு விருதுகள் அளிக்கப்பட்டன. 27—3—67-ல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், தமிழகக் கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கினர் முதலமைச்சர் விழாவுக்குத் தலைமை தாங்கினர். கல்வி அமைச்சர் பாராட்டுரை வழங்கினர்.

படங்கள் 3-4 : திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த அரசினர் மாணவியர் விடுதியின் ஆண்டு விழாவில ஹரிஜன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்குப பரிசுகள் அளித்து. அறிவுரை வழங்கினர். மாவட்ட ஆடசித் தலைவர் திரு எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., விழாவுக்குத் தலைமை தாங்கினர். (7—4—67)













படம் 1: 30—3—67-ல் முதலமைச்சருக்கு சென்னை பத்திரிகை நிருபர்கள் வரவேற்பளித்தனர்.

படம் 2: மாவட்ட பிரச்சார அதிகாரிகள் மகாநாடு, சென்னையில் 12—4—67 அன்று நடைபெற்றது. செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து மகாநாட்டில் கருத்துரை வழங்கினர்.

படம் 3: உலக சுகாதார தினம் 7—4—67-ல் சென்னையில் கொண்டாடப் பட்டது. சுகாதாரத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா துவக்க உரை ஆற்றினர்.

படம் 4: இந்து மத பிரச்சாரகர்கள் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு, 31—3—67-ல் கல்வி-தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் சான்றிதழ்கள் வழங்கினர்.

படம் 5: சென்னையில் நடைபெற்ற கைத்தறிப் பொருட்காட்சியை முதலமைச்சர் 21—4—67 அன்று பார்வையிட்டார்.









படம் 1 : நீலகிரி மலைப் பகுதியில் வாழும் தோடர்களு (Todas) டன் முதலமைச்சரும், ஹரிஜன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்துவும் (உதக மண்டலம்—24-3-1967).

படம் 2 : கோயமுத்தூரில் உள்ள ஹரிஜன மாணவர் விடுதியை ஹரிஜன நலத்துறை அமைச்சர் 25-3-67-ல் பார்வையிட்டார்.

படம் 3 : பாதாள நீர் ஆராய்ச்சித் திட்டம் (Ground Water Investigation Project) குறித்து டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி டாக்டர் மிக் டியார்மிட் (Dr McDiarmid) 7-4-67-ல் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில அமைச்சர்களுடன் கலந்து பேசினர். அன்னாருடன், கல்வி, தொழில் அமைச்சர் திரு வி. ஆர். நெடுஞ்செழியனும், உள்ளாட்சி—பஞ்சாயத்து அமைச்சர் திரு மா. முத்துசாமியும்.

படம் 4 : தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினரால் அம்பத்தூரில் கட்டப்பட்டுள்ள புதிய பஸ் தங்கு நிலையத்தை (Depot) பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி 10-4-67 அன்று திறந்துவைத்தார். அரசுப் போக்குவரத்து ஊழியர்களுடன் அமைச்சர் அவர்கள் அளவளாவுதல்.

படம் 5 : காஞ்சிபுரம் நகராட்சி மன்ற மேல்நிலை நீர்த் தொட்டியை முதலமைச்சர் 15-4-67-ல் திறந்து வைத்தார்











படம் 1: 22—4—67-ல் சென்னை பாலர் அரங்கில் "மக்கள்தொகைப் பெருக்கமும் குடும்பக் கட்டுப்பாடும்" என்பது பற்றி யூனியன் சுகாதார குடும்பக் கட்டுப்பாடு அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் உரையாற்றினார். முதலமைச்சர் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

படம் 2: அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் சுப்பிரமணியபுரம் பள்ளிக் கட்டிடத்தை 18—4—67-ல் தமிழக முதலமைச்சர் திறந்துவைத்தார்.

படம் 3: தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-67-ம் ஆண்டில் கதர் விற்பனையில் முதலிடம் பெற்றதற்கான வெள்ளிக்கேடயப் பரிசினை, உள்ளாட்சி-பஞ்சாயத்துத்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களிடமிருந்து அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் தலைவர் திரு இரா. இராசன் பெறுகிறார்.

படம் 4: பள்ளிக்கூட-கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சிறுசேமிப்பு பற்றிய பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழா கோயமுத்தூரில் அண்மையில் நடைபெற்றது. செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பரிசுகள் வழங்கினார்.

படம் 5: சென்னையில் வீட்டு வசதி போர்டினால் நடத்தப்பெறும் குடியிருப்புகளைப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதியும் சட்டம்-கூட்டுறவு அமைச்சர் திரு எஸ். மாதவனும் பார்வையிட்டனர். சைதாப்பேட்டை ஜாபர்கான்பேட்டை வாசிகளுடன் அமைச்சர்கள். (28—4—67)





# ஏற்றமிகு எழுச்சி

## உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிந்தனைக் கோவை

தமிழகத்தின் ஊராட்சி மன்ற வரலாற்றில் இன்று ஒரு புதிய எழுச்சி காணப்படுகிறது. பயன் பெருகத்தக்க மாற்றங்கள் செய்யலாம் என்ற புதிய சிந்தனை தோன்றியுள்ளது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள புதிய அரசு, பிரச்னைகளைத் தீர்ப்பதில் துடிப்பும் இலட்சிய ஆர்வமும், விறுவிறுப்பான நடைமுறைப் போக்கும் கொண்டுள்ளது. இதனை, அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் அண்மையில், பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றிய உரைகள் வாயிலாக அறியலாம்.

''சுகத்தை அனுபவிக்கவோ, சோம்பிக் கிடக்கவோ, அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை: சுறுசுறுப்பாக இயங்கி, சிந்தனையிலும் செயலிலும், புது மிடுக்கைப் புகுத்தி, எங்கும் எதிலும் செயல் திறனை ஊக்கிவிடவே வந்திருக்கிறேன்'' என்று திட்டவட்டமாக விளக்கிச் சொல்வது போல், அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவற்றின் உட்கருத்தாகத் தொக்கி நிற்பது, அரசு மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், மக்களின் ஒத்துழைப்பில், அரசு வைத்துள்ள நம்பிக்கையுமே ஆகும். —ஆசிரியர்.

சீர்காழி அருகே வைரவன்கோடியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்களுக்கு மக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். மக்களின் அன்பையும ஆர்வத்தையும் கண்ட அமைச்சர் மனம் நெகிழ்ந்து பேசினார்.

''நான் இங்கு வந்து சேர்ந்த நேரம் பட்டப் பகலல்ல; மஞ்சள் வெயில் கொஞ்சும் மாலை நேரமல்ல. நட்ட நடு நிசி. எல்லோரும் உறக்கத்தை அணைத்துக் கொள்ளும் நேரம். இந்த நேரத்தில்கூட இவ்வளவு பெருந்திரளாக மக்கள் குழுமி என்னைக் காணக் காத்திருக்கிறீர்கள் என்றால், உதயமாகியிருக்கும் புதிய அமைச்சரவையின்மீது நீங்கள் வைத்துள்ள நன்னம்பிக்கையைத்தான் அது காட்டுவதாக நான் அறிகிறேன்.''

''நாங்கள் புதுமை விரும்பிகளே தவிர, மக்களுக்குப் புதியவர்கள் அல்ல''

''ஆசிரியர்க்கும் கல்விக்கும் பாடுபடுவதிலே நான் ஆசிரியனாகவும், மக்களுக்குப் பாடுபடுவதிலே நான் ஊழியனாகவும், ஆற்றல் புரிவதிலே அமைச்சனாகவும் இருந்து பணியாற்றுவேன்.''

### செந்தமிழின் அழகு

மொழியை விழியைப்போல் போற்றிவரும் பெருமை தமிழ் மக்களுக்கு உண்டு. இதனை அமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் மிக நயமாக விளக்கினார். சென்னை மவுண்ட்ரோடில் உள்ள மாவட்ட நூல் நிலைய அரங்கில் தல நிதி கணக்குத் தணிக்கைக் கலாசாரக் கழகத்தை அவர் தொடங்கி வைத்துப் பேசுகையில் செந்தமிழின் சிறப்பைச் சுவைபட எடுத்துச் சொன்னார். தமிழ் மறையாகிய திருக்குறள் பற்றிக் குறிப்பிட்டபோது செந்தமிழரின் சிந்தை குளிர்ந்தது. ''திருக்குறளுக்கு ஈடாக உலகில் நல்ல இலக்கியம் இருப்பதாகக் கூறமுடியாது. நல்ல இலக்கியங்கள் சிலவற்றைப் படைத்த தமிழகத்தில் பிற்காலத்தில் இலக்கியச் சிதைவுகள் ஏற்பட்டுவிட்டன. தமிழகம் மீண்டும் நல்ல பல இலக்கியங்களைப் படைக்க வேண்டும். அந்த இலக்கியங்கள் உலகமெல்லாம் பரவ வேண்டும்.''

மக்களாட்சியின் அடித்தளங்களாக விளங்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் மேலும் அதிகாரங்களை வழங்கி அவற்றை வலுவான மக்கள் அமைப்புக்களாக உருவாக்கத் தமிழக அரசு முனைந்து நிற்கிறது. அரசின் இந்தப் பேரார்வத்தை, கோவை நகர மன்ற வரவேற்பில் அமைச்சர் பேசுகையில் எதிரொலித்தார். அதிக அதிகாரம் வழங்கவேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்திருப்பதாகச் சொன்னார். அங்கு அவர் தெரிவித்த யோசனை: "ஏழை மக்களைப் பாதிக்கிறது என்பதால் மேலும் மேலும் பல வரிகளை நீக்க வேண்டும் என்று நகரசபைகளும் பஞ்சாயத்துக்களும் கேட்கின்றன, இவைகளோடு பல சலுகைகளும் கேட்கிறார்கள். இவைகளைக் கேட்கும் இதே நேரத்தில், நகர சபை வருமானத்தை உயர்த்துவதற்கான வழி முறைகளையும் அவர்கள் காணவேண்டும். வரி பாக்கியைத் தீவிரமாக வசூலிக்க வேண்டும். அரசின் நிதி வசதி பெருகினால் நகரசபைகளின் கோரிக்கைகளை ஏற்கலாம்."

### ஏழை மக்கள் பக்கம்

ஏழை எளியவரின் ஏற்றமே அரசின் குறிக்கோள் என்பதை நிரூபிக்கும் வகையில், திண்டுக்கல் சென்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் ஏழை எளியவர்களும் உடல் வருந்தி உழைக்கும் மக்களும் வாழும் குடிசைப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். மக்களின் நல்வாழ்வுக்கான பல கோரிக்கைகள் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டன. திண்டுக்கல் நகரில் மட்டும் மக்கள் 120 மனுக்கள் கொடுத்தார்கள். திண்டுக்கல் நகர மன்ற ஊழியர்களின் சார்பாகவும் மனு கொடுக்கப்பட்டது.

பாளையங்கோட்டையில் நகராட்சி வரவேற்பு. அதற்குப் பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் சொன்னார்: "தற்போதைய பொருளாதார நிலையில் தமிழகம் பற்றாக்குறையில் இருக்கிறது. எனவே, தேவைகளை எப்படிச் சரிக்கட்டுவது என்ற சிக்கல் ஏற்பட்டது. எனினும், அரசாங்கத்திற்கு மக்கள் தரும் முழுமையான ஆதரவாலும் அரசாங்கச் செலவினங்களில் செய்யக்கருதியுள்ள கடுஞ் சிக்கனத்தாலும் நிலைமையைச் சமாளிப்போம் என நான் நம்புகிறேன்."

அமைச்சர் தொடர்ந்து கூறினார்: "கடன்களைத் தீர்க்கவும் உணவுப் பிரச்னைகளை ஒழிக்கவும் தமிழக அரசாங்கம் முதலில் முயலும். பின்னர் பிற பிரச்னைகள் வரிசை வரிசையாக எடுத்துக் கொள்ளப்படும்."

### மக்கள் தரும் கருத்துக்கள்

ஸ்ரீவைகுண்டம் கூட்டத்தில் பேசுகையில் முழங்கினார்: "இங்கு வந்து அரிய கருத்துகளைக்கூற நான் வரவில்லை. அரிய பெரிய கருத்துக்களைப் பெற்றுப்போகத்தான் வந்திருக்கிறேன்."

"மகத்தானதோர் பொறுப்பைத் தந்திருக்கிறீர்கள். மிகவும் சாமானியமானவர்கள் நாங்கள் என்றாலும், மனதிலே தூய்மை என்ற செல்வம் இருக்கிறது."

"ஊராட்சி மன்றங்கள் செழிப்புடன் வளர ஆயிரமாயிரம் மடங்கு அதிகமான ஒத்துழைப்புக்களை நீங்கள் தரவேண்டும். நீங்கள் தரும் ஒத்துழைப்பின் மூலம் சிறந்த நிர்வாகம் நடத்துகிறேன் என்ற பெயரை நான் வாங்கவேண்டுமானால், உங்கள் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று உளமார நான் நம்பியே இங்கே பேசுகிறேன்."

"சாமானியமானவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தாலும், இந்த நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்களாக இருந்து, அதற்காக அடி, உதை, மிதி, அல்லல், சிறைவாசம் என்ற கொடுமைகளைத் தாங்கி, மனைவி, மக்களை மறந்து சிறைகளில் வாடியவர்கள் நாங்கள்: தமிழ் வாழவேண்டும் என்ற எண்ணமுடைய நாங்கள் ஆட்சிக்கு வந்த பின் தமிழுக்கு அளிக்கவேண்டிய உரிய இடத்தை அளித்து வருவதை நீங்கள் பார்த்து வருகிறீர்கள்."

### ஏழ்மைக்கு உயர்வு

"எனக்கெல்லாம் அமைச்சர் பதவி தரப்பட்டிருக்கிறது என்றால் மாமேதை என்றோ, தெரிந்தவர் என்றோ தரப்படவில்லை: தொண்டுக்கு உயர்வு, தோழமைக்கு, ஏழ்மைக்கு உயர்வு, நேர்மைக்கு உயர்வு தரப்பட்டிருக்கிறது என்றுதான் பொருள்."

நெல்லையில் அமைச்சர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்தார். நெல்லை நகரில் நடந்த பள்ளிக்கூட நிகழ்ச்சியிலும், களக்காட்டில் ஊராட்சி மன்றம் அளித்த வரவேற்பிலும் கலந்து கொண்டார். கலெக்டர் அலுவலகத்தில் நடந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் கலந்து கொண்டு பேசினார்.

அங்கே பேசும்போது, அரசியல் காரணமாக ஆசிரியர்களைப் பழிவாங்கும் போக்கு மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நெல்லை நகராட்சி ஆசிரியர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் கூறினார்:

"ஆசிரியர்களின் குறைகள் புதிய ஆட்சியில் நிச்சயம் அகற்றப்படும்.

ஆசிரியர்கள் சார்பில் இங்கே வரவேற்பளிக்கப்பட்டுள்ளமையால் நான் பெரிதும் மகிழ்வடைகிறேன்.

நானும் துவக்கத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியனாகவும் பின்னர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியனாகவும் பணியாற்றியிருக்கிறேன். ஆகையினாலே ஆசிரியர்களுக்குள்ள குறைகள் எனக்குத் தெரியும்—ஆகவே அப்படிப்பட்ட குறைகளைப் போக்கும் நடவடிக்கைகளைப் புதிய அரசு நிச்சயம் மேற்கொள்ளும்."

### ஆசிரியர் சமுதாயத்திற்கே பெருமை

"தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்கள், ஆசிரியராகப் பணியாற்றிய என்னை அமைச்சராக்கியிருப்பதன் மூலம் ஆசிரியர் சமுதாயத்திற்கே மதிப்பளித்துள்ளார்.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் சிறந்து விளங்கியது நம் நாடு. இன்றையப் புலவர்கள் தமிழின் பெருமையை நல்ல முறையில் உணர்ந்து சொல்லவேண்டும்" என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

—'ரதன்'

**ஆய்வுக் கட்டுரை :**



# வள்ளுவர் விளக்கும் வாய்மை நெறி

[திரு எம். சண்முகசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., துணைச் செயலாளர், சட்ட மாமன்றத்துறை]

திருக்குறள் உலகப் பொதுமறை. தனி மனிதன் நல்வாழ்வுக்கும், சமுதாய அறநெறிக்கும் உள்ளங்களின் இன்ப, அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டும் தனிப்பெருமை திருக்குறளுக்கு உண்டு. தமிழ் நாட்டில் தோன்றிய இந்தச் சான்றோர் நினைவாக, இவ்வாண்டு மே 24-ந் தேதி திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடப்படும். தமிழக அரசு இதற்கெனச் சிறப்பு விடுமுறை நாள் அளித்துள்ளது.

திருக்குறளில் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை ஒழுக்க நெறிகள் சிறந்த முறையில் தொகுத்தளிக்கப்படுகின்றன. சிலவகைகளில் சட்ட நெறிகளைப் போல் அவை தோன்றினாலும், அவற்றிற்கு அப்பாற்பட்ட அறநெறிக்கு மிக நெருங்கிய தொடர்பு கொண்டனவாக திருவள்ளுவர் கருத்துக்கள் ஒளி வீசுகின்றன.

சட்டத்துக்கும் அறத்துக்கும் உள்ள நுட்பமான உறவையும் பொருளையும் ஆராய்ந்து கூறுகிறது, கீழே காணப்படும் திறனாய்வுக் கட்டுரை. இதை ஆக்கிய ஆசிரியர் சட்டத்தில் பட்டமும், புலமையும் பெற்றிருப்பதோடு தமிழக சட்ட மாமன்றத்தின் துணைச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். சட்டத்தைப்பற்றி மேனாட்டுப் பேரறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டி, திருக்குறளில் இவற்றின் சாயல் எவ்வளவு திட்ப நுட்பமாகக் காணப்படுகின்றது என்பதைச் சுவைபட விளக்கியுள்ளார். குறிப்பாக, வாய்மை, உண்மை, ஆகியவற்றின் பொருளையும் அவர் ஆய்ந்து கூறுவது, அனைவரின் கருத்துக்கும் விருந்தாக அமையத்தக்கது.

—ஆசிரியர்

அறம் என்ற தமிழ்ச் சொல்லின் பொருளை அவ்வாறே உணர்த்தும் ஆங்கிலச் சொல் இல்லை. ஆங்கிலத்தில் அறம் என்ற சொல்லை குறிப்பதற்கு இயற்கை நீதி (Natural Justice) இயற்கை நெறி (Natural Law) ஒழுக்க நெறி (Moral Law) நன்னெறி (Ethics) என்ற சொற்களே பயன்படுகின்றன. ஏறத்தாழ வள்ளுவர் வாழ்ந்த காலத்திலேயே கிரேக்க நாட்டில் தோன்றிய அரிஸ்டாடல், பிளேட்டோ என்பவர்களும் அறம் என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தித்திருக்கின்றனர். அறம் என்பது அறிந்துகொள்ளமுடியாத தெய்வீகமான மறை பொருள் என்பது பிளேட்டோவின் கருத்து. ரோம் நாட்டு ஜஸ்டீனியன் (Institute of Justinian) சட்டக்

கோவை "இயற்கை நெறி என்பது இறை ஆற்றலால் எழுந்து நிலவுவது. எல்லா நாட்டினர்களும் பொது வாகப் பேணுவது, என்றும் மாறாது நிலைத்திருப்பது" என்று கூறுகிறது. பிற்காலத்தில் 'பிளாக்ஸ்டன்' என்ற ஆங்கில அறிஞர் "அறம் என்பது இறைவனால் வகுக்கப் பட்டது. மற்ற கடமைகளை எல்லாம்விட சிறந்தது. உலக அனைத்திற்கும் பொதுவானது" என்று கூறியுள்ளார்.

### சான்றோர் சென்ற நெறி

இவ்வாறு மேலைநாட்டு அறிஞர்கள் தெய்வீக மறைப் பொருளாகக் கருதிய அறத்தினை, நம் முன்னோர்கள் சான்றோர் சென்ற நெறியாகக் கருதினார்கள். பிற் காலத்தில் வந்த மேலைநாட்டு சட்ட அறிஞர்கள் அறம் என்பதை இந்த உலக வாழ்வில் இன்பம் எய்துவதற்கு ஏற்ற ஒரு சாதனமாகவே கருதினர். "இன்பத்தை என்றும் நாடும் மனிதனது பண்பே அவனது அற வேட்கையாக அமைகிறது" என்று கெல்சன் என்ற அறிஞர் கூறுகின்றார். ("The longing for Justice is Man's eternal longing for happiness") வள்ளுவர் "அறத்தான் வருவதே இன்பம்" என்கிறார். பிறர்நலம் பேணாதாய் தன்னலம் மட்டுமே குறிக்கும் இன்பம் உண்மையான இன்பம் அன்று. தனிப்பட்ட ஒவ்வொரு வரும் தம் எண்ணத்துக்கு ஏற்ற இன்பத்தை நாடுவது அறநெறியும் அன்று. கெல்சன் "அறம் என்பது சமுதாய இன்பம்" (Justice is social happiness) என்கிறார்.

வள்ளுவரும் அறத்தால் வரும் இன்பத்தை, சமுதாய இன்பமாகவே கொள்கிறார். "அறத்தான் வருவதே இன்பம்—மற்றெல்லாம் புறத்த புகழும் இல" சமுதாய இன்பம் என்று இன்றைய சட்ட அறிஞர் கூறுவதை "புகழோடு எழுந்த இன்பம்" என்று வள்ளுவர் கூறுகி றார். எந்தப் பண்புகள் மக்களின் இன்ப வாழ்விற்கு ஏற்றவை என்று நம் அறிவும் அனுபவமும் உணர்த்து கின்றனவோ, அந்தப் பண்புகள் அனைத்தும் அறம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

### சமுதாய இன்பம் பயப்பதே அறம்

உயர்ந்த தெய்வ நெறியாக நின்று உலக வாழ்வோடு ஒன்றாதது, மற்றையோர் கண்ட அறம்: வையத்து வாழ்விலே நிலவி வான்புகழ் பயப்பது வள்ளுவர் கூறும் அறம். வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்கள் என்று சிறப்பித்து அவர்களை வானுறையும் தெய்வ நிலையில் உள்ளவர்களாகப் போற்றுகிறார் வள்ளுவர். இவ்வாறு அறம் என்று சொல்லின் கருத்துக்கு வள்ளு வர் கூறும் இலக்கணமும் இன்றைய சட்ட அறிஞர்கள் கூறும் இலக்கணமும் ஒன்றி நிற்பதை நாம் காணுகி றோம். சமுதாய இன்பம் பயப்பவை அனைத்தும் அறம் ஆகின்றன.

இந்த இடத்தில் மணிமேகலை ஆசிரியரான புலவர் சாத்தனார் அறம் என்ற சொல்லுக்குக் கூறியுள்ள இலக் கணம் நினைவு கூறத்தக்கது.

"அறம் எனப்படுவது யாது? எனக்கேட்பின், மறவாது இது கேள்: மண்உயிர்க்கு எல்லாம் உண்டியும், உடையும் உறையுளும், அல்லது கண்டது இல்."

"உண்டியும் உடையும் உறையுளும் அளிப்பதுதான் அறமா?" என்று நாம் வியக்கின்றோம். சட்ட அறிஞர் கெல்சனும் தமிழ்ப் புலவர் சாத்தனாரின் வாக்கை மொழி பெயர்த்திருப்பது போலவே அறத்தைப்பற்றி பின் வருமாறு கூறுகிறார்:—"சமுதாயத்தில் உள்ளோர் களின் பொதுவான தேவைகள் எவை என்று சமு தாயத்தினர் கருதுகின்றார்களோ அந்தத் தேவைகள் நிறைவுறுவதுதான் சமுதாயத்திற்கு பொதுவான இன்ப மாகும். உணவும், உடையும், உறையுளும் உள்ள தேவை கள் நிறைவேறுதல் சமுதாயத்திற்கு பொதுவான அறமா கும்." ("By happiness we must understand the satisfaction of certain needs recognised by the social authority, the Law giver has needs worthy of being satisfied such as the needs to be fed, clothed, housed and the like.")

### அறமும் சட்டமும்

அறத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பை காண் போம். அறம் என்பது மக்களின் இசைந்த வாழ்விற்கு இன்ப வாழ்விற்கு ஏற்ற பண்புகளை உணர்த்துகிறது. சட்டம் என்பது மக்களின் இன்ப வாழ்வுக்கேற்ற வகையில் அவர்களிடையே எழும் உறவு முறைகளை ஒழுங் குறச் செய்கிறது. எனவே அறமும் சட்டமும் மக்களின் இன்ப வாழ்வினை இலக்காகக் கொண்டே இயங்குகின்றன. மனிதனின் தீய எண்ணம் செயலாக வெளிப்படும்போது சட்டம் அதைத் தடுக்கிறது. அறமோ அவனது உள்ளத்தை உயர்த்த முற்படுகிறது.

அறம் தனி மனிதப் பண்பினை உயர்த்தும் வகையால் சமுதாய இன்பத்தை வளர்க்கிறது. சட்டம் சமுதாய நலனை காக்கும் வகையால் தனி மனிதனின் நடத் தையை ஒழுங்குறச் செய்கிறது. "நன்மையைச் செய்" என்று அறம் காரணங்காட்டி மக்களை நல்வழிப் படுத்துகிறது. சட்டம், கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது. சட்டம் அச் சுறுத்துகிறது. அறம் மக்களின் சிந்தனையை உயர்த்து கிறது. செயல்களைத் திருத்துகிறது சட்டம். மக்கள் மனத்திலே இயல்பாயெழுவது அறநெறி. மக்களால் இயற்றப் பெறுவது சட்ட விதி. அறம் மாறாத நெறி யினைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண் டது. ஆயினும், அறநெறிகள் அனைத்தும் சட்ட விதிக ளாவதில்லை. அன்புடைமையும் அருளுடைமையும் விருந் தோம்பலும், வெகுளாமையும், அறநெறிகள். ஆனால் அவை சட்ட நெறி அல்ல. ஒப்புரவறிந்து வாழவேண்டும் என்று அறம் கூறுகிறது. ஆனால் ஒப்புரவினை, சட்டம் கட்டாயப்படுத்தி அமுல் நடத்துவதில்லை.

அரசு தன் வலிமையினுல் சட்ட விதிகளைச் செயல்படுத்துகிறது என்றுலும், சட்ட நெறியினை மக்கள் போற்றிப் பணிவது, அதில் அடங்கியுள்ள அறநெறியினுல்தான்.

### தீமை பயவாத சொல்லே வாய்மை

வாய்மை என்பது தலையாய ஒழுக்க நெறி. வள்ளுவர் உண்மை உரைத்தலை வாய்மை எனக் கூறவில்லை. தீமை பயவாத சொல்லே வாய்மை என்று அவர் கூறுகிருர். சட்டத்தில் ஒருவர் உண்மையைக் கூறுவதே சில சந்தர்ப்பங்களில் குற்றமாகிவிடலாம். ஒருவரின் உண்மைக் கூற்றினுல் பிறரின் புகழுக்குக் கேடு விளைந்தால் அது அவதூறு (defamation) என்ற குற்றமாகும். அவதூறு இழைத்தவர் கூறியது உண்மையா இல்லையா? அவதூறு செய்தி உள்ளது மெய்யா, பொய்யா என்பதைப் பற்றி சட்டம் ஆய்வது இல்லை. பிறருக்கு இழுக்கு விளைவிக்கவேண்டும் என்ற கருத்துடன் அவதூறு குறையை, குற்றம் சாட்டப்பட்டவர் வெளியிட்டாரா, வசை சாற்றினுரா என்பதையே சட்டம் கவனிக்கிறது. எனவே, உண்மையைக் கூறுவதின் மூலம் பிறருக்கு அவதூறு விளைந்தால் அது குற்றமே யாகும். இதை, குற்றத் தொகுப்புச் சட்டம் 499-ம் பிரிவில் காணகிறேரும். குறை தீர்ந்த நன்மை பயக்கும் எனில் பொய்மையும் வாய்மை எனக் கொள்ளத்தக்கது. நிகழ்ந்தது கூறலும் நிகழாதது கூறலும் நன்மை பயந்தால் வாய்மையாகின்றன. தீமை பயந்தால் பொய்மை யாகின்றன. உண்மை உரையும் தீமை விளைவித்தால் வாய்மையற்றது. பொய்யுரையும் நன்மை விளைத்தால் வாய்மை இடத்தது. இவ்வாறு குறள் நெறியில், விளையும் பயனைவைத்தே, சொல்லின் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

### மெய்ம்மையிலும் மேலானது வாய்மை

"பொய்யாமை பற்றிக் கூறும் வள்ளுவர் மெய்ம்மையின் பெருமையை மறந்துவிடுவாரா ? எத்தகைய நன்மையை பயந்தாலும், மெய்ம்மைக்கு மாருன உரையை, பொய்யுரையை, ஒருவர் கூறலாமா ? என்ற ஐயப்பாடு உடையவர்களின் உள்ளத்தைத் தெளிவிக்கும் முறையில், வாய்மை அதிகாரத்தின் இறுதிக் குறள் அமைந்திருக்கின்றது. தாமே பதில் கூறி ஐயம் தெளிவிக்கும் வகையில், அக்குறளை ஆசிரியர் திருவள்ளுவர் கூறியுள்ளார்:—

**"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"**

மெய்யெனக் கண்டவற்றுள் வாய்மையைவிடச் சிறந்தது வேறு இல்லை என்று நேரிடையாகப் பதிலளிக்கிருர் திருவள்ளுவர். தீமையிலாத வாய்மைதான் மெய்ம்மையினும் மேலானது என்று ஆணித்தரமாகக் கூறி ஐயம் தெளிவிக்கின்ருர்.

இசைந்த சமுதாய வாழ்வுக்கேற்ற இன்ப நெறிதான் குறள் கூறும் அறநெறியாக விளங்குகிறது. சமுதாய வாழ்க்கை நெறி முறையே சட்ட நெறியாகியது. எனவே குறள் நெறியில் சட்ட நெறியும் இணைந்து நிற்கிறது என்ற உண்மையினை நாம் நன்கு உணரலாம்.

## தாய் மொழியை வளப்படுத்துவோம் :

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

### உயர்வான செம்மொழி. தமிழ் மொழி

கிரேக்க மொழி, லத்தீன் மொழி, ஈப்ரு மொழி, இவைகள் ஏட்டளவில் நின்றுவிட்டதுண்டு; பேச்சு வழக்கின்றி மறைந்ததுண்டு. வட கோடி சீனன் பேசுகின்ற மொழி, தென்கோடி சீனன் புரிந்து கொள்ள மாட்டான். தென்கோடி சீனன் எழுதுவதை வட கோடி சீனன் புரிந்துகொள்ள மாட்டான். அந்தளவுக்கு, கருத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் அந்த மொழி சிதைந்து கிடக்கின்றது. ஆனுல், நமது தாய்மொழியாம் தமிழ், உயர்வான செம்மொழி. அன்று தொட்டு இன்று வரை, அதனுடைய கட்டுக்கோப்பு குலையாதவாறு நீண்ட காலத்திற்கு முன்னுலேயே நமது பெரும் இலக்கியப் புலவர்கள், அந்தக் கட்டுக்கோப்பை வளர்த்து வரையறுத்ததன் விளைவாகத்தான 2500 ஆண்டுகளுக்கு முன்னுல் இயற்றப்பட்ட தொல்காப்பியத்தை, 1967-லேயும் புரிந்து கொள்ள முடிகிறது. அந்தக் கட்டுக்கோப்பை நமது புலவர்கள் நிலை நிறுத்தாமல் போயிருந்தால், இந்தத் தமிழ் வேறு ஒரு மொழியாக ஈப்ரு, லத்தீன், கிரேக்க மொழியைப்போல் ஆகியிருக்கும். அவ்விதம் வளர்ந்த தமிழ், அறிவியல் ஆற்றலில், வேறு மொழியை விடச் சிறந்த மரபைத் தந்திருக்கிறது

இல்லங்களிலே உட்கார்ந்து பேசுவதற்காக இருக்கின்ற வரவேற்பு மண்டபத்தில், இந்த நூல்களை எல்லாம், கொலு வைப்பதைப் போல, காட்சியாக, அழகாக, அடுக்கி வைக்கலாம். அந்தக் கொலுவில் பத்து இருபது புத்தகங்களை ஒவ்வொரு வீட்டிலும் வைப்பதன் மூலம், வருபவர்கள் உட்கார்ந்து தங்கள் பொழுதை வீணுகக் கழிக்காமல், சில பல நூல்களைப் படிக்கத் தொடங்குவார்கள். அது நல்ல பொழுது போக்காக அமைவதோடு, அறிவையும் பெருக்கும். 'இந்த நூல்களை வாங்கினுல் நல்லது' என்று அவர்களுக்கும் தோன்றும். எங்கே விற்கிறது, என்று கேட்டால், 'இங்கே விற்கிறது' என்று சொல்லலாம். கிடைக்குமா என்ருல், இங்கே கிடைக்கும் என்று சொல்ல முடியும். இப்படியாக, ஒவ்வொருவரும் இருபது முப்பது புத்தகங்களாகச் சேர்ந்துப் படிக்கக்கூடிய தூண்டுதலை, நீங்கள் வளர்க்கவேண்டும். அப்பொழுதுதான், இந்த நூல்கள் விலைபோகும். இந்தப் புத்தகங்களுக்கு கிராக்கியும் ஏற்பட்டு, இரண்டாம் பதிப்பு வெளியிடுகின்ற நிலையும் ஏற்படக்கூடும். அந்த வகையில் பொதுமக்கள் இதில் பங்கெடுத்து ஒத்துழைக்க வேண்டுகிறேரும்."

**கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையின் ஒரு பகுதி.**

—:0:—

# விருது பெற்ற ஆசிரியர்கள்

சென்னை இராஜாஜி மண்டபம், மார்ச்சு மாதம் 27-ம் தேதி அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. தமிழகத்தில் சீரிய பணியாற்றியுள்ள 70 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு, அன்று, விருதுகள் வழங்கப்பட்டன. அறிவுத் தீபத்தை மங்காமல், மறையாமல், அழிந்து படாமல், காலங் காலமாக காப்பாற்றி வரும் ஆசிரியர் சமுதாயத்தை, விருதுகள் வழங்கி, பெருமைப்படுத்தியது தமிழக அரசு.

சமுதாயத்தின் ஊற்றுக் கண்கள் ஆசிரியர்கள். சின்னஞ் சிறு பிஞ்சு உள்ளங்களிலே சீரிய அறிவுக் கருத்துக்களை மெல்ல மெல்லப் புகட்டி—அந்த சின்னஞ் சிறு பிஞ்சுகளை எதிர்காலத்தில் நாட்டின் நல்லவர்களாக—எழில் மிக்க சமுதாயத் தொண்டர்களாக—ஏற்றமிகு அறிவாளிகளாக மாற்றிவிடுகின்ற திருப்பணியைத் திறம்படச் செய்து முடிக்கின்ற பள்ளி ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய சிறந்த சேவைக்காக, அரசினால் விருதுகள் வழங்கப்பட்டன. ஆற்றுகின்ற சேவை—அது எத்துறையின் பாற்பட்டதாக இருந்தாலும்—மதிக்கப்பட வேண்டும்—பாராட்டப்பட வேண்டும்—அப்பொழுதுதான் உண்மையான தொண்டாற்றும் உள்ளங்களிலே உத்வேகம் பெருகும்—உற்சாகம் பீறிடும்—அந்த வகையில், சிறந்த தொண்டாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கு அளிக்கப்படும் பாராட்டுதல்கள் அத்தனையும், சமுதாயம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றியின் மறு பதிப்புகளேயாகும்.

—ஆசிரியர்.

தமிழக ஆரம்ப ஆசிரியர்களுக்கான ஏழாவது விருது அளிப்பு விழா 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் தேதியன்று மாலை சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் நாட்டில் உள்ள 70 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் விருதுகளை வழங்கிப் பாராட்டினர்.

இடைநிலைக் கல்வி இயக்குநர் திரு எம். டி. பால் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தியாவில் தமிழகம் கல்வித் துறையில் முன்னோடியாகத் திகழ்கிறது. இன்னும் அதிக அளவு முன்னேற்றத்துக்கு உறுதுணையாக நிற்கும் ஆசிரியர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்'' என்று குறிப்பிட்டார்.

கவர்னர் சர்தார் உஜ்ஜில் சிங் தமது பாராட்டுரையில், ''ஆரம்பக் கல்வியின் மேம்பட்ட நிலை, ஆசிரியர்கள் கையில் இருக்கின்றதே தவிர, பாடப்புத்தகங்களைப் படிப்பதனால் மட்டும் அந்த நிலை ஏற்படாது'' என்று குறிப்பிட்டார். தங்களுக்கே உரித்தான இந்தப் பெரும் பணியில் ஆசிரியர்கள் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

**கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம்**

விருது பெற்ற ஆசிரியர்களை தமிழக முதலமைச்சர் பாராட்டிப் பேசுகையில், ''அறிவுச் செல்வத்தை நாட்டிலே வழங்கிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை ஏழ்மை நிலையில் விட்டு வைப்பது, தமிழக அரசின் நோக்கமல்ல'' என்றும், ''ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க தமிழக அரசு அக்கறை கொண்டிருக்கிற''தென்றும் குறிப்பிட்டார். 'ஆசிரியர்களின் பணி வழி வழி வரும் தமிழ்ச் சமுதாயத்துக்கு, என்றென்றும் துணை புரிவதாக இருக்க வேண்டும். தமிழ்ப் பெருங்குடி மக்கள் கல்வியறிவு புகட்டியவரை என்றுமே போற்றிப் புகழ்ந்து வந்திருக்கின்றனர். எனவே, தமிழக அரசு, தொடர்ந்து ஆசிரியப் பெருமக்களுக்கு இத்தகைய கவுரவத்தை அளித்து வருகிறது'' என்றார். ''நாம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தானே'' என்ற சலிப்பு, ஆசிரியர்களுக்கு இருக்கவே கூடாது. நாமே தமிழக கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் என்ற நினைவோடு, ஆசிரியர்கள் மேலும் அரும்பணியாற்ற வேண்டும்,'' எனவும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

விழாவில் பேசிய கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் ''அறிவுடைய செல்வங்களை நாட்டுக்கு வழங்கும் பேராற்றல் உடையவர்கள் ஆசிரியர்கள். மக்களைப் பண்புடையவர்களாக, அறிவாற்றல் உடையவர்களாக உருவாக்கி, நாட்டுக்குத் தரும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆசிரியப் பெருமக்கள்'' என்று குறிப்பிட்டார்.

## விருது பெற்ற ஆசிரியர்கள்:

1. திரு சி. டி. வீரபத்திரன்,
ஆசிரியர்,
நகராட்சி உயர் துவக்கப் பள்ளி,
கிருஷ்ணம்பேட்டை,
சென்னை-5.

2 திரு பி. கிருஷ்ணசுவாமி பிள்ளை,
தலைமையாசிரியர்,
நகராட்சி உயர் துவக்கப் பள்ளி,
பிரகாசம் ரோடு,
சென்னை-17.

3. திரு எம். வி. கந்தசாமி நாடார்,
தலைமையாசிரியர்,
நேஷனல் உயர் துவக்கப் பள்ளி,
சென்னை-13.

4. திருமதி ஹெப்சி பாக்கியநாதன்,
ஆறுமுக நாடார் அரசினர் உதவி பெறும் உயர் துவக்கப் பள்ளி,
56, எம். சி. ரோடு,
சென்னை-21.

5. திரு என். பெருமாள்,
தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்ப ஆதாரப் பள்ளி,
தெந்நேரி,
செங்கற்பட்டு மாவட்டம்.

6. திரு டி. சி. நரசிம்மலு நாயுடு,
தலைமையாசிரியர்,
ஹரிஜன நலப் பள்ளி,
கொன்னூர்,
வில்லிவாக்கம்.

7. செல்வி பத்மாவதி திரிபோசா,
ஆசிரியை,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
திருப்போரூர்.

8. திரு ஆர். சுப்பிரமணியம்,
தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கடப்பாக்கம்,
மதுராந்தகம்,

9. திரு எஸ். ராதாகிருட்டிணன்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
பட்டறை பெரும்பூதூர்,
செங்கற்பட்டு மாவட்டம்.

10. திரு ஏ. சுப்பிரமணியம்,
ஆசிரியர்,
ஹரிஜன நலப் பள்ளி,
கீழமுதலம்பேடு,
செங்கற்பட்டு.

11. திரு கே. பாலசுந்தரம்,
தலைமை ஆசிரியர்,
நகராட்சி முதுநிலை ஆதாரப் பள்ளி,
காரை, இராணிப்பேட்டை,
வட ஆர்க்காடு மாவட்டம்.

12. திரு ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
தலைமை ஆசிரியர்,
கலசப்பாளையம்,
நகராட்சி உயர் ஆரம்பப் பள்ளி,
வேலூர்,

13. திரு ஏ. ஜனார்த்தனம்,
தலைமை ஆசிரியர்,
சன்னதி அரசினர் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி,
வந்தவாசி.

14. திரு ஆர். வடிவேலு,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
தச்சூர், (ஆரணி வழி).

15. திரு எஸ். ராஜா ராவ்,
தலைமை ஆசிரியர்,
அரசினர் உதவி பெறும் முபைத்து—ஆம் ஆரம்பப் பள்ளி,
நெல்லிக்கொல்லை,
வாணியம்பாடி.

16. திரு எஸ். பி. சாமுடி கவுண்டர்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கொண்டகிண்டனப்பள்ளி அஞ்சல்,
வட ஆர்க்காடு மாவட்டம்

17. திரு சிவப்பிரகாசம் பிள்ளை,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் பள்ளி,
கொடிக்கால் தெரு,
பி. முட்லூர் அஞ்சல்,
சிதம்பரம் தாலுகா.

18. திரு எஸ். அந்தோணி,
செயிண்ட் மேரி முதுநிலை ஆதாரப் பள்ளி,
புதுப்பாளையம்,
கடலூர்.

19. திரு எம். பாவாடை,
ஆசிரியர்—மேலாளர்,
ஸ்ரீ சரஸ்வதி அரசினர் உதவி பெறும் உயர்நிலை ஆரம்பப் பள்ளி,
லிங்கரெட்டிப்பாளையம் அஞ்சல்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

20. திரு எஸ். நாகரத்தினம்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கந்தாடு (மரக்காணம் வழி),
தென் ஆர்க்காடு மாவட்டம்.

21. திரு ஆர். கந்தசாமி,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் உயர் ஆரம்பப் பள்ளி,
திட்டக்குடி,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

## விருது பெற்ற ஆசிரியர்கள் :

22. திருமதி ஐ. கனகம் எலிசபெத்,
ஆசிரியை,
பி.எம். பெண்கள் உயர்நிலை ஆரம்பப் பள்ளி,
சிலோம்,
திருக்கோயிலூர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

23. திரு சி. சோமசுந்தரம் பிள்ளை,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
வைப்பூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

24. திரு எஸ். அமிர்தம்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் உயர் ஆரம்பப் பள்ளி,
ஏாவஞ்சேரி,
பூந்தோட்டம் (வழி)
தஞ்சாவூர் மாவட்டம்.

25. திரு வி, ஜகன்னுதன்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் உயர் ஆரம்பப் பள்ளி,
மோகனூர் அஞ்சல்;
கந்தர்வகோட்டை (வழி),
தஞ்சாவூர்.

26. திரு ஏ. வெங்கட்ராமன்,
தலைமை ஆசிரியர்,
ஸ்ரீ பாலகணபதி வித்யாலா, திருவையாறு,
தஞ்சாவூர் மாவட்டம்.

27. திருமதி எஸ். பிரகதாம்பாள்,
தலைமை ஆசிரியை,
பாணுதுறை நகராட்சி ஆரம்பப் பள்ளி.
கும்பகோணம்.

28. திரு ஜே. சந்திரசேகரன்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
தடலம் மேற்கு,
சீர்காழி,
தஞ்சாவூர் மாவட்டம்.

29. திரு ஏ. ஜேசுதாஸ்,
தலைமை ஆசிரியர்,
ஹரிஜன நல உயர் ஆரம்பப் பள்ளி,
சிக்கத்தம்பூர்பாளையம்.
திருச்சி மாவட்டம்.

30. திரு கே. எஸ். நாராயணசாமி,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் உயர் ஆரம்பப் பள்ளி,
திருச்செந்துறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

31. திரு பி. கே. எஸ். முகமது காசிம்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
பெருந்துறை,
திருமயம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

32. திரு எஸ். அய்யாசாமி,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கோட்டைமேடு,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

33. திருமதி மேரி தம்பியப்பன்,
ஆசிரியை,
எஸ். பி. ஜி. உயர் ஆரம்பப் பள்ளி,
அரியலூர்.

34. திரு பி. கே. தனராஜி பிள்ளை,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
ஸ்ரீபுரம்புதூர், கரியமாணிக்கம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

35. திரு எஸ். ஆர். சுப்பிரமணிய அய்யர்,
தலைமை ஆசிரியர்,
சௌராஷ்டிரா உயர் ஆரம்பப் பள்ளி,
நிலக்கோட்டை, மதுரை.

36. திரு சி. முத்துவீரன்,
தலைமை ஆசிரியர்.
ஊராட்சி ஒன்றியம் இளநிலை ஆதாரக் கல்வி,
அய்யம்பாளையம், மதுரை.

37. திருமதி வேதவல்லி ஆர். பாசிங்கர்,
ஆசிரியை,
நேரு வித்தியாசாலை,
மதுரை.

38. திரு டி. வேலாயுதம்,
தலைமை ஆசிரியர்,
நகராட்சி உயர்நிலை ஆரம்பப் பள்ளி,
தல்லாகுளம், மதுரை.

39. திரு எஸ். ரங்கசாமி,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
மேல கூடலூர், கூடலூர் அஞ்சல்,
மதுரை மாவட்டம்.

40. திரு கே. வெள்ளைச்சாமி,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
தேவதானம்பட்டி, பெரியகுளம்,
மதுரை மாவட்டம்.

41. திரு வி. தெய்வக்கண்ணு,
ஆசிரியர்,
பி. பி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளி,
பாளையம்பட்டி அஞ்சல், அருப்புக்கோட்டை.

42. திருமதி லில்லி தேவாரம்,
ஆசிரியர்–மேலாளர்,
ஆர். ஆர். ஆர். கே. உயர்நிலை ஆரம்பப் பள்ளி,
சிவகெங்கை.

43. திரு கோயில் பிள்ளை,
ஆசிரியர்,
கே. வி. சாலா உயர் ஆரம்பப் பள்ளி,
விருதுநகர்.

44. திரு எல். பெருமாள் தேவர்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் பள்ளி,
அ. இலட்சுமிபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

45. திரு டி. எம். எஸ். ராஜரத்தினம்,
ஆசிரியர்,
என். எஸ். எம். வி. பி. எஸ. ஆரம்பப் பள்ளி,
தேவகோட்டை.

## விருது பெற்ற ஆசிரியர்கள் :

46. திரு எம். பி. சுப்பிரமணியன்,
தலைமை ஆசிரியர்,
கைறத்துள் அலியா மேற்கு இஸ்லாமிய முதுநிலை ஆதாரப் பள்ளி,
பரமக்குடி.

47. திரு அ. அன்பையா இக்னேஷியஸ்,
தலைமை ஆசிரியர்,
செயிண்ட் ஆன் உயர் ஆரம்பப் பள்ளி,
கூடன் குளம் (இடிந்தகரை வழி),
திருநெல்வேலி மாவட்டம்.

48. திரு என். எஸ். இரகுநாதன்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் உயர் ஆரம்பப் பள்ளி,
நாங்குநேரி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.

49. திரு கே. உலகநாதபிள்ளை,
தலைமை ஆசிரியர்,
தாகூர் நினைவு உயர்நிலை ஆரம்பப் பள்ளி,
தூத்துக்குடி.

50. திரு எம். சுப்பிரமணியன்,
தலைமை ஆசிரியர்,
நகராட்சி ஆரம்பப் பள்ளி,
வடக்கூர், தூத்துக்குடி.

51. திரு ஏ. ஜே. அப்பாத்துரை,
தலைமை ஆசிரியர்,
டி. டி. டி. ஏ. உயர் ஆரம்பப் பள்ளி,
ரெட்டியார்பட்டி, திருநெல்வேலி.

52. திருமதி பி. தர்மா அன்னம்மாள்,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
பன்போலி, திருநெல்வேலி மாவட்டம்.

53. திரு கே. எஸ். பெரியசாமி அய்யர்,
தலைமை ஆசிரியர்,
ஸ்ரீசீதாலட்சுமி பாலிகா உயர் ஆரம்பப் பள்ளி,
கொடுமுடி, கோவை மாவட்டம்.

54 திருமதி. அமலோத்பவ மேரி,
ஆசிரியை,
ஊராட்சி ஒன்றியம் கிழக்கு ஆரம்பப் பள்ளி,
அந்தியூர் அஞ்சல், கோயமுத்தூர்.

55. திருமதி ஆர். ரங்கம்மாள்,
ஆசிரியை,
ஊராட்சி ஒன்றியம் முதுநிலை ஆதாரப் பள்ளி,
வடுகபாளையம், அவிநாசி, கோவை மாவட்டம்.

56 திரு. ஏ. அந்தோணி முத்து,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் முதுநிலை ஆதாரப் பள்ளி,
ராக்கியப்பாளையம், அவினாசி, கோவை மாவட்டம்.

57. திரு கே. நடராஜன்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கல்லுகரை, மடத்துக்குளம் அஞ்சல்,
கோயமுத்தூர்.

58. திரு பி. கே. முத்துசாமி சேர்வை,
ஆசிரியர்–மேலாளர்,
அரசினர் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி,
செவந்தம்பாளையம், முத்தணம்பாளையம் அஞ்சல்,
பல்லடம் தாலுகா, கோவை மாவட்டம்.

59. திரு எம். தஞ்சா கவுடர்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கெந்தரை, தும்மஹட்டி அஞ்சல், நீலகிரிமாவட்டம்

60. சகோதரி எம். ஷெப்பா,
தலைமை ஆசிரியை,
பெத்தல்ஹேம் உயர்நிலை ஆதாரப் பள்ளி,
உதகமண்டலம்.

61. திரு சி. உலகநாதன்,
ஆசிரியர் – மேலாளர்,
ஸ்ரீ சின்னசுவாமி அரசினர் உதவி பெறும் முதுநிலை ஆதாரப் பள்ளி,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

62. திரு எஸ். எம். அப்துல்லா,
ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
தீவிட்டிப்பட்டி, சேலம் மாவட்டம்.

63. திரு டி. பி. கோவிந்தசாமி,
ஆசிரியர்,
நகராட்சி ஆரமபப்பள்ளி,
அப்பாவு நகர், தர்மபுரி–3.

64. திரு எம். அருணாசலம்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
ஏ. பாப்பாரப்பட்டி. தர்மபுரி.

65. திரு ஐ. சின்னப்பன்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கொங்கணபுரம், சேலம் மாவட்டம்.

66. திரு எல். வீரப்பன்,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியம் ஆரம்பப் பள்ளி,
கரையான்புதூர், முதலிப்பேட்டை அஞ்சல்,
சேலம் மாவட்டம்.

67. திரு எஸ். சிதம்பரத்தாணு பிள்ளை,
தலைமை ஆசிரியர்,
அரசினர் உயர் ஆரம்பப் பள்ளி,
மகாதானபுரம், கொட்டாரம் அஞ்சல்,
கன்னியாகுமரி.

68. திரு கே. முத்துக்குமாரசாமி,
ஆசிரியர்,
அரசினர் முதுநிலை ஆதாரப் பள்ளி,
இராமபுரம், நாகர்கோயில்.

69. திரு எஸ். அமோஸ்,
தலைமை ஆசிரியர்,
அரசினர் முதுநிலை ஆதாரப் பள்ளி,
அருமனை, கன்னியாகுமரி மாவட்டம்.

70. திரு எம். வேலாயுதம்,
தலைமை ஆசிரியர்,
அரசினர் உயர் ஆரம்பப் பள்ளி,
கொல்லங்கோடு, கன்னியாகுமரி.

—0—

# ஏழு பஞ்சாயத்துக்களின் கதை

ஹிமாசலப் பிரதேசத்திலுள்ள கங்க்ரா மாவட்டத்தில், ஹமீர்பூர் வட்டாரம் அமைந்துள்ளது. அங்குள்ள வட்டார அலுவலகத்திற்குள் நுழையும்போது, அங்கே ஏழு பஞ்சாயத்து தலைவர்கள் என் வரவை எதிர்பார்த்து காத்திருந்தனர். அவர்களில் ஒருவர் ஹமீர்பூர் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர். அவர்கள் ஒவ்வொருவரும் வயது, தொழில், பொழுதுபோக்கு, வாழ்க்கை தரம் போன்றவற்றில் மிகவும் வேறுபட்டவர்கள். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கவில்லை. தங்கள் கிராமங்களின் நிலையை விருத்தி செய்து, மக்கள் மேம்பட்டு, நல்வாழ்வு வாழ தங்களால் இயன்றதையெல்லாம் செய்யவேண்டுமென்பதில் அவர்களெல்லாம் ஒரு நோக்குடையவர்களாக காணப்பட்டார்கள். இந்த முயற்சியில் அவர்களுக்கு சில தோல்விகளும் ஏற்பட்டுள்ளன. அமுலிலுள்ள விதி, கட்டுப்பாடுகளில் அதிருப்தியும் உண்டாக்கியிருக்கிறது. இருப்பினும் அவர்கள் சோர்ந்து போய், செயலாற்றாமல் இருந்துவிடவில்லை. மஜ்ஹாக் சுல்தானி என்ற பஞ்சாயத்து தலைவர் திரு பிரிஜ்லால், 58 வயதுள்ள ஒரு முன்னாள் மேஜர். தன்னுடைய வளர்ச்சித் திட்டங்களெல்லாம் மேலிடங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையென்றும், வேறு சில திட்டங்கள் தாமதமாக்கப்படுகின்றன என்றும் வருத்தம் தெரிவித்தார். ஆனால் 'தானேத்' என்ற பஞ்சாயத்துத் தலைவரான திரு பகவான்தாஸ் [இவர் 38 வயது கண்டிராக்டர்] மிகவும் சந்தோஷமாகவே காணப்பட்டார்.

பொதுவாக நோக்கும்போது அவர்களிடையே மகிழ்ச்சி இல்லை. போதிய தண்ணீர், போக்குவரத்து வசதி பெரும்பாலான கிராமங்களில் இல்லை. தங்களுடைய திட்டங்களெல்லாம் உயர் மட்டத்தில் தள்ளிவைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது தவிர வேறெதையும்அவர்களால் செய்வதற்கில்லை. நான் ஹமீர்பூருக்குச் சென்றபோது அங்கே கோரவரட்சி நிலைமை வியாபித்திருந்தது.

மஜ்ஹாக் சுல்தானி, லம்புலூ தாலோட், மாட்டிடிரா, சாவஹால், நார்சின், தானேத் ஆகிய 7 பஞ்சாயத்துக்களும் வட்டார அலுவலகத்திலிருந்து அதிக தூரத்தில் இல்லை. ஆனால் போக்குவரத்து வசதி சரிவர இல்லாததன் விளைவாக, இந்த பஞ்சாயத்து மக்களுக்கு, வட்டார அலுவலர்களால் தேவையான உதவிகளைச் செய்யமுடியவில்லை.

## முதல் பஞ்சாயத்து

வானம் பார்த்த பிரதேசமாக உள்ள இப் பஞ்சாயத்துக்களுக்கு மழை நீரே உயிர் நாடி. விவசாய உற்பத்தி பெருகியிருந்தாலும் கூட வாழ்க்கை வளம் பெறும் அளவிற்கு அங்கே உற்பத்தி உயரவில்லை என்றே கூறவேண்டும். மஜ்ஹாக் சுல்தானியிலுள்ள கிராமசேவக்கின் கணக்குபடி விவசாய உற்பத்தி 25 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் பஞ்சாயத்திற்கு ஆண்டு வருமானமாக ரூ. 400 தான் கிடைக்கிறது.

மஜ்ஹாக் சுல்தானியில் குடிநீர் வசதியுமில்லை, மின்சார வசதியுமில்லை. பஞ்சாயத்து யூனியன், ஜில்லா பரிசத்திற்கு ஒரு திட்டத்தை அனுப்பி வைத்ததாகவும், அங்கே அது தாமதப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

இங்கே ஓர் ஆரம்ப பள்ளி இருக்கிறது. ஆனால் இரண்டு மைல் தூரத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளி இருப்பதால், இந்த ஆரம்பப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்த முடியவில்லை. இதன் காரணமாக மஜ்ஹாக் சுல்தானியிலுள்ள குழந்தைகளெல்லாம் மிகவும் சிரமப்பட்டு உயர்நிலைப் பள்ளிக்கு சென்று வருகிறார்கள்.

பக்கத்து கிராமத்திலுள்ள கூட்டுறவு சங்கத்தையே அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

## மக்கள் உணர்வு

"மக்கள் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமாக நாங்கள் எதையும் செய்யாவிட்டாலும் அவர்களின் உணர்ச்சியை தூண்டி, கிராமத்தில் செயல்பட்டு வருவதெல்

லாம் அவர்களின் நன்மைக்கே என்பதை அறிய அவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளோம்" என்றார் திரு பிரிஜ்லால்.

### இரண்டாம் பஞ்சாயத்து

ஆனால் 'லம்புஹா' வின் கதையே வேறு. இதன் பஞ்சாயத்து தலைவரும் மாஜி சுபேதார் மேஜர்தான். கடந்த பதினாறு ஆண்டு காலமாக இவரே இந்த பஞ்சாயத்தின் தலைவர். லம்புஹாவில் குடிநீர், மின்சார வசதிகள் இல்லாவிடினும், இங்கே மூன்று துவக்கப் பள்ளிகளும், இரண்டு கூட்டுறவு சங்கங்களும் இருக்கின்றன. இங்குள்ள கிராமத் தொண்டர் படை (சுமார் 700 உறுப்பினர்கள்) எல்லா வளர்ச்சி வேலைகளிலும் ஈடுபட்டு செயலாற்றி வருகிறது. பழங்கால முறைப்படியே விவசாயம் நடைபெறறு வந்தாலும் பொறுக்கு விதைகள், உரங்கள் சிறிது சிறிதாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரசாயன உரங்களை உபயோகித்ததால், சோளத்தில் 25 சதவீதம் உற்பத்தி அதிகரித்துள்ளது.

### மூன்றாவது பஞ்சாயத்து

'தாலோட்' கிராமத்தின் மக்கள் தொகை, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டது. இங்கேயும் குடிநீர், மின்சார வசதிகள் இல்லை. விவசாயத்தில் நவீன முறைகள் கையாளப்பட்டதன் விளைவாக 35 சதவீதம் உற்பத்தி அதிகரித்துள்ளது. இங்கு வைத்திய வசதி இல்லை. பள்ளிகளும், தொழில்களும் இங்கே கிடையாது. ஆனால் ஒரே ஒரு துவக்கப் பள்ளியும், ஒரு முதியோர் கல்வி நிலையமும் இருக்கின்றன. மேலும் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுகின்றன. பஞ்சாயத்தின் ஆண்டு வருவாய் ரூ. 500 மட்டுமே.

### ஜவான்கள் கிராமம்

'மாட்டிடிரா' ஒரு குக்கிராமம். இங்குள்ளவர்களில் பெரும்பான்மையானவர் இராணுவத்தில் பணியாற்றுவதால், இங்கு வாழ்க்கை தரம் நல்ல நிலையிலிருக்கிறது. பக்கத்து கிராமத்திற்கு மின்சார வசதி கிடைத்து விட்டதால் இங்கேயும் அந்த வசதிக் கூடிய விரைவில் விரிவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே ஒரு துவக்கப் பள்ளி இருக்கிறது. ஆனால் வைத்திய வசதியோ, கூட்டுறவுச் சங்கமோ, கிராமத் தொண்டர் படையோ இங்கில்லை.

"விவசாயிகள் பழைய முறையிலேயே விவசாயம் செய்துவரினும், ரசாயன உரத்தை உபயோகிக்க அவர்கள் தயங்குவதில்லை. சோள உற்பத்தி 25 சதவீதம் அதிகரித்துள்ளது" என்று கூறினர், பஞ்சாயத்து தலைவர் திரு. ஹரிராம்.

### ஐந்தாவது பஞ்சாயத்து

சாவஹால் கிராமம், உணவுத் துறையில் சுயதேவையைப் பூர்த்தி செய்துக் கொண்டுவிட்டது. இங்கே நெல், கோதுமை, சோளம், உருளைக் கிழங்கு, காய்கறிகள் பயிராகின்றன. அனேகமாக எல்லா விவசாயிகளுமே நவீன முறைகளை கையாளுகின்றனர். நல்ல போக்குவரத்து வசதியும் இங்கே இருக்கிறது. பஞ்சாயத்து நல்ல சாலைகள் அமைத்து பக்கத்து கிராமங்களை இணைத்துள்ளது. பஸ் போக்குவரத்து இங்கே இருக்கிறது. இங்கேயும் வைத்திய வசதி, குடிநீர் வசதி மின்சார வசதி இல்லை. "குடிநீர்த் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது" என்றார் திரு ஆனந்தராம், பஞ்சாயத்து தலைவர்.

ஹமீர்பூர் வட்டாரத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிறது, 'நார்சின்' கிராமம். இந்த பஞ்சாயத்துத் தலைவரின் பெயர் திரு தகோர் பூமிதேவ்; கடந்த இருபதாண்டு காலமாக இவரே இப்பஞ்சாயத்தின் தலைவர். கடந்த ஐந்தாண்டுகளாக, ஹமீர்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கும் இவரே தலைவராவார்.

நார்சின் மக்கள் தொகை 3,500. விவசாயிகளெல்லோரும் திருந்திய முறையில் விவசாயம் செய்கிறார்கள்.

"நல்ல மழை பெய்து, போதிய அளவில் உரங்களும் கிடைத்தால் சோள உற்பத்தி 100 சதவீதம் அதிகரிக்கும். உண்மையிலேயே சென்ற ஆண்டு அவ்வாறு நடந்திருக்கிறது" என்றார் திரு தகோர் பூமிதேவ்.

நார்சினில் இரு துவக்கப்பள்ளிகளும், ஐந்து கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. இங்கே கூட மின்சார, குடிநீர் வசதிகள் கிடையாது. குடிநீர் வசதிக்காக, ரூ. 32 லட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது; ஆனால் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. இந்த திட்டத்தினால் 7 பஞ்சாயத்துக்களுக்கு நன்மை கிடைக்கும்.

### முடிந்ததை செய்வோம்

"சுய முயற்சியில் திடமான நம்பிக்கையுள்ளவர்கள் என் கிராம மக்கள்" என்று மகிழ்ச்சி ததும்ப கூறினர், திரு பகவான்தாஸ். இவரே தானேத் பஞ்சாயத்து தலைவர். "எந்த காரியத்திற்காகவும் நாங்கள் உயர்மட்ட அதிகாரிகளை எதிர் நோக்கியிருப்பதில்லை. எங்களால் செய்ய முடிந்ததை நாங்களே செய்துக் கொள்கிறோம். சான்றாக, ஒரு பஞ்சாயத்து கட்டிடத்தையும், 10 மைல் நீளச் சாலையையும், சிரமதானத்தின் மூலம் நிர்மாணித்துள்ளோம். எங்கள் கிராமத்தில் இரு துவக்கப்பள்ளிகள், ஒரு நடுத்தரப்பள்ளி, இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. குடிநீர் வழங்குவதற்காக நாங்கள் ஒரு திட்டத்தை நிறைவேற்றிவருகிறோம். யூனியனிலுள்ள கிராமங்களில் மூன்று கிராமங்களுக்கு தற்போது குடிநீர் வசதி கிடைத்துள்ளது. எஞ்சிய கிராமங்களுக்கும் சீக்கிரமே அவ்வசதி கிடைத்துவிடும்" என்றார் திரு பகவன்தாஸ்.

அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுமுன், அந்த ஏழு முகங்களையும் மீண்டும் ஒரு முறை உற்று நோக்கினேன். செயலாற்றும் திறன், மனத்திட்பம், வருங்கால சந்ததியினருக்கு செழிப்பான கிராமங்களை விட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணம் அவற்றிலே இழையோடு வதை என்னால் காணமுடிந்தது.

**என் கிராமம் 'தேலாக்'. இது ஹிமாசலப் பிரதேசத்தில் பிலாஸ்பூரிலிருந்து எட்டு மைல் தூரத்திலிருக்கிறது. 1947-ம் ஆண்டுக்கு முன்பு என் கிராமம்மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. சுதந்திரத்திற்குபின் திட்டங்கள் செயல்படத் துவங்கிய பின், என் கிராமம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகிறது.**

# என் கிராமம்

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, 1958-ம் ஆண்டு தான் எங்கள் கிராமத்திற்கு வானொலிப் பெட்டி அளிக்கப் பட்டது. அது பாடுவதைக் கண்ணுற்ற 70 வயது கிழவி "இந்த பாடகருக்கு நீங்கள் நன்றாக சாப்பாடு போட வேண்டும். எங்கிருந்து இவர் வந்திருக்கிறாரோ சப்தமாக பாடுகிறார். ஆனால் கண்படைவதாகக் காணோமே" என்று வியப்படைந்தாள். பிறகு வானொலிப் பெட்டியை அவருக்குக் காண்பித்து அது இயங்கும் முறையை அவருக்கு விளக்கிய பின், அந்த மூதியவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோ எல்லையே யிருக்கவில்லை.

### "உரத்தால் பயிர் நாசமாகும்"

அதே ஆண்டுதான் ரசாயன உரமும் இங்கே கொண்டுவரப்பட்டது. ரசாயன உரத்தைக் கண்ணுற்ற விவசாயிகளுக்கு முதலில் பயமே ஏற்பட்டது. அதை வயலில் இட்டால் பயிர் முழுவதும் நாசமாகிவிடும் என்று எண்ணினர். எனவே, அரசாங்கம் உரத்தை இலவசமாகவே வழங்கியது. இதனால் மகசூல் நான்கு பங்கு அதிகரித்ததை அனுபவத்தில் அறிந்த விவசாயிகள் உரத்தின் அவசியத்தைப் போற்றி, கிராமத்திலேயே உரக் கிடங்கு ஒன்றை ஏற்படுத்தினர். ஒரு கால் நடை மருந்தகம் திறந்து வைக்கப்பட்டது.

### வெளியுலக அறிவு

ஒரு முதியோர் கல்வி நிலையம் துவக்கப்பட்டு முதியோர்கள் கல்வியறிவு பெற்றனர். தங்களுடைய கிராமத்திற்கும் அப்பாற்பட்ட உலகம், பல்வேறு மக்களின் வாழ்க்கை சரித்திரம் போன்றவற்றை ஆவலுடன் அறியலாயினர்.

இது கழிந்த சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு துவக்கப் பள்ளியும் திறக்கப்பட்டது. பலத்த மழையின் காரணமாகப் பள்ளிக்கூடக் கட்டிடம் இருமுறை விழுந்து விட்டது. மக்களெல்லாம் ஒன்றுகூடி மூன்றாம் முறையாக பள்ளிக் கட்டிடத்தைக் கட்டி முடித்தனர். "கண்ட்ரோர் பாலம்" என்று அழைக்கப்படும் பாலம் ஒன்றையும் கிராமவாசிகளே நிறுவி, மக்கள் வெள்ளப் பெருக்குக் காலங்களில் படும் அவதியை ஒரு பழங்கதையாக்கினர். போக்குவரத்திற்கு இப் பாலம் பெரிதும் பயன்படுவதுமட்டுமின்றி, மக்களின் வறுமையை அகற்றவும் இது துணை நிற்கிறது.

குடிநீருக்காக, நீர் ஊற்றுகளை கிராமவாசிகள் நம்பி வாழ்ந்த காலம் கடந்து, குடி நீர் திட்டம் ஒன்று தீட்டப் பட்டு, குடி நீர் சுலபமாக எல்லோருக்கும் கிடைக்கிறது.

### அரசாங்க நிலம் விளை நிலமாயிற்று

கிராமவாசிகள் மிகவும் ஏழைகளாகவே இருந்தனர். சிறு சிறு நிலங்கள், பெருகிவரும் மக்கள் தொகை பெரும் பிரச்னையாக இருந்தன. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து, ஒவ்வொரு ஏழை விவசாயிக்கும் '10 பிகா' நிலங்கள் அளிக்கப்பட்டன. அவற்றை விவசாயிகள் விளை நிலங்களாக்கியுள்ளனர். விளைச்சல் இரு மடங்காகியுள்ளது. மக்கள் தொகை பெருகி வருவதை கண்ணுற்ற கிராம மக்கள், இப்போது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

என்னுடைய கிராமத்திற்கு இப்போது மின்சார வசதி கிடைக்கப்போகிறது. பெரும்பாலானவர்கள் தங்கள் வீடுகளில் மின்விசைக் கருவிகளைப் பொருத்தி மின்சாரத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர். மின் விசையின் உதவியைக் கொண்டு கிராமத்தில் தொழில்களை ஏற்படுத்தவும் திட்டங்களிருக்கின்றன.

### பஞ்சாயத்து கிடையாது

அறியாமையே ஆட்சி செலுத்திவந்த இக் கிராமத்தில், கல்வி கற்பதற்காக மாணவர்கள் எட்டு மைல் நடந்து பள்ளியை அடையவேண்டும். ஆனால் என் கிராமத்திற் கருகிலேயே இப்போது ஓர் உயர் நிலைப்பள்ளி திறக்கப் பட்டுவிட்டது. தகுந்த போக்குவரத்து வசதியும் இருப்பதால், எங்கள் குழந்தைகள் கல்வி பயில நல்ல வசதி ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சங்கம் தானியங்களை மலிவான விலையில் விற்பனை செய்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இங்கு பஞ்சாயத்து கிடையாது. இப்போது ஒரு கிராமப் பஞ்சாயத்து இருக்கிறது. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு பஞ்சாயத்து ஒரு கணிசமான தொகையை அளித்துள்ளது. அனேகம் பேர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். மக்களின் நலனுக்காக பஞ்சாயத்து சேவை செய்து வருகிறது.

### பெருமிதம்

கிராமத்திலுள்ள வீடுகளெல்லாம் நல்ல முறையில் கட்டப்பட்டவையல்ல. எனவே அரசாங்கம் ரூ. 26,500 மானியம் வழங்கியுள்ளது. இத் தொகையைக்கொண்டு கிராமவாசிகள் வீடுகள் கட்டிக்கொண்டுள்ளனர்.

என்னுடைய கிராமத்தின் தற்போதைய தோற்றம் எனக்குப் பெருமிதம் அளிக்கிறது. மற்ற கிராமங்களைப் போலல்லாமல் என் கிராமம் பின்தங்கிவிடுமோ என்று பயமுற்ற எனக்கு, என் கிராமத்தின் வளமான வாழ்வு மகிழ்ச்சியே அளிக்கிறது.

—தேவிந்தர் சிங்.

"எனக்கு இப்போது கிடைத்து வரும் ஒத்துழைப்பும் ஆதரவும் தொடர்ந்து கிடைத்து வருமானால் இந்த கோஹ்லி கிராமத்தையே ஒரு மாதிரி கிராமமாக மாற்றி விடுவேன்" என்று கூறினார், திரு பிரிக்ஷாட் சந்த்ரா; இவர் ஒரு கிராம சேவக்.

உற்சாகம் ததும்பிய அவரது முகத்தை நான் நன்கு கவனித்தேன்; அவர் வார்த்தைகள் வீண் பேச்சல்ல; அவை முற்றிலும் பொருள் பொதிந்தவை.

# நீதிமன்றமே செல்லாத மக்கள்

"எவ்வளவு நாட்களாக இந்தக் கிராமத்தில் இருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"சுமார் நான்காண்டு காலமாக" என்றார் அவர்.

"இந்த நான்காண்டு காலத்தில் என்னென்ன மாற்றங்களெல்லாம் ஏற்பட்டுள்ளன என்று தயவு செய்து கூறுவீர்களா?"

"அதற்கென்ன..சந்தோஷமாகவே கூறுவேன்."

ஆனால் பஞ்சாயத்துத் தலைவர் திரு துளசிராம் உடனே குறுக்கிட்டு, "அவற்றையெல்லாம் நாங்கள் சொல்வதைவிட தாங்களே நேரில் கண்டறிந்து கொள்வது மிகவும் பயனுள்ளது; நாங்கள் என்ன செய்துள்ளோம், என்னென்ன செய்து வருகிறோம் என்பதை அக்காரியங்களே தங்களுக்கு தெளிவாக எடுத்துக் காட்டும்" என்று கூறினார்.

"அவ்வாறு செய்வதானால் எனக்கும் மகிழ்ச்சியே" என்று பதிலளித்தேன் நான்.

கோஹ்லி கிராமம் ஹிமாசலப் பிரதேசத்திலுள்ள கங்க்ரா மாவட்டத்தின், கங்க்ரா வட்டாரத்திலேயே இருக்கிறது. இக்கிராமம் உன்னதமான முறையில் செயலாற்றி, அரும் பெரும் பணிகளை செய்துள்ளது என்பதை கேள்வியுற்ற நான், அக்கிராமத்தையே காண விரும்பினேன்.

கோஹ்லி கிராமம், வட்டார அலுவலகத்திலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்திலேயே இருக்கிறது. நாங்கள் ஜீப்பில் புறப்பட்டோம். இயற்கை வளம் நிரம்பிய பசுமையான இடங்களினூடே எங்கள் 'ஜீப்' சென்று கொண்டிருந்தது. செழித்தோங்கி வளர்ந்துள்ள நெற்பயிர்கள், ஜகதம்பா தேவியின் கோயில், கைவினைப் பொருள்கள் பயிற்சி நிலையம், ஒரு பழைய கோட்டை ஆகியவை இந்த ஆறு மைல் நீளச் சாலையில் முக்கியமாக குறிப்பிடத்தக்கவை.

* * *

"இவர்களெல்லாம் உங்களை வரவேற்கவே வந்திருக்கிறார்கள்" என்று கூறி, அவர்களை அறிமுகப்படுத்தினார் பஞ்சாயத்து அதிகாரி.

"நீங்களெல்லோரும் எனக்கு பிரமாதமான வரவேற்பளித்தீர்கள்; அதற்கு நான் தகுதியுடையவனேயல்ல; பத்திரிகை நிருபர் என்ற சாதாரண முறையிலே தான் இங்கு வந்திருக்கிறேன்; நீங்களெல்லோரும் கிராமங்களின் மறுமலர்ச்சிக்காக என்ன செய்து வருகிறீர்கள் என்பதை நேரில் காணவே இங்கு வந்துள்ளேன்" என்று என்னுடைய வருகையின் நோக்கத்தை அவர்களுக்கு தெரிவித்தேன்.

இதன்பிறகு என்னுடைய குறிப்புப் புத்தகத்தை எடுத்து திறந்து வைத்துக்கொண்டு கேள்விகள் கேட்க துவங்கு முன்னரேயே, திரு துளசிராம் மறுபடியும் குறுக்கிட்டு, கிராமத்தை சுற்றிப் பார்த்து வரலாம் என்று அழைத்தார்.

பஞ்சாயத்து அலுவலக கட்டிடத்தைப் பார்த்தேன். அது ஒரு விசாலமான கட்டிடம். பஞ்சாயத்தாலேயே கட்டப்பட்டது. அதன் ஒரு பகுதி உருளைக்கிழங்கு கிடங்காகவும் பயன்பட்டு வருகிறது. பிறகு என்னை கிராம பழத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். இத் தோட்டம் இரண்டு ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இங்கே மா, பலா, கொய்யா போன்ற பழ மரங்கள் பயிரிடப்படுகின்றன; இவையெல்லாம் பழங்களை தர துவங்கும்போது, பஞ்சாயத்தின் வருவாய் கணிசமாக உயரும் என்று நிச்சயமாக நம்பலாம்.

கோஹ்லி கிராமம் விவசாயத்தையே பெரிதும் சார்ந் திருக்கிறது. கிராமசேவக்கின் அயராத உழைப்பு, உற் சாகம் காரணமாக, விவசாயிகள் நவீன முறைகளையும் பொருக்கு விதைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றின் காரணமாக விவசாய உற்பத்தி 15 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தவிர கோதுமை, சோளம் உருளைக்கிழங்கு, காய்கறிகளும் பயிராகின்றன.

"இந்த ஆண்டு சுமார் ரூ. 10,000 வரை விவசாயி களால் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன" என்முர் கிராம சேவக்.

கோஹ்லிக்கு போதிய நீர்ப்பாசன வசதியில்லை. இயற்கை ஊற்றுக்கள் இங்கே அதிகமாகவே காணப் பட்டாலும், அவற்றை பயன்படுத்திக்கொள்ள எவரும் முழு முயர்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. நிலையான நீர்ப்பாசன வசதிக்கு ஒரு திட்டம் உருவாக்கப் பட்டுள்ளதென்றும், அது பரிசீலனையில் இருந்து வருகிறதென்றும் தெரிய வருகிறது. உரத்திற்கு அளிக்கப் பட்டு வந்த உதவித் தொகை திடீரென்று நிறுத்தப் பட்டு விட்டதால், விவசாய உற்பத்தியை அது சிறிது பாதித்துள்ளது என்று என்னுல் மேலும் அறிய முடிந்தது.

கூட்டுறவு இயக்கத்தால் விளையும் நன்மைகளை கோஹ்லி மக்கள் தெளிவாக அறிந்துள்ளனர். 200 உறுப்பினர் களைக் கொண்ட விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் இங்கே திறம்பட செயலாற்றி வருகிறது. விவசாயக் குடும்பங்களில் 70 சத வீதத்தினர் இச் சங்கத்தில் உறுப்பினர்களாயிருக்கின்றனர்.

"நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்குத் தொடர்ந்த எவரையுமே நீங்கள் இங்கு காணமுடியாது" என்று பெருமையுடன் கூறினுர் பஞ்சாயத்துத் தலைவர்.

"கிராமத்தின் நன்மைக்காக, கிராமவாசிகள் ஏதேனும் சிரமதானம் செய்துள்ளார்களா?" என்று நான் கேட்டேன்.

"செய்யாமலென்ன..சிரமதானத்தின் மூலம் சாலைகள் அமைத்துள்ளனர்; அவற்றை பழுது பார்த்திருக்கின்றனர்; சுமார் 1,392 மனித நாட்கள் சிரம தானம் செய்யப்பட் டுள்ளன" என்றுர், பஞ்சாயத்துத் தலைவர்.

பிறகு பள்ளிக் கட்டிடத்தை நோக்கிச் சென்றேம்

"இங்கு 264 குழந்தைகள் கல்வி கற்கின்றன. இவர் களின் பெற்றேர்களில் பெரும்பாலோர் எழுத்தறிவில் லாதவர்களே; அவர்களுக்கு நேர்ந்த துரதிருஷ்டம் குழந்தைகளுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதென்று, அதற் காக எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன; கூடிய விரைவிலேயே அறியாமை, எழுத்தறிவின்மை என்பன கோஹ்லியைப் பொறுத்தவரை ஒரு பழங்கதை யாகிவிடும்" என்று உணர்ச்சித் ததும்ப கூறினுர் பஞ்சா யத்து தலைவர். அவர்களிடமிருந்து பிரியா விடை பெற்று, திரு துளசிராம் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு புறப்படத் தயாரானேன்.

என்னுடைய உணர்ச்சிகள் மீண்டும் திரு துளசிராம அவர்களை பார்க்கத் தூண்டியது. அவரை வியப்புடனும மரியாதையுடனும் மீண்டும் நோக்கினேன்.

—'பஞ்சாயத்து ராஜ்' இதழ் நிருபர்.

## அடக்க விலைக்கே 'பம்பு செட்டு'கள் விற்பனை

—o—

உத்திரப் பிரதேச அரசாங்கம், விவசாயிகளுக்கு அடக்க விலைக்கே 'பம்பு செட்டு'களை விற்க முடிவு செய்துள்ளது. இப்போது மாநில அரசாங்கத்திற்கு சொந்தமாக ஆயிரம் 'பம்பு செட்டு'கள் இருக்கின்றன. இவையெல் லாம் ஆறுகள், ஓடைகள், குளங்களிலிருந்து நீரை இறைத்து, பாசனத்திற்கு உதவி, வரட்சி நிலையை போக்கி வருகின்றன.

5 குதிரை ஓட்ட சக்தியுள்ள (5 H.P.) ஒரு 'பம்பு செட்டு' மூலம், நீரை ஒரு மணி நேரம் பாசனம் செய்ய விவசாயிகள் தரவேண்டிய கட்டணம் ரூ. 3 மட்டுமே. இவ்வாறு மாநிலம் முழுவதும் 'பம்பு செட்டு'கள் மூலம் பாசனம் நடைபெறுவதால், 'பம்பு செட்டு'களின் உபயோகத்தை விவசாயிகள் நேரில் பார்த்து, அனுப வத்தில் அறிந்து கொண்டுள்ளனர். எனவே விவசாயி களெல்லாம் அவரவர்களுக்கு 'பம்பு செட்டு'கள் வேண்டுமென கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் செய்திருக்கின்றனர்.

இவ்விண்ணப்பங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு 'பம்பு செட்டு'களும், குழாய்களும் அடக்க விலைக்கே வினியோகிக்க வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

---

"இன்டென்சிவ் அக்ரி ல்சர்", "பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் : 15, 16, 17, 34 முதல் 38 வரை (8 பக்கங்கள்).

Articles reproduced from "Intensive Agriculture" on pages 15 and 16 and from "Panchayati Raj" on pages 17 and 34 to 38 (8 pages).

கிராமநலம் பகுதி 2 — GRAMANALAM PART 2

# பஞ்சாயத்து அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து, பஞ்சாயத்து வளர்ச்சி திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் இந்தப் பகுதியில் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

— o —

## 'சர்சார்ஜ்', அனுமதி மறுப்பு விஷயங்களில் தணிக்கையாளர்களின் அதிகாரங்கள்.

## Surcharge—Madras Panchayats Act, 1958—Powers of auditors in the matter of surcharge and disallowance—Term "Auditors"—Defined.

'சர்சார்ஜ்', அனுமதி மறுப்பு விதிகளில் (Surcharge and Disallowance Rules) விதி 5-ன் கீழ்—

(1) 1958-ம் ஆண்டு தமிழக பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், நகரப் பஞ்சாயத்துக்கள். நகரமைப்புக் குழுக்கள் ஆகியவற்றின் நிதிகள் சம்பந்தப்பட்டவரை, மேற்கண்ட விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்த, தல நிதி கணக்குகள் ஆய்வாளரையும் (Examiner of Local Fund Accounts);

(2) அவரவர்களின் அலுவல் வரம்பிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களின் நிதிகள் சம்பந்தப்பட்டவரையில், மேற்கண்ட விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்த, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் கோட்ட பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு, அரசு அதிகாரம் அளிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 19—1—1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 106-ன் சுருக்கம்.)

---

## திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் (இராமநாதபுரம் மாவட்டம்) அலுவலகத்திற்கு கட்டிடம்-உத்தரவுகள்-பிறப்பிக்கப்படுகின்றன.

## Building—Construction of Panchayat Union office building in Tiruppuvanam Panchayat Union in Ramanathapuram during 1966-67 Orders—Issued.

1966-67-ம் ஆண்டில் 22 ஊராட்சி ஒன்றியங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டவேண்டும் என்று அனுமதிக்கப்பட்டுள்ளதற்கு, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2276 மற்றும் அதேத் துறையின் 1966-ம் ஆண்டின் நவம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2623-ல், 15 ஊராட்சி ஒன்றியங்களே தேர்ந்தெடுக்கப்பட்டன.

கிழக்கு இராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டத்திலுள்ள, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்துக்கு அலுவலகக் கட்டிடம் கட்டும் வேலை, 1966-67-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, கிராம நல தல நிர்வாக துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2276 மற்றும் அதேத் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2623-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளைத் தொடர்ந்து, அரசு இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 24—2—1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 366-ன் சுருக்கம்.)

## சிறு சேமிப்பு திட்டம்—மாணவர்களுக்கு அளிக்கப்படும் ரொக்கப் பரிசுகளை தேசிய சேமிப்பு பத்திரங்களாக அளித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Small Savings Scheme—Award of cash prizes to students in the form of National Savings Certificates—Orders—Issued.

நகரங்கள், கிராமப்புறங்களில் "சிறு சேமிப்பு திட்டம்" என்ற பொருளில் தேசியப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்த, அதில் வெற்றி பெறுவோருக்கு, தேசிய சேமிப்பு பத்திரங்களை பரிசுகளாக வழங்கலாம் என்று 9—7—1965 அன்று கூடிய விளம்பர ஆலோசனை துணைக் குழுவில் (Publicity Advisory Sub-Committee) கருத்து தெரிவிக்கப்பட்டது. மாணவர்களுக்கு அளிக்கப்படும் ரொக்கப் பரிசுகளை தேசிய சேமிப்பு பத்திரங்களாகவே அளிக்கவேண்டும் என்று சென்னை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள், மற்றும் இதர கல்வி நிறுவனங்களை கேட்டுக்கொள்ளலாம் என்று மேலும் கருத்து தெரிவிக்கப்பட்டது. ரொக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளவற்றில், அதற்கு பதிலாக, தேசிய சேமிப்பு பத்திரங்களை பரிசுகளாக வழங்க, எந்த ஆட்சேபணையுமில்லை என்று, சென்னை பல்கலைக் கழகம் கூறியுள்ளது. இக் கோரிக்கையை 'சிண்டிகேட்' ஒப்புக்கொண்டுள்ளது என்றும், அதற்கேற்ப ரொக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டிய போட்டிகளிலெல்லாம், அதற்குப் பதிலாக தேசிய சேமிப்பு பத்திரங்களை பரிசாக வழங்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அண்ணாமலை பல்கலைக் கழகம் கூறியுள்ளது.

2. சிறு சேமிப்பு விளம்பர ஆலோசனைக் குழுவின் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப செகண்டரி பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் படிக்கும் மாணவர்களுக்கு, ரொக்கப் பரிசு அளிக்க வேண்டிய போட்டிகளிலெல்லாம், ரொக்கப் பரிசுகளுக்கு பதில், அப்பரிசுகள் "தேசிய சேமிப்பு பத்திரங்கள்" வடிவத்தில் வழங்கப்படவேண்டுமென்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 30-1-1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 81-ன் சுருக்கம்.)

---

# தமிழ் நாட்டில், 49 பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்களாக மாற்றம்

தமிழ் நாட்டில், 9 மாவட்டங்களைச் சேர்ந்த 49 கிராமப் பஞ்சாயத்துக்கள், 1967 ஏப்ரல் 1-ந் தேதி முதல் நகரப் பஞ்சாயத்துக்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

கிராம வளர்ச்சி நெறியாளரின் அறிவிப்பில் கண்டுள்ளபடி, நகரப் பஞ்சாயத்துக்களாக மாறும் பஞ்சாயத்துக்களின் விபரம் வருமாறு :—

| வரிசை எண். | பஞ்சாயத்தின் பெயர். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|---|
| 1. | விருகம்பாக்கம் | வில்லிவாக்கம் | செங்கல்பட்டு |
| 2. | மதுரவாயல் | வில்லிவாக்கம் | செங்கல்பட்டு |
| 3. | பாலகிருஷ்ணம்பட்டி | உப்பிலியாபுரம் | திருச்சிராப்பள்ளி |
| 4. | அரும்பாவூர் | வேப்பந்தட்டை | திருச்சிராப்பள்ளி |
| 5. | குரும்பாலூர் | பெரம்பலூர் | திருச்சிராப்பள்ளி |
| 6. | பூலாம்பாடி | பூலாம்பாடி | திருச்சிராப்பள்ளி |
| 7. | உப்பிலியாபுரம் | உப்பிலியாபுரம் | திருச்சிராப்பள்ளி |
| 8. | எஸ். கண்ணனூர் | துறையூர் | திருச்சிராப்பள்ளி |
| 9. | பி. தொட்டக்குறிச்சி | கரூர் | திருச்சிராப்பள்ளி |
| 10. | மருதூர் | குளித்தலை | திருச்சிராப்பள்ளி |
| 11. | பழைய ஜெயங்கொண்ட சோழபுரம். | கிருஷ்ணராயபுரம் | திருச்சிராப்பள்ளி |
| 12. | சத்துவாச்சேரி | வேலூர் | வடஆர்க்காடு |
| 13. | ஒடுகத்தூர் | அணைக்கட்டு | வடஆர்க்காடு |

| வரிசை எண். | பஞ்சாயத்தின் பெயர். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|---|
| 14. | காட்பாடி விஸ்தரிப்பு | காட்பாடி | வட ஆர்க்காடு |
| 15. | ஆதனூர் | வேண்ணந்தூர் | சேலம் |
| 16. | கருப்பூர் | ஓமலூர் | சேலம் |
| 17. | நங்கவல்லி | நங்கவல்லி | சேலம் |
| 18. | வனவாசி | நங்கவல்லி | சேலம் |
| 19. | கொங்கணபுரம் | கொங்கணபுரம் | சேலம் |
| 20. | ஆலம்பாளையம் | பள்ளிப்பாளையம் | சேலம் |
| 21. | பூலாம்பட்டி | இடப்பாடி | சேலம் |
| 22. | அரசிராமணி | சங்கரி | சேலம் |
| 23. | பாண்டமங்கலம் | கபிலமலை | சேலம் |
| 24. | விஸ்வநாதபேரி | வாசுதேவநல்லூர் | திருநெல்வேலி |
| 25. | திருப்புவனம் | திருவிடைமருதூர் | தஞ்சாவூர் |
| 26. | பூலுவபட்டி | தொண்டாமுத்தூர் | கோயம்புத்தூர் |
| 27. | வாடவல்லி | தொண்டாமுத்தூர் | கோயம்புத்தூர் |
| 28. | தொண்டாமுத்தூர் | தொண்டாமுத்தூர் | கோயம்புத்தூர் |
| 29. | வேம்பாளையம் | திருப்பூர் | கோயம்புத்தூர் |
| 30. | காஞ்சிகோயில் | பெருந்துறை | கோயம்புத்தூர் |
| 31. | கிழாம்பாடி | கொடுமுடி | கோயம்புத்தூர் |
| 32. | வெள்ளோட்டம்பரப்பு | கொடுமுடி | கோயம்புத்தூர் |
| 33. | கொல்லன்கோயில் | கொடுமுடி | கோயம்புத்தூர் |
| 34. | மொடக்குறிச்சி | மொடக்குறிச்சி | கோயம்புத்தூர் |
| 35. | வடுகபட்டி | மொடக்குறிச்சி | கோயம்புத்தூர் |
| 36. | ஆவல்பூந்துறை | மொடக்குறிச்சி | கோயம்புத்தூர் |
| 37. | சலங்கபாளையம் | மொடக்குறிச்சி | கோயம்புத்தூர் |
| 38. | ஹரியப்பன்பாளையம் | சத்தியமங்கலம் | கோயம்புத்தூர் |
| 39. | கொள்ளப்பாலூர் | கோபிச்செட்டிபாளையம் | கோயம்புத்தூர் |
| 40. | தென்கரை | பெரியகுளம் | மதுரை |
| 41. | வள்ளாளநதி | ஆண்டிபட்டி | மதுரை |
| 42. | நரசிங்கபுரம் | ஆண்டிபட்டி | மதுரை |
| 43. | எம். புதுப்பட்டி | கம்பம் | மதுரை |
| 44. | ஹனுமந்தம்பட்டி | கம்பம் | மதுரை |
| 45. | வீரபாண்டி | தேனி | மதுரை |
| 46. | கோடல்வாவி | ரெட்டியார்சத்திரம் | மதுரை |
| 47. | அகரம் | திண்டுக்கல் | மதுரை |
| 48. | கடத்தூர் | மொரப்பூர் | தர்மபுரி |
| 49. | பாப்பிரெட்டிபட்டி | பாப்பிரெட்டிபட்டி | தர்மபுரி |

---

## தமிழக அரசு பயணப்படி விதிகள்— தொட்டியத்திலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் பஸ் மார்க்கத்தை குறைந்த வழி போக்குவரத்தாக ஏற்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

## Madras Travelling Allowance Rules—Bus service between Thottiam and Tiruchirappalli - Recognised short route—Ruling under Madras Travelling Allowance Rule 20—Issued.

தொட்டியத்திலுள்ள ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்கள், மற்றும் இதர அரசாங்க அலுவலகங்கள், தொட்டியத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் பஸ் மார்க்கத்தை, அலுவலக காரியங்களுக்காக பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். தொட்டியம், திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களும், இரயில் மார்க்கத்தால் இணைக்கப்பட்டிருக்கவில்லை என்றும், ஆகவே, லால்பேட்டை குளித்தலை இரயில்வே நிலையங்கள் வழியாக தொட்டி

யத்திலிருந்து, திருச்சிராப்பள்ளிக்கு செல்வது ஒன்றே அங்கீகரிக்கப்பட்ட வழியாக இருக்கிறது என்றும் முறையிடப்பட்டுள்ளது. லால்பேட்டை இரயிலவே நிலையத்தை அடைய, காவிரி ஆற்றை பரிசில் கொண்டு கடக்க வேண்டியிருக்கிறது. வெள்ளப்பெருக்கு, மழைக்காலங்களில் தொட்டியம், லால்பேட்டைக்கு இடையில் பரிசில் செல்வதில்லை; கோடைக்காலங்களில் ஆற்றை நடந்து சென்றுதான் கடக்கவேண்டியிருக்கிறது; வேறெந்த பொது வாகன வசதியும் இல்லாததால், லால்பேட்டையை அடைவதற்கு சுமார் 2 மணி நேரமாகின்றது; அவ்வாறு சென்றும் கூட இரயில்வே நிலையத்தை அடையும்போது பெரும்பாலும் இரயில் போய்விடுகிறது. எனவே தொட்டியம், திருச்சிராப்பள்ளிக்கு இடையேயுள்ள பஸ் மார்க்கத்தையே அனுமதிக்கப்பட்ட ஒரு வழியாக அரசின் எல்லா துறைகளுக்கும் அங்கீகரிக்க வேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்துள்ளார்.

2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, தொட்டியத்திலுள்ள அலுவலகங்களில் பணியாற்றும் எல்லா அரசு அலுவலர்களின் பயணப்படி "கேட்பு" களுக்காக, தொட்டியத்திலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் பஸ் மார்க்கத்தை ஓர் அங்கீகரிக்கப்பட்ட வழியாக ஆக்கி, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 1966 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1387–ன் சுருக்கம்)

---

## அடிப்படை விதிகள், தமிழக அரசு பயணப்படி விதிகள்—அடிப்படை விதிகளின் கீழ் வேலையில் சேரும் காலம், தமிழக அரசு பயணப்படி விதிகளின் கீழ் அலுவல் இட மாற்றத்திற்குரிய பயணப்படியைப் பெறுதல்—விதிகள் தளர்த்தப்பட்டு, உத்தரவுகள் பிறப்பிக்கப் படுகின்றன.

## Fundamental Rules and Madras Travelling Allowance Rules—Admissibility of joining time under Fundamental Rules and transfer travelling allowance under Madras Travelling Allowance Rules—Liberalisation—Ordered.

தமிழக அரசு பயணப்படி விதிகளிலுள்ள (Madras Travelling Allowance Rules) விதி 77-ன்படி, ஓர் அரசாங்க அலுவலர், நான்கு மாதங்களுக்கு அதிகமாகாமல், சராசரி சம்பளத்திலிருந்தாவது அல்லது 120 நாட்களுக்கு மேற்படாதவாறு ஈட்டிய விடுப்பி (Earned leave)லிருந்தாவது, அலுவலுக்கு மீண்டும் திரும்புகையில், அவர் வேலை இட மாற்றத்திற்குரிய பயணப் படியை (Transfer Travelling Allowance) பெற, அவருக்கு தகுதியுண்டு. "அலுவலில் சேரும் காலம்" (Joining time) பற்றி, இதையொத்த விதித் துறை (Provision) யொன்று அடிப்படை விதிகளி (Fundamental Rules)லும் இருக்கிறது. அரசாங்க அலுவலர்கள், உடல் சுகக் குறைவு அல்லது இதர காரணங்களுக்காக, சில சமயங்களில் நான்கு மாதங்களுக்கு மேலும் விடுப்பு (leave) கோர வேண்டியுள்ளதென்றும், அதனல், விடுப்பு எத்தனை நாட்களாயினும், வைத்திய சான்றிதழ் (Medical Certificate) பேரில், விடுப்பு பெற்று மீண்டும் அலுவலுக்கு வருகிறவர்கள் "அலுவலில் சேரும் காலம்" மற்றும் "அலுவல் இட மாற்றத்திற்குரிய பயணப்படி"யைப் பெறும் வகையில், இப்போதுள்ள விதிகள் தளர்த்தப்பட வேண்டுமென்று முறையிடப்பட்டுள்ளது. எவ்வகை விடுப்பாக இருப்பினும், ஆறு மாதங்களுக்கு மேற்படாத விடுப்பிலிருந்து, மத்திய அரசாங்க அலுவலர், மீண்டும் வேலைக்குத் திரும்பும்போது, அவர் "அலுவலில் சேரும் காலம்" மற்றும் "அலுவல் இட மாற்றத்திற்குரிய பயணப்படி" ஆகியவற்றிற்கு தகுதியுடையவராகிறார். இந்திய அரசாங்கத்தைப் போன்றே, மாநில அரசும், அரசாங்க அலுவலர்கள் விடுப்புக்களை சேர்த்து வைத்துக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 120 நாட்கள் வரம்பை, 180 நாட்களுக்கு, 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் உயர்த்தியுள்ளது. இவ்விஷயத்தில் கூட, இந்திய அரசாங்கத்தைப் போலவே, மாநில அரசும் "அலுவலில் சேரும் காலம்" மற்றும் "அலுவல் இட மாற்றத்திற்குரிய பயணப்படி"யைப் பெறுவதற்கு, எவ்வகை விடுப்பாக இருப்பினும், ஆறு மாதக் காலத்திற்கு மேற்படாத விடுப்பு அனுமதிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. எனவே, ஆறு மாதங்களுக்கு மேற்படாத எவ்வகை விடுப்பிலிருந்தும், அருகிலுள்ள இடத்திற்குத் திரும்பிச் செல்ல, எல்லா அரசாங்க அலுவலர்களும், "அலுவலில் சேரும் காலம்" மற்றும் "அலுவல் இடமாற்றத்திற்குரிய பயணப்படி" ஆகியவற்றைப் பெற, இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து, தகுதியுடையவராவார்கள் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

அடிப்படை விதிகளுக்கும், தமிழக அரசு பயணப்படி விதிகளுக்கும் தேவையான திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

(நிதித் துறையின் 1966 ம் ஆண்டு நவம்பர் மாதம் 22–ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1309.)

## சமுதாய வளர்ச்சித் திட்டம்—அலுவலக நடைமுறை—சோதனை செய்தல்—ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்கள்—வினுப்பட்டியல்—நிர்ணயித்தல்.

## Community Development Programme—Office procedure—Inspection—Panchayat Union Offices—Questionnaire—Prescribed.

வட்டார வளர்ச்சி அலுவலகங்களை சோதனை (Inspection) செய்வதற்காக, 'வினுப்பட்டியல் (Questionnaire) ஒன்றை, பொதுத் (கிராம அபிவிருத்தித் திட்டங்கள்) துறையின் 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1634—ல், அரசு நிர்ணயித்தது. ஊராட்சி ஒன்றியங்கள் நிறுவப் பட்டுள்ள தன் விளைவாக ஏற்பட்டுள்ள புதிய அமைப்பில், அந்த வினுப்பட்டியலை திருத்த வேண்டிய அவசியமேற் பட்டுள்ளது.

2. அதற்கேற்ப, அந்த வினுப் பட்டியலை அரசு திருத்தி, இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அந்த வினுப்பட்டியலானது, ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்கள் சோதனை செய்யப்படும் போது பின்பற்றப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறது.

### இணைப்பு

இணைப்பிலுள்ள வினுப்பட்டியலில் கீழ்க்கண்ட பிரிவுகள் அடங்கியுள்ளன:—

பாகம் 1: அ. அலுவலக வினை செயல் வகை (Office Routine).

பாகம் 1: ஆ. ஊராட்சி ஒன்றியம் மன்றங்களின் நிர்வாகம்.

பாகம் 2: கணக்குகள்.

பிரிவு—அ. கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு நிதிகள்.

பிரிவு—ஆ. கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு நிதியில்லாத, ஊராட்சி ஒன்றியம் கணக்குகள்.

பிரிவு—இ. பல்வகை.

பாகம் 3: வளர்ச்சி வேலைத் திட்டங்கள்.

(இவ் வினுப்பட்டியல் 22 பக்கங்கள் கொண்டது. இவ் வாணை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்பப் பட்டுள்ளது. அதில் மேலும் விவரங்களைக் காண்க.)

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 2–8–1966 தேதியிட்ட அரசு ஆணை எண் 1894ன் சுருக்கம்)

---

## ஓய்வூதியம்—பிரத்தியேக ஓய்வூதிய விதிகள்—விதிகள் 10, 12 மற்றும் அட்டவணை III—திருத்தங்கள்—வெளியிடப்படுகின்றன.

## Pension—Extraordinary Pension Rules—Rules 10 and 11 and Schedule III—Amendments—Issued.

தமிழக அரசு பிரத்தியேக ஓய்வூதிய விதிகளின் (Extraordinary Pension Rules, Madras)படி, ஓர் அரசு அலுவலர் "ஆபத்து"/"அலுவலகத்தின் விசேஷ ஆபத்து" ('Risk/Special risk of Office) காரணமாக இறந்துவிட்டால், அவரின் மனைவி (Widow), ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை (Gratuity)யைப் பெற, அவருக்குத் தகுதியுண்டு. இம்மாதிரியான சூழ்நிலையில், ஒரு பெண் அரசு அலுவலர் இறந்து விட்டால், அவரின் கணவருக்குள்ள (Widower) தகுதி பற்றி, ஒரு பிரச்னை எழுப்பப்பட்டுள்ளது. ஒரு பெண் அரசு அலுவலர், "ஆபத்து/"அலுவலகத்தின் விசேஷ ஆபத்து" காரணமாக இறந்துவிட்டால், அவரின் கணவருக்கு (Widower) அவர் இறக்கும் வரை அல்லது மறுமணம் செய்து கொள்ளும்வரை—குடும்ப ஓய்வூதியம் (Family Pension) அளிக்கப்பட வேண்டுமென், இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்தை யொட்டி, தமிழக அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(2) ஒரு "தாயில்லாக் குழந்தை" பெறக்கூடிய சலுகைகள்—அக் குழந்தையின் தாய், தந்தை இருவரும் இறந்து விட்டாலன்றி—அக் குழந்தையின் தாய் மட்டும் அரசு அலுவலராய் இருந்து, இறந்துவிட்டால் கிடைக்காது என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்திருப்பதை போன்றே, மாநில அரசும் ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(நிதித் துறையின் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ந் தேதியிட்ட அரசு ஆணை எண் 1320-ன் சுருக்கம்.)

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

## (1967—மே—15—தேதியிலிருந்து—ஜூன்—15—தேதி வரையிலும்)

[சென்னை, திருச்சி, நெல்லை, கோவை வானொலி நிலையங்களிலிருந்து கிராம நிகழ்ச்சிகள் தினசரி இரவு 7–30 மணியிலிருந்து 8 மணிவரை ஒலிபரப்பாகின்றன.]

15—5—67 (திங்கள்) 1. பண்ணைச் செய்தி. 2. மலைகளில் முடடைகோஸ், காலிபிளவா சாகுபடி—உரையாடல்.

16—5—67 (செவ்வாய்) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. மண் பரிசோதனையின் அவசியம். பேச்சு—திரு சி. கே. ராஜகோபாலன்

17—5—67 (புதன்) 1 கேந்திர கிராம கால்நடைப் பகுதி—கிராமங்களில் புல் வளர்ப்புத் திட்டம்—உரையாடல்.

18—5—67 (வியாழன்) 1 பண்ணைச் செய்தி. 2. சம்பாவிற்கு தழை உரம் தயாரிப்பது எப்படி—உரையாடல். 3. பேட்டி.

19—5—67 (வெள்ளி) 1. புழைக் கடைத் தோட்டம் காய்கறி சாகுபடி பற்றிய குறிப்புகள்.

கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில்.

3. வீரிய ஒட்டுக் கம்பில் புதிய நோய்—டாக்டர் சி. வி. கோவிந்தசாமி பேச்சு.

20—5—67 (சனி) 1. விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள். 2. குறைந்த நெல் விதை—தரமான நாற்று—உரையாடல்.

21—5—67 (ஞாயிறு) 1.கோ. 8. ராகி பயிர் செய்தல்—உரையாடல். 22—5—67 (திங்கள்) 1. பண்ணைச் செய்தி. 2. பாண்டிச்சேரி அரசாங்கம் விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகள்—உரையாடல்.

23—5—67 (செவ்வாய்) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில் 2. வெளி நாடுகளுக்கு அனுப்ப மொரிஷஸ் வாழை. திரு ஆர். வைத்தியநாதன் பேச்சு.

24—5—67 (புதன்) 1. வட நாட்டில் நான் கண்ட கருமபு சாகுபடி முறைகள்—திரு எம். வேலாயுதம் பேச்சு.

25—5—67 (வியாழன்) 1. பண்ணைச் செய்தி. 2. கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் சாகுபடி.

26—5—67 (வெள்ளி) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. கோடையில் விளையும் காய்கறிகள். திரு கே. விநாயகம்—பேச்சு.

27—5—67 (சனி) 1. விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள். 2. பண்ணைகளில் இயந்திரங்களால் நன்மைகள்.

28—5—67 (ஞாயிறு) 1. ஆடுதுறை 27—நெல்—உரையாடல்.

29—5—67 (திங்கள்) 1. பண்ணைச் செய்தி. 2. மல்லிகைச் சாகுபடி.

30—5—67 (செவ்வாய்) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. கால்நடைகளைத் தாக்கும் முக்கிய தொத்து நோய்களும், தடுப்பு முறைகளும்—டாக்டர் அந்தோணி—பேச்சு.

31—5—67 (புதன்) கால்நடைகளுக்குப் பசும் புற்கள்—உரையாடல்.

1—6—67 (வியாழன்) 1. பண்ணைச் செய்தி 2. மாதச் சாகுபடிக் குறிப்புகள்—உரையாடல்.

2—6—67 (வெள்ளி) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2 தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தில்—சாகுபடித் தேவைகளை ஒதுக்கீடு செய்தல்—பேச்சு.

3—6—67 (சனி) 1. விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள். 2. குறுவைக்கு நாற்றங்கால தயாரிப்பு—உரையாடல்.

4—6—67 (ஞாயிறு) 1. தென் மாவட்டங்களில் ஒரு புதிய களை.

5—6—67 (திங்கள்) 1. பண்ணைச் செய்தி. 2. களர் நிலத்திற்கேற்ற நெல் வகைகள்—உரையாடல்.

6—6—67 (செவ்வாய்) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. பல்வேறு ரசாயன உரங்களின் உபயோகங்கள்—பேச்சு.

7—6—67 (புதன்) 1. சி. எஸ். எச். 2. சோளம் பயிரிடுங்கள்—பேச்சு.

8—6—67 (வியாழன்) 1. பண்ணைச் செய்தி. 2. ஒரு போக சம்பா நிலத்தில் இரு போகம்—உரையாடல்.

9—6—67 (வெள்ளி) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. உணவு உற்பத்தியில் காய்கறிகள்—பேச்சு.

10—6—67 (சனி) 1. விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள். 2. ஒரே விதைப்பில் இரண்டு அறுவடைகள்—உரையாடல்.

11—6—67 (ஞாயிறு) 1. மண் பரிசோதனை நிலையங்கள்—உரையாடல்.

12—6—67 (திங்கள்) 1. பண்ணைச் செய்தி. 2. சப்பை நோய்—உரையாடல்.

13—6—67 (செவ்வாய்) 1. கிராம ரேடியோ மன்றம்—கேள்வி பதில். 2. சிறந்த தீவிர கால் நடைத் திட்டமும் அதன் பலன்களும்—பேச்சு.

14—6—67 (புதன்) 1. மானாவாரிக்கு ஏற்ற நெல் ரகம்—உரையாடல். 2. விவசாய செய்திச் சுருள்.

15—6—67 (வியாழன்) 1. பண்ணைச் செய்தி. 2. சாகுபடிக்குத் தேவையான கடன் வசதி—உரையாடல்.

---

## இந்த இதழில்


| | பக்கம் |
|---|---|
| தமிழ் அன்னைக்கு ஒளி மகுடம் .. | 1 |
| வாங்கிச் சாப்பிடும் ஏழைகளின் குறை அகற்றுவதே அரசின் முக்கிய கடமை .. | 4 |
| நீதி மன்றங்களில் தமிழ் .. .. | 7 |
| ஓராண்டு கால அரும்பணி .. .. | 9 |
| ஏற்றமிகு எழுச்சி .. .. .. | 25 |
| விருது பெற்ற ஆசிரியர்கள் .. .. | 30 |


## அடுத்த இதழில்...

வாப்புயர வாழ்வுயரும்

மழலை மொழி—தொடர்ச்சி.

---


வெளியிடுபவர் :

திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :

திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Secretary to Government, Rural Development and Local Administration Department and Director of Rural Development (in-charge), Madras-9.